Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

19 - 25. 9.1993 ரூபா 8/50

දිනමුරසු වාරමලර්

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 17

## அமிர்தலிங்கம் கொலை புலிகளின் திடீர் அறிவிப்பு!

எக்ஸ்ரே ரிப்போர்ட்



சிக்கலான சமாதானம்

உலக ரவுண்டப்

தப்பி ஓடினான் வௌவால் பையன்!



நகர ரவுண்டப்

ஒற்றன்

சிறுகதைகள்

பாப்பா முரசு

லேடீஸ் ஸ்பெஷல்

ரஜினியின் அட்டகாசமான ''டத்தோ, சினிவிசிட்

காதலியின் மணிக்கட்டில் இரத்தம் குடித்த பாடகர்!

தன்கையை தானே சாப்பிடும் ஏழுவயதான சிறுமி

மற்றும் பல வியப்பான செய்திகள்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
நண்பர் ஒருவரோடு
பேசிக் கொண்டிருக்கையில் கேட்டார்
"முரசை வாழ்த்தும் கடிதங்களை
வாசகர்சாலையில்
வெளியிடுவது போல
வசைபாடும் கடிதங்கள் ஒன்றிரண்டை
வெளியிட்டு
எதிர் விமர்சனத்துக்கும் இடம் கொடுப்பதாகக்
காட்டலாமே" என்றார்.

விமர்சனத்துக்கு இடம் கொடுப்பதாக
விளம்பரம் காட்டிக் கொண்டு
விமர்சனத்தில் உள்ள கருத்தை
புறந்தள்ளிவிடுவதே பொதுப்பண்பாகியிருக்கிறது.

ஆனால்-முரசைப் பொறுத்தவரை
கருத்தில் எடுக்கப்பட வேண்டிய
விமர்சனங்களுக்கு களம் கொடுக்கும்.
அந்தக் கருத்துக்களையும் கவனத்தில் கொள்ளும்.
இங்கே விமர்சிக்க ஆட்கள் இருக்கிறார்கள்.
தட்டிக் கொடுக்கவும்
தலை உயர்த்தும் புதிய சக்திகளை
கட்டியணைத்து வரவேற்கவும்
ஆட்கள் பற்றாக்குறையாக இருக்கிறார்கள்.

அடுத்தவன் திறமையைப் புகழவும்
பரந்த மனம் வேண்டும்.
சிறந்த எண்ணம் வேண்டும்.
பலவீனமானவர்கள்
பரந்த மனதை இழந்துவிடுகிறார்கள்.
புகழ்ந்தால்
எங்கே, தங்கள் நிறை குறைந்து விடுமோ
என்று கவலைப்படுகிறார்கள்.
மனப்பானைகள் வெறுமையாகியிருப்பதால்
வார்த்தை அகப்பைகளிலும்
வலுவான எண்ணங்கள் வருவதில்லை.

புகழப்பட வேண்டியவற்றை புகழ்வதும்
வரவேற்கப்பட வேண்டியவற்றை வரவேற்பதும்
சாதாரண விசயம் அல்ல.
நமது வாசகர்கள் அதைத்தான் செய்கிறார்கள்.
சந்தோசங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.
தங்கள் பேரன்பை வெளிப்படுத்துகிறார்கள்.
■

"இனப்பிரச்சனையே இங்கில்லை"
இது நமது ஜனாதிபதி
உறுதியோடு கூறிவரும் கருத்தாகிவிட்டது.
ஜனாதிபதியின் பேச்சிலே
இனவாதம் தொனிக்கவில்லை.
இன ஐக்கியம் பற்றியும் கூறிவருகிறார்.
ஆனால்-
இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும்
மனம் திறந்த முயற்சிகளுக்கு

ஜனாதிபதியின் கருத்து
பொருத்தமற்றதாக மாறியிருக்கிறது.
சூக்கமாகவும் அமைந்திருக்கிறது.

இன ஐக்கியம் என்பது
வார்த்தைகளால் மட்டும் உருவாக்கப்படுவதில்லை.
அதற்கான தளம் உருவாக்கப்பட வேண்டும்.
இனவாதமும் இடைவிடாத யுத்தமும்
உடைத்துப் போட்டுள்ள
அந்தத் தளத்தை கட்டியெழுப்ப
விருப்பங்களை மட்டும் வெளியிட்டால் போதாது.
செயல் பூர்வமான நடவடிக்கைகள் அவசியம்.

அதற்கு முன்னர்-
பிரச்சனைகளைப் புரிந்து கொள்வதும்
அதன் அடிப்படைகளை தெரிந்து கொள்வதும்
தீர்வுகளுக்கான
தேடல்கள் நீடிக்காமல் இருக்க உதவும்.
தேவையற்ற இரத்தம் சிந்தல்களைத் தடுக்கும்.

இதுவரை கால அனுபவங்களில் இருந்து
படிப்பினைகளை பெற்றுவிட தவறுவோமானால்
மலையில் தலையை மோதிக் கொண்டே இருப்போம்.
சுடர்மிகு எதிர்காலம் கனவாகவே இருக்கும்.
■

மீண்டும் மறு மடலில்
வந்து கலக்கும் வரை
அன்புடன்
ஆசிரியர்.

தினமுரசு
போன்:
820265

## கவிதைப் போட்டி இல-14

களம் வந்தவற்றில்
பரிசு வென்ற
கவிதையும்-
திறம் காட்டியவற்றில்
சிலவும்!

### பரிசுக்குரிய கவிதை

**தருவது யார்?**
தட்டில்
உணவுகளை,
தயவுள்ளோர்
தந்து விட்டார்!
துப்பாக்கி
பறித்துவிட்ட
பெற்றோரை..
யார் தருவார்?
ஏ. அஹமது ஜுனைது
ஏறாவூர்-06.

ஏனிந்த துயரமது
காலத்தின் கோலமிது
கவலைகளின் துயரமிது
வீதிக்கு வந்தாலும் நம்
வயிற்றுப் பசி தேயாது.
தெ. லோஜனா
கொழும்பு-15.

பொருளாதாரத்
தடையைத் தாண்டி
கிளாலி கடலில்
உயிர் போகும்
நிலையைத்
தாண்டி
கொண்டுவந்தது.
கொஞ்சம்
நிம்மதியாய்
உண்ணவிடுங்கள்.
செ. ஆனந்தராஜா
கொழும்பு-11.


நிகழ் காலம்
போர் வெறி பிடித்த
இவ்வுலகத்திலே
தெருவுக்கு வந்தது
நீங்கள் மட்டுமல்ல
மனிதர்களாகிய
நாங்களும்தான்!
வீ. நக்கீரன்
கொழும்பு-15.

நன்றி
நன்றிகெட்ட
மனிதரைவிட
நன்றியுள்ள
இவைகள் மேல்
எம். டி. எம். சைலாஸ்
கம்மல்துறை.

ஏழ்மை
ஆறறிவும் ஐந்தறிவும்
ஏழ்மையால்
ஒன்றுகூட இணக்க
ஒப்பந்தம் செய்து
கொண்டனவோ?
மை. பன்னீர்
இராகலை

அஞ்சும் ஆறும்
அஞ்சு மோப்பம் பிடிக்க
ஆறு ஏப்பம் விடுகிறது.
எம். ஜீ. எம். ஆசாத்
கொழும்பு-10.

## கவிதைப் போட்டி இல-17



மேல் உள்ள அற்புதமான புகைப்படம் உங்கள் உள்ளத்தில் விதைத்திருக்குமே எண்ணங்களை! அவற்றை மடலிலே பதிவு செய்து அனுப்புங்கள். (25.9.93க்கு முன்பு) சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

-முகவரி-
கவிதைப் போட்டி இல:17
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு -5

**வேட்டை**
வறுமைக் காடுகளில்
வேட்டையாடும் இளவரசன்......
மேகக் கோப்பையில்
தொலைந்துபோன
சோற்றுப் பருக்கை நட்சத்திரங்களை
தேடும் வேட்டை.....
அட, கூட இருப்பது யார்?
ஓ....
இவர்களைத் தவிர யாரை நம்புவது.
குகன். பி
கொழும்பு-12.



**அல்லல்படும் உள்ளங்கள்**
ஒரு வாய்ச் சோறாவது கிடைக்காதா என
அல்லல்படும் வாயுள்ள ஒரு உள்ளம்!
ஒரு பருக்கையாவது கிடைக்காதா என
அல்லல்படும் வாயில்லா இரு உள்ளம்!
செல்வன் பொ: உதயணன்
மட்டக்களப்பு.

மகனே பசி உனக்கு மட்டுமல்ல
புவன உயிர்களுக் கெல்லாந்தான்.
அவனியைப் படைத்தவன் அறிவானா
கனிவாய் உயிர்களுக்கன்பு செய்.
ரேவதனி - சுந்தரலிங்கம்
திருகோணமலை.

**பயிற்சி**
தம்பி!
நாளைய கானக வாழ்க்கைக்கு
இன்றே தனிமைப் பயிற்சியா?
பாலு- புத்தளம்.

"உண்டியுண்டு என்பசிக்கு
உற்ற துணையிரண்டு
என் காவலுக்கு
பெற்ற அன்னையுமில்லை
பேணிவளர்ந்த
இயற்கையும் விடியலை
அழைக்கிறது."
-அமிர்த-சந்திரபாலன்-
திருகோணமலை.

## அட... அல்பம் ரெடி நீங்கள் ரெடியா?

*உங்களிடம் கமரா இருக்கிறதா? இருந்தால் இப்போதே புறப்படுங்கள். உங்கள் சூழலில் கண்ணில் படும் வியப்பான - வித்தியாசமான காட்சிகளை கமராச் சிறைக்குள் மடக்குங்கள். பத்திரமாய் எமக்கு அனுப்புங்கள். சிறந்தவை பின் அட்டையில் 'அட.... அல்பம்' பகுதியில் இடம்பெறும். கலர் படங்களே விரும்பப்படுகின்றன.*

முகவரி-
அட...அல்பம்
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு -5.

# வாசக(ர்)சாலை

நேசம் சுமக்கும் மடல்....

ஒன்றரை மாதங்களின் பின்பு நேசம் சுமந்து வரும் எனது மடல்.

க.பொ.த உயர்தரப்பரீட்சை காரணமாக எனது ஆக்கங்கள் அனுப்புவதை இடைநிறுத்தி இருந்தேன். இப்போது பரீட்சை முடிந்தமையால் மீண்டும் அனுப்புகிறேன்.

தினமுரசு யாரும் எவரும் எதிர்பார்த்திருக்காத அளவு பெருந்தொகையானோரின் ஆதரவை பெற்றிருப்பது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது.

தினமுரசால் எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட கசட் இரு வாரங்களுக்கு முன்பு கிடைக்கப்பெற்றேன். மகிழ்ச்சி. பரிசு சிறிது. ஆனாலும் திறமைக்கு கிடைத்தது என் கையில் இமயத்தை விட பெரிதாக தெரிகிறது.

அ. ரஜீசன்-கொழும்பு-14.

•

நான் தினமுரசு வார மலரை தொடர்ந்து வாசித்து வருகின்றேன். அதில் அடங்கியுள்ள அத்தனை அம்சங்களும் வாராவாரம் புதுமையூட்டும் விதத்தில் அமைகின்றன. அதையிட்டு முதற் கண் ஆசிரியருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் மிக முக்கியமான விடயம் ஒன்றைப் பற்றி இச் சிறு மடலை வரைகின் றேன். தயவு செய்து இதற்கு கட்டாயம் உங்களது பதிலை எதிர் பார்த்த வண்ணம் இருப் பேன். விடயம் யாதெனில் நான் இம் மாதம் 30ம் திகதி வெளிநாடு செல்ல உள்ளேன். நான் வெளி நாடு சென்றால் தொடர்ந்து தினமுரசு வார மலரைப் படிக்க முடியாத நிலமை ஏற்படும். ஆகவே நான் அங்கிருந்து கொண்டு உங்கள் வார வெளியீட்டை பெற்றுக் கொள்வதற்கு ஒரு வருடத்திற்கான பணம் செலுத்தினால் அனுப்பி வைப்பீர்களா என்பதை உடன் அறிவிக்கவும். உங்களால் முடியும் என்றால் நான் வெளிநாடு சென்றவுடன் உங்களுடன் தொடர்பு கொள்கின்றேன். தினமுரசு அபிமானி என்ற முறையில் மிகவும் பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன். தயவு செய்து கீழ் உள்ள முகவரிக்கு முடியும் அல்லது முடியாது என்பதை அறிவிக்கவும்.

எஸ். எம். இம்ரான்- முருதலாவ.

*உங்கள் ஆர்வம் நன்று. அதனால் சிரமம் பாராது விருப்பம் பூர்த்தி செய்வோம். (ஆர்)*

•

அன்பின் தினமுரசு வாரமலரே, உன் ஆரம்பம் கண்டேன்.
அளவிலா ஆனந்தம் கொண்டேன்.
தெளிவுரு அச்சு-அழகிய முகப்பு
தெள்ளிய கருத்துக்கள்-தேன்சுவை ஆக்கங்கள்.
தித்திப்பாய் பருகினோம்- பருகுவோம்.
எனவே தொடர்ந்து உன் சேவை நிலைத்து வாழ எனது வாழ்த்துக்கள்.

நியாஸத் பறக்கத்துல்லா, மல்லவப்பிட்டி-குருநாகல்.

•

அன்பின் வாரமலரே! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் தேனினும் சுவையானவை. பிரதி வெள்ளி தோறும் உன்னைக் கண்டாலே என் மனதிற்கு நிம்மதி. மேலும் மேலும் உன் வளர்ச்சிக்கு எனது பாராட்டுக்கள் பல.

வேலு-இருளாயி-பலாங்கொடை.

•

*அன்பின் முரசே!*
ஆலமரம் போல் நீ வாழ்க.
அதில் என் போன்ற ஆயிரமாயிரம்
வாசகர்கள் இளைப்பாற
காலமகள் உன்னைத் தாலாட்ட
கலை உள்ளங்கள் உன்னைப் பாராட்ட
புதுப் பொலிவுடன் என்றும் மலர
வளர
என் வாழ்த்துக்கள்.

து. சர்மிளாதேவி-கலஹா.

•

*29.08.93* தினமுரசு வாரமலர் தேன் கிண்ணம் பகுதியில் ரகு என்பவரால் எழுதப்பட்ட "முரண் பாடுகள்" என்ற கவிதை "கோகுலம்" என்ற திரைப்படத்தில் இருந்து காப்பியடிக்கப்பட்டதாகும்.

இனிமேல் இப்படிப்பட்ட போலிகளுக்குத் தங்கள் பத்திரிகையில் இடமளிக்க வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சு. உமா.

*அந்த ரகுவை முரசு இனி புறக்கணிக்கும். (ஆர்)*

•

அறிவுக்கு உரமூட்டும் உன் பதிப்புக்கள்
ஆன்மாவுக்கும்
ஆனந்தம் கொடுக்கும்-உன்
ஆன்மீக சிந்தனை பிரசுரிப்புகள்
வாழ்க - வளர்க நீ.
வாழ்த்துகிறேன்.

பிறேமலதா- நாவலப்பிட்டி.

•

புத்தம் புது முரசே
எங்கள் ஆசை சொல்லவா? உன்னை வியாழன் வருமுன் அணைத்திட ஆசை. நீ சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களையும் முத்தமிட ஆசை.

எம். மதனிஇஷாக்- பேருவளை.

•

வாரம் ஒரு முறை மலரும் தினமுரசே!

நீ போன வாரம் தான் எங்கள் வீட்டு வாசலில் மலர்ந்தாய். உன் மேனியில் சுமந்து வரும் அம்சங்களை வார்த்தைகளினால் மட்டிட முடியாது. நீ வளம் பெற்று வாழ எங்கள் வாழ்த்துக்கள்.

செல்விகள் சாந்தி-திவ்வியா
அன்புவழிபுரம்.



•

**மதுரம்....**
தேன்பாகும் சர்க்கரையும்
சுவைத்தால் தான் தித்திக்கும்
தேனும் சுவைத்தவுடன் திகட்டுகிறதே
திகட்டாத தேன் மதுரமோ தினமுரசு!
வாழ்நாள் முழுக்க சுவைக்கலாம்
போலிருக்கிறது.
யார் அந்த ரசிகன்....?
அவரைப் பார்த்து இப்போது நானும் ஒரு ரசிகன். ரசிகனுக்கு முத்தம் தரும்...

கந்தையா விநாயகமூர்த்தி- வெதமுள்ள.

•

மை சுவீட் முரசே,
வியாழன் அன்று துள்ளி வந்து
எங்கள் இதயத்தைக் கொள்ளை கொண்ட மலரே! உன் இதயத்தில் தஞ்சம் கொண்ட ஆயிரமாயிரம் நேயர்களில் நாங்களும் இருவர் முரசே உன் சேவை என்றும் எமக்குத் தேவை. வாழ்க உன் தொண்டு.

ஏ. பர்னா பஸ்லியா-புத்தளம்.

•

பரிசுமட்டும் போதாது!

கவிதைப் போட்டிக்குரிய பரிசை பெற்றுக்கொண்டேன். ஆனால் இலக்கிய ஆர்வலர் எதிர்பார்ப்பது வெறும் பணத்தை மட்டுமல்ல; பாராட்டுதலை யும்தான். கூடவே உங்கள் பத்திரிகை சார்ந்த "பாராட்டுமடல்" ஐயும் இணைத்திருந்தால் மகிழ்ச்சி இரட்டிப்பாகியிருக்கும். இனிவரும் முறைக்கு அவ்வாறு செய்யுங்களேன்.

எஸ். உமா, நானு-ஓயா.

*உங்கள் கருத்து நன்று. கவனத்தில் கொள்ளப்படுகிறது. (ஆர்)*

•

உன் அங்கமென்னும் அதரத்தில் படித்துச் சுவைக்கும் வாசகர்களில் நானும் ஒருத்தி. உன் ஒவ்வொரு பக்கமும் தேனாக இனிக்கிறது. ஆனாலும் ஒரு வேண்டுகோள். திருமலை குமார் எழுதியதையே நானும் சொல்கிறேன். சிறிய எழுத்துகளை தவிர்த்து பெரியவர்களின் பார்வைக்கேற்ப செயற்படு தினமுரசே!

கோகிலா கேதாரம்-சீனக்குடா.

•

தினமுரசில் வெளியாகும் அனைத்து அம்சங்களும் வெகு சிறப்பானவை. அதிலும் "கண்ணே மதுமிதா" என்னும் இளமைத்தொடர் அடுத்து என்ன நடைபெறப்போகின்றதோ எனும் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்த்துகின்றது.

"ஊரெல்லாம் உன் புகழ்தான். நாளெல்லாம் உன் பெயர் உச்சரிக்கும் நேச உள்ளங்களில் நானும் ஒருத்தியாக இடம் பெறுகிறேன்."

நிஷானி- நாவலப்பிட்டி.

•

# கிளாலிக் கடல் ஏரியில் தொடர் தாக்குதல்கள்!
# யூ.என்.எச்.சி.ஆர். முயற்சியிலும் முன்னேற்றமில்லை!



கிளாலிக் கடலேரிப் பாதையில் விடுதலைப் புலிகளால் கடந்தமாதம் தற்கொலைத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது.

அதனையடுத்து விமானப்படையினர் கிளாலிக் கடலேரியில் பலத்த கண் காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

50 கலிபர் ரகத் துப்பாக்கிகளால் ஹெலிகொப்டரிலிருந்து கடலேரிப் பாதையில் தாக்குதல்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

காலையிலும் மாலையிலும் தாக்குதல்கள் நடைபெறுகின்றன.

இதேவேளையில் பூநகரிப் பாதைத் திறப்பு விவகாரத்தில் யூ.என்.எச்.சி.ஆரின் முயற்சிகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

நீண்டகால முயற்சிக்குப்பின் யூ.என்.எச்.சி.ஆர். வட்டாரங்கள் மத்தியிலும் சோர்வு தலை காட்டி யிருக்கிறது.

தற்போதைய நிலையில் பூநகரிப் பாதை திறப்பு விவகாரத்திற்கு புலிகள் சம்மதிக்கப் போவதில்லை.


பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகப் புலிகள் யாழ்ப்பாணத்தில் கூறிவருகின்றனர்.

பிரஞ்சு கடற்படையின் பாரிய யுத்தக் கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தில் 4 நாட்கள் தரித்துச் சென்றமை குறித்துப் புலிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினர் புதிய பீரங்கிப் படகு களைக் கொள்வனவு செய்யப் போவதாகவும் புலிகள் கூறுகின்றனர்.

எனவே தற்போதைக்கு பூநகரிப் பாதைத் திறப்பு விடயம் சாத்தியமில்லை என்பது தெளிவாகிறது.

போக்குவரத்து அவலங்களில் இருந்து யாழ் குடாநாட்டு மக்களுக்கு மீட்சி இப்போதைக்கு இல்லை. ■




பாலஸ்தீன - இஸ்ரேலிய சமாதான முயற்சிகள் பற்றி அமெரிக்க டைம் வெளியிட்டுள்ள கார்டூன்.

## நீர் கசிகிறது! யார் கவனிப்பது?

(நிந்தவூர் நிருபர்)



சம்மாந்துறை மாவட்ட வைத்தியசாலையின் நீர்விநியோகத்திட்டத்திற்கென நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிக்கும் நீர் வடி தாங்கி, நீர்க்கசிவு காரணமாக பிரயோசனமற்ற நிலையிலிருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. சுகாதார அமைச்சு கடந்த 1986ம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் இந்த நீர் வடிதாங்கி அமைப்பு வேலைகளை மேற்படி நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்கியதாகவும் தெரியவருகின்றது. எனினும் இன்றுவரை இந்த நீர் சுத்திரிப்புத்தாங்கியிலுள்ள கசிவுகள் சீர் செய்யப்பட்டு நீர் வீண் விரயமாவது தடுக்கப்படாமையால் இந்த வைத்தியசாலைக்கான நீர் விநியோகம் பெரும் பாதிப்புக்குள்ளாவதாகக் கூறப்படுகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் இதனைச் சீரமைக்க உடன் ஆவன செய்வார்களா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

## செலுத்தவில்லை கட்டணம்-வெட்டப்பட்டது மின்சாரம்!

(வாழைச்சேனை நிருபர்)

கடந்த இரண்டு வாரகாலமாக வாழைச்சேனை மின்சார சபைக்குட்பட்ட பிரதேசங்களில் மின்சார சபையினர் நூற்றுக்கு மேற்பட்ட வீடுகளுக்கு மின்சாரத்தை துண்டித்துள்ளனர்.

1990ஆம் ஆண்டுக்குப்பின் மின்கட்டணத்தைச் செலுத்தாமல் மின்சாரத்தைப் பயன்படுத்தி வந்தவர்களுக்கே இக்கதி நேர்ந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட மின்பாவனையாளர்கள் சில வருடங்களாக முறையாக கட்டணத்தைச் செலுத்தாததால் பல கோடி ரூபா நஷ்டம் மின்சார சபை அடைந்து வருவதாக ஓர் அதிகாரி தெரிவித்தார்.

உற்பத்திச் செலவைக் கூட ஈடுசெய்யும் அளவுக்கு வருமானம் போதவில்லை; என்ற அவர் 'இது நீடிக்கும் பட்சத்தில் சகல பாவனையாளர்களுக்கும் மின்சாரம் வழங்குவது தடைப்பட்டு விடும்' என்றும் அச்சம் தெரிவித்துள்ளார்.

மின்பாவனையாளர்கள் பலர் கருத்துத் தெரிவிக்கையில் 'கடந்த மூன்று வருடங்களாக மின்சாரப் பட்டியலை நாம் கிரமமாகப் பெறவில்லை' என்றும் எமக்குக் கிடைத்த பட்டியல்கள் கூட பிழையான கட்டணத் தொகையைக் கொண்டிருப்பதாகவும் கூறினர். மேலும், சில வருடங்களாக பல மின் பாவனை யாளர்களுக்கு மின்சாரப் பட்டியல்கள் கிடைக்க வில்லை என்றும் கூறுகின்றனர்.

மின்கட்டண அதிகரிப்பால் மாவட்டத்திலுள்ள மின்பாவனையாளர்கள் சிலர் தங்கள் மீட்டர் பெட்டிகளில் மாற்றங்களை செய்திருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மின்மானியை பதியவரும் உத்தியோகத்தர்கள் கூட பதிவுகளை சென்று பார்வையிடாமலேயே உத்தேசக் கணக்கை மின்பட்டியலில் சேர்த்துக் கொள்கிறார்கள் என்றும் சிலர் தெரிவிக்கின்றனர்.

## மேகநோய் வேகம் குறைந்தது!

மேகநோய் காரணமாக யாழ்நகரில் இவ்வாண்டு 51 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு 102 பேர் மேகநோயால் பாதிக்கப்பட்டனர். கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு பாதிக்கப்பட்டோர் தொகை குறைந்துள்ளது.

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் அக்டோபரில் மாநாடு!

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த மாநாடு எதிர்வரும் அக்டோபர் மாதம் இறுதி வாரத்தில், கண்டியில் நடைபெறவிருக்கின்றது.

சங்கத்தலைவர் ஜனாப்.எம்.வை.ஏ.பாவா தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டுக்கு வெளிவிவகார அமைச்சர் அல்-ஹாஜ் ஏ.சீ.எஸ். ஹமீத் அவர்களைப் பிரதம அதிதியாக அழைப்பதென அண்மையில் நடைபெற்ற சங்க மத்திய சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கே தேடுதல்! தவறான தலையாட்டிகள்

கிழக்கில் பாதுகாப்புப் படை யினரால் மேற்கொள்ளப்படும் தேடுதல் நடவடிக்கைகளில் சாதாரண பொதுமக்கள் எதிர் கொள்ளும் சிரமங்களைத் தவிர்க்க அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று பலரும் கூறுகின்னர்.

தவறான நபர்களை அடையாளம் காட்டி தமது தனிப்பட்ட விரோதங் களைத் தீர்த்துக் கொள்ளும் தலை யாட்டிகள் பற்றியும் பொது மக்கள் வெறுப்போடு பேசி வருகின்றனர்.

## மாடு மேய்த்தவனையும் விட்டுவைக்காத வேட்டு!

யாழ்ப்பாணத்தில் உள்ள அளவெட்டிப் பகுதியில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தார் ஒருவர்.

அப்போது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

வேட்டொன்று பதம் பார்த்த நிலையில் பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்ப்ட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

## செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவை!

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முல்லை மாவட்டத்தில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இடம் பெயர்ந்த மக்களுக்கு உடை, பாத்திரங்கள், உலர் உணவு விநியோகம் போன்றவற்றை மேற்கொண்டு வருகிறது.

இலவச நடமாடும் வைத்திய சேவை ஒன்றையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடத்திவருகிறது.

## பாதிக்கப்பட்டு வரும் தோட்டப் புறப் பாடசாலைகள்! நிதி இன்றி கைவிரிக்கின்றன அமைச்சுக்கள்!!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் நிருவாகங்களைக் கவனிக்க இப்பொழுது தனித்தனியாக அமைச்சுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அண்மையில் தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வின் மூலம் 450 தமிழ்ப் பாடசாலைகளும் 100 முஸ்லிம் பாடசாலைகளும் இருப்பதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இவற்றுள் தமிழ்ப் பாடசாலைகளில் சுமார் 2500 ஆசிரியர்களுக்கும் முஸ்லிம் பாடசாலைகளில் 1400 ஆசிரியர்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாம். ஆசிரியர்களை நியமிக்கும் பொறுப்பு கல்விச் சேவைகள் ஆணைக் குழுவிடம் இருந்தாலும் கூட இப்பாடசாலைகளின் ஏனைய தேவைகளை நிவர்த்தி செய்யப் போதிய பணம் இல்லை. அதிகாரத்தை மாத்திரம் கையளித்து நிதியை மாத்திரம் ஒதுக்கீடு செய்யாமல் காரியம் சாதிக்க முடியுமா? அவ்வாறாயின் பாடசாலைகளின் குறைகளை எப்படி நிவர்த்திப்பது என்று எல்லோரும் அங்கலாய்க்கின்றனர். மற்றெல்லாப் பிரதேசங்களை விடவும் தோட்டப்புறப் பாடசாலைகளே பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதால் இதன் பொருட்டு போதிய நிதியை மத்திய அரசிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியமும் இப்பொழுது வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

## வதந்திகளால் அதிபர்கள் சலனம் அதிகாரிகளைத்தேடி ஓடுகிறார்கள்!

(தலவாக்கொல்லை நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகளில் அதிபர் மாற்றங்கள் இடம் பெறவிருப்பதாக பலமான வதந்திகள் உலாவுகின்றன. இரண்டாந்தவணை இறுதியிலேயே பல அதிபர்கள் உத்தியோக பற்றற்ற முறையில் சக ஆசிரியர்களிடம் பிரியாவிடை பெற்ற சம்பவங்கள் நிறைய இடம் பெற்றன.

இரண்டாந் தவணை விடுமுறையின் போது சம்பந்தப்பட்ட அதிபர்கள் மாகாண, கோட்ட கல்வி அதிகாரிகளிடம் அடிக்கடி போய் வந்த வண்ணம் இருந்தனர்.

சில அதிபர்கள், 'மூன்றாந் தவணை ஆரம்பித்து பதினைந்து நாட்களுக்குள் இன்ன கல்லூரிக்கு அதிபராக வந்தே தீருவேன்' என சூளுரை செய்த வண்ணம் இருந்தனர்.

உயர் மட்ட அதிகாரிகள் சிலரும் 'அதிபர் மாற்றங்கள்' நடைபெற உள்ளதை மறுத்துரைக்கவில்லை. மூன்றாந்தவணை ஆரம்பித்து விட்டது. எனினும் சம்பந்தப்பட்ட அதிபர்கள் இன்னமும் தங்கள் பாடசாலைகளில்நதான் இருக்கின்றனர். எனினும் வதந்திகள் முன்னரைவிட பலமாக அடிபடுகின்றன.

தலவாக்கொல்லை, ராகலை, ஹைலன்ட்ஸ், பொகவந்தலாவை பன்மூர், லிந்துல, வட்டகொடை சென்கிளயர் தமிழ் வித்தியாலயங்களே இவ்வாறான அதிபர் மாற்றங்களைப் பெற உள்ள பாடசாலைகள் எனக் கூறப்படுகிறது.

இத்தகைய வதந்திகளால் சம்பந்தப்பட்ட அதிபர்கள் சஞ்சலத்திற்குள்ளாகிய நிலையில் உள்ளனர். இருக்கின்ற பாடசாலைகளிலும் எதிர்கால திட்டங்களை நடைமுறைப் படுத்த இயலாதவர்களாகவும், எங்கே மாற்றம் தரப்படப்போகிறது என்பதிலும் நிச்சயமற்ற தன்மை நிலவுவதால் மாற்றத்திற்குள்ளாகப் போகும் பாடசாலையிலும் எதுவும் செய்ய முடியாத நிலையிலும் உள்ளனர்.

மூன்றாந் தவணையில் பாடசாலை மட்டத்தில் இறுதிப் பரீட்சைக்குரிய வேலைகள் தவணை ஆரம்பத்திலிருந்தே கவனிக்கப்பட வேண்டும். நிரந்தர அதிபர்கள் இல்லாத நிலையில் எல்லாமே குளறுபடியாக முடியும். இறுதியில் பாதிக்கப்படப்போவது அப்பாவி மாணவர்கள்தான்!

முதலாந்தவணை முழுதும் விளையாட்டுப் போட்டிகள், இரண்டாந்தவணை இறுதிவரை தமிழ்த்தினப்போட்டி கோலாகலம் என படிப்பதற்கே நேரமில்லாத மாணவர்கள், மூன்றாந்தவணையில் தான் புத்தகத்தைப் புரட்டத் தொடங்குகிறார்கள்.

இதிலும் அதிபர் மாற்றம் என நிச்சயமற்ற தன்மை நிலவுவது விரும்பத்தக்க ஒன்றல்ல என பெற்றோர் கருதுகின்றனர்.

அதிகாரிகள் சம்பந்தப்பட்ட வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் அல்லது உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மலையகக் கல்வியில் அக்கறை உள்ளவர்கள் விரும்புகிறார்கள்.

## புற்றீசல்களாக புறப்படும் போலி வைத்தியர்கள்! வன்னியில் வைத்தியர்கள் தட்டுப்பாடு!!

வன்னியில் முக்கியத்துவம் வாய்ந்த வைத்தியசாலையான கிளிநொச்சி மாவட்ட, வைத்தியசாலையில் தகுதிவாய்ந்த வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறையாக உள்ளனர்.

தற்போது அங்கீகரிக்கப்பட்ட ஒரு வைத்திய அதிகாரியும் 3 உதவி வைத்திய அதிகாரிகளும் அங்கு பணியாற்றுகின்றனர்.

மகப்பேறு சத்திர சிகிச்சை உட்பட சகல சாதாரண சத்திர சிகிச்சைகளும் உதவி வைத்திய அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுகின்றன.

பாரிய சத்திர சிகிச்சைகளுக்கு நோயாளர்கள் யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இடங்களுக்கு செல்லுகின்றனர்.

எக்ஸ்ரே சாதனம், ஈ.சி.ஜி போன்றவையும் அங்கில்லாமல் இருப்பது நோயாளர்களை பெரும் பாதிப்புக்குள்ளாக்கி வருகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி போலி வைத்தியர்கள் சிலர் தனிப்பட்ட ரீதியில் வைத்தியம் பார்க்கத் தொடங்கியுள்ளனர். இதனால் சில நோயாளிகள் அபாயகரமான நிலைக்கும் உள்ளாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

## வெட்ட வெளி வீதியிலே கிடந்த பற்றுச் சீட்டுப் புத்தகங்கள்!

(கினிகத்தேனை நிருபர்)

அம்பகமுவ பிரதேசசபை பற்றுச்சீட்டு புத்தகங்கள் ஹட்டன் கினிகத்தேனை வீதியில் தியகல கினிகத்தேனைக்கு இடையில் போக்குவரத்து பாதையில் சிதறுண்டு கிடந்தன.

வேலைவிட்டு பகல் போசனத் துக்கு வந்த தொழிலாளப் பெண்கள் புத்தகங்களை எடுத்துக் கொண்டு வீடுவந்தனர்.

அதே பாதையில் வந்த இராணுவ வீரர்கள் இதே புத்தகங்களைக் கண்டெடுத்து பிரதேச சபையில் ஒப்படைத்த பின்னரே விஷயம் வெளியானது.

பின் சம்பந்தப்பட்டவர்கள் புத்தகங்களை வலை விரித்து தேடிப் பிடித்தனர். மஸ்கெலியாவிலிருந்து வந்த பிரதேசசபை வாகனத்திலிருந்தே புத்தகங்கள் விழுந்ததாக மக்கள் கூறுகின்றனர். நிதானமற்ற நிலையிலேதான் இவை நிகழ்ந்ததாக மக்கள் கூறுகின்றனர். இப்படி முக்கியமான புத்தகங்களே வீதிகளில் கிடந்தால் எப்படி? என்று மக்கள் பிரதேச சபையின் மீது உள்ள ஐயத்தை வெளிப்படுத்துகின்றனர்.

## "சபைக்கு வரவேண்டும் சந்திரசேகரன்"

(கண்டி நிருபர்)

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் மத்தியமாகாண சபைக்கு நுவரெலியா மாவட்டத்திலிருந்து சுயேட்சைக்குழுவின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டவருமான திரு. பெ. சந்திரசேகரன் 90 நாட்களாக சத்தியப்பிரமாணம் எடுக்காமையினால் அவரது பிரதிநிதித்துவம் காலியாகி விடுமோ என்ற சர்ச்சை இப்பொழுது உருவாகியுள்ளது.

ஜே.ஓ.ஸி. குண்டு வெடிப்பில் தொடர்பான வரதனுக்குப் புகலிடம் அளித்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் பாதுகாப்பு பிரிவினர் மூலம் அவர் தடுப்புக்காவலில் இருந்து வருகிறார். மத்திய மாகாண சபைத் தேர்தலில் மக்களின் முன்தோன்றாமலேயே அவர் உறுப்பினராகக் கடந்த மே மாதம் தெரிவு செய்யப்பட்டார். அன்றிலிருந்து இன்று வரையும் அவர் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு மாகாண சபைக்கு சமுகம் கொடுக்கவில்லை. 10.9.93 திகதியுடன் அவர் சபைக்கு வராமல் 90 நாட்கள் கடந்து விட்டது. அவரது உறுப்புரிமை தொடர்ந்தும் நிலைக்குமா என்பது சந்தேகம் என்றே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடந்த 07.09.93 ல் நடைபெற்ற மாகாண சபைக் கூட்டத்தில் கருத்து வெளியிட்டனர்.

ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் திரு சந்திரசேகரனை இந்தச் சபையில் வந்து சத்தியப்பிரமாணம் எடுக்க வைக்க வேண்டிய சகல முயற்சிகளையும் இந்தச் சபைதான் மேற்கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் தி. விஜயவிக்ரமரத்ன கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய பிரதித் தலைவர் திரு. வீ. புத்திர சிகாமணியிடம் கேட்டுக் கொண்டார்.

நாம் இந்த முயற்சியின் மீது பூரண கரிசனை கொண்டுள்ளோம் என்று திரு புத்திரசிகாமணி பதில் அளித்தார். இது தொடர்பாக தேர்தல் ஆணையாளரிடம் இருந்து மேலதிக ஆலோசனையைப் பெறவும் சபை இணங்கியது.

## கஷ்டமான கப்பல் பயணம் இறங்கு துறை உடனே தேவை!

(மன்னார் நிருபர்)


கற்பிட்டியிலிருந்து மன்னாருக்கு கப்பலில் பிரயாணம் செய்பவர்கள் தாழ்வுபாடு கடற்கரையில் துறைமுகம் ஒன்று இல்லாமையால் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கப்பலில் செல்லும் பயணிகள் கரைபோய்ச் சேருவதற்கு மேலும் இரண்டு படகுகளில் மாற வேண்டியுள்ளது. அனைவரையும் தூக்கித் தூக்கியே சிறு படகுகளுக்கு மாற்றப்படுகின்றனர்.

இதன் காரணமாக பல பெண்கள் கப்பலில் பயணம் செய்வதை தவிர்த்துள்ளனர். அத்துடன் கைதவறினால் கடலுக்குள் தான் என்ற நிலைமையும் உள்ளதால் பல பயணிகள் பல சொல்லொண்ணாத் துயரங்களை தினமும் அனுபவிக்கின்றனர். படகுகளுக்காக கட்டணமும் செலுத்த வேண்டும்.

தாழ்வுபாடு இறங்குதுறையில் ஒரு தற்காலிக துறைமுகமாவது அமைத்தல் வேண்டும். இவ்வாறு பல பயணிகள் எமது மன்னார் நிருபர் மூலம் தினமுரசு ஊடாக வேண்டுகோள் விடுக்கின்றனர். ■

## குறுக்கெழுத்துப் போட்டி இல–16



### இடமிருந்து வலம்

1. துப்பறிபவர்களுக்கு இந்தச் சக்தி அவசியம்.
3. இதைப் பலவிதங்களில் அலங்கரிக்கலாம்.
6. இதைக் கண்டு தலைக்கனம் கொள்ளக்கூடாது என்பார்கள்.
7. கிரிக்கெட்டில் இது போட்டவர்கள் பற்றிய பட்டியல் ஒன்று முரசில் வெளிவருகிறது.
10. ஆத்திரக்காரனுக்கு இது மட்டு.
11. சாணக்கியமாகச் சிந்திப்பவர்களை இப்படியும் சொல்வதுண்டு.
13. இரக்கத்தின் இன்னொரு பெயர். (வலமிருந்து இடமாக இருக்கிறது)

### மேலிருந்து கீழ்

1. இதில் மாட்டினால் சிறை நிச்சயம்.
2. இதுவும் ஒரு போட்டிதான்.
3. கல்லிலே கலை வண்ணம் காண்பவன்.
4. இது ஒரு சுதேச உற்பத்தி. (குழம்பியிருக்கிறது)
5. நாட்டில் தலைவிரித்தாடும் தவறானவற்றில் ஒன்று. (குழம்பியிருக்கிறது)
8. கண்ணகியை இப்படியும் சொல்வார்கள்.
9. மனிதனுக்கு இருக்க வேண்டியவற்றில் ஒன்று.
12. இது நீண்டு கொண்டே போனால் நிற்பவருக்கு அலுப்புத்தான்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 25.9.93க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். (அஞ்சலட்டைகளை மாத்திரம் உபயோகிக்கவும்)

அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல.–16
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு -05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, பரிசுப்பணம் ரூபா 500/= பகிர்ந்தளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-14க்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 நீ | தி | 2 ம | ன் | ற | ம் | ■ |
| ரா | 3 சி | ர | ம | ம் | ■ | 4 கா |
| 5 வி | லா | ங் | கு | ■ | 6 பூ | த |
| ■ | ப | 7 கொ | டு | ங் | கோ | ல் |
| 8 மு | ம் | த் | ■ | 9 ள் | ள | ■ |
| ர | ■ | 10 தி | ரு | வெ | ம் | 11 பா |
| 12 சு | மை | ■ | 13 உ | ளி | ■ | ல் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.14இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. எஸ். சாந்தமலர் கண்டி.
2. ஆர். ஜெயராஜ் பண்டாரவளை.
3. எஸ்.எச்.எம். ஜிப்ரி கொழும்பு-11.
4. வீ. ரட்ணகுமார் கண்டி.
5. கே. சஞ்சிதா குருநாகல்.
6. மு. நவராஜ் கொழும்பு-5.
7. எம்.ஐ. றிஷ்வின் மாவனல்ல.
8. செல்வி ஜெனோ சதீஸ்குமார் திருமலை.
9. திருமதி எஸ். பௌஸ் கம்பஹா.
10. திருமதி பூமா பாயிஸ் கோட்டே.

இந்த அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/= பகிர்ந்தளிக்கப்படும்.

## புகார் பெட்டி

### கர்ப்பிணிகளுக்கு கதவடைப்பா?

கல்முனைக்குடி அரசினர் மகப்பேற்று மனை இப்பகுதி மக்களின் நலன் கருதி வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜனாப் ஏர்.ஆர்.மன்சூர் அவர்களின் வேண்டுதலின் பேரில் கடந்த 5.11.88ல் மறைந்த மாண்புமிகு ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இம்மகப்பேற்று மனையில் ஆரம்பத்தில் கர்ப்பிணிகள் தங்கி இருந்து தனது குழந்தைப் பிரசவத்தை மேற்கொண்டனர்.

ஆனால் இப்போது இந் நிலை மாறி உள்ளது. கர்ப்பிணிகள் இம் மகப் பேற்று மனையில் குழந்தை பிரசவத்திற்காக அனுமதிக்கப்படுவதில்லை.

குழந்தை பெற்றெடுக்கக் கூடிய சகல வசதிகளும் இம்மகப் பேற்று மனையில் இருந்தும் ஏன் இந்த நிலை? கர்ப்பிணிகள் கண் துடைக்க யாரும் இல்லையா?

எம்.சி. கலீல், கல்முனை-05.

### கல்வி அமைச்சு கவனிக்குமா?

(கல்முனை நிருபர்)

கொழும்பு மலே வீதியில் இருக்கும் கல்வி அமைச்சு பரீட்சைத் திணைக்களத்தில் கடந்த கால வினாப் புத்தகங்கள் விற்பனைக்கு இருக்கின்றன.

ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சை முதல் ஏ.எல்லுக்கான வினாக்கள் ஐந்து வருடகாலப் புத்தகமாக விற்பனை ஆகின்றன. இவற்றை வாங்கிப் படிக்கும் மாணவர்கள் எதிர்கால வினா எப்படி இருக்கும் என்று ஊகித்துத் தம்மை ஏற்பாடு செய்வதற்கே இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஆனால் தமிழ்ப் பெற்றோருக்கு என்ன ஏமாற்றம்! எப்போது போனாலும் தமிழ் மொழி மூலமான கேள்விக் கொத்துக்கள் விற்பனைக்கு இல்லை. எப்போதும் முடிந்து விட்டது என்ற பதிலே கிடைக்கின்றது.

பதிலில் இருந்தும், அறிவித்தல்களில் இருந்தும் அங்கு தமிழில் வினாப் புத்தகங்கள் தலைகாட்டுவதே இல்லை என்று புலனாகின்றது. ஏன் தமிழ் மாணவர்கள் பயன்பெறக்கூடாது என்றா? தமிழ்ப் பெற்றோர் விசனப்படுகின்றனர்.

இனியாவது இவ்வாறான புத்தகங்கள் கிடைக்க கல்வியமைச்சு கண் திறக்குமா?

### கவனிக்கப்படாமல் போன குடியேற்றத் திட்டம்!

மாத்தளை மாவட்டத்தில் இரத்தோட்டை தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட குடியேற்றங்களில் மிகமிகப் பழமைவாய்ந்த குடியேற்றம் 'மீதெனிய' குடியேற்றம். இக்குடியேற்றத்தில் வாழ்பவர்கள் அனைவரும் முஸ்லிம்களாவர். இங்கு மக்கள் குடியேறி இற்றைக்கு முப்பத்தேழு ஆண்டுகளுக்கு மேலாகியும், அடிப்படைத் தேவைகளான தண்ணீர், மின்சாரம் என்பவற்றை இன்றுவரை பெற்றுக் கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே புதிதாய் உருவாகும் குடியேற்றங்களுக்கு தண்ணீரும், மின்சாரமும் பெற்றுக் கொடுப்பதில் ஆர்வம் கொண்டுள்ள மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பழமைமிகு 'மீதெனிய' குடியேற்றத்தின் பக்கமும் தம் பார்வையை செலுத்துமாறு 'தினமுரசு வாரமலர்' ஊடாக நானும் இக்குடியேற்றவாசி என்ற போர்வையில் பணிவாய் வேண்டி நிற்கின்றேன்.

ஷரீப் இப்னுநு.:.மான்
வரக்காமுறை.

### மூதூரின் குறை!

மூதூர் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகக் காணப்படுகின்றது. வெளியூர் செல்வதானால் கடலைக் கடந்தே செல்ல வேண்டும். இதனால் நல்லதோ. கெட்டதோ நடந்தால் வெளியூர்களிலுள்ள தங்களது உறவினர்களுக்கு உடன் அறிவிக்க முடியாது தொலைபேசி வசதியின்றி மூதூர் மக்கள் கஷ்டப்படுகின்றனர். எனவே இக்குறைபாட்டினைத் தீர்த்து, வேண்டிய தொலைபேசி வசதிகளைச் செய்ய, உயர் அதிகாரிகள் முன் வருவார்களா என்பது சந்தேகத்துக்குரியதாகும். எனவே இந்தக் குறை என்றைக்குத்தான் தீருமோ?

எம்.எஸ்.எம். ஸியாத்
மூதூர்-2.

### பாதிக்கும் சூழலை பார்க்காத மனங்கள்!

அக்கரைப்பற்றின் மிக முக்கியமான பாதைகளில் ஒன்றுதான் பிஸ்கால் வீதி. இவ்வீதி தான் மூன்று பாடசாலைகளையும், ஒரு பள்ளிவாசலையும் இணைத்திருக்கின்றது. இப்பாதை பல காலமாக கோடைகாலத்தில் புழுதியும், மாரி காலத்தில் நீர் தேங்கி நிற்கும் ஒரு தொட்டியாகவும் இருந்து வருகின்றது. இதனால் வெள்ளை உடை அணிந்து செல்லும் மாணவர்களின் நிலையை இங்குள்ள பொது நலவாதிகள் இன்னும் ஏனோ பாராமுகமாக இருக்கின்றார் களோ! சுற்றாடலைப் பாதிக்கும் இப்பாதையை எப்போது தான் சீரமைக்கப் போகின்றார்களோ!

எச்.எம்.சலாகுதீன்
அக்கரைப்பற்று-04.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட் —நாரதர்—

# இராணுவ உத்திகள் மாறலாம் பிரச்சனைகள் தீருமோ?

கூட்டுப்படைத் தலைமை கலைக்கப்பட்டு விட்டது.

புலிகள் குண்டு வைத்தும் கூட கட்டிடங்கள் தகர்ந்தனவே தவிர கூட்டுப் படைத் தலைமை தொடர்ந்து இயங்கியது.

இப்போது அரசாங்கம் அதனைக் கலைத்து விட்டது. கூட்டுப்படை தலைமையகப் பொறுப்பதிகாரி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகியிருக்கிறார்.

நாடுகளுக்கிடையிலான யுத்தங்களில் தான் கூட்டுப்படை தலைமைத்துவம் உருவாக்கப்படுவதுண்டு.

உள்நாட்டுப் போர்களில் கூட்டுப் படைத் தலைமைத்துவம் பொர்துவாக

கொண்டோ இருக்கிறது? புலிகள் இன்னும் ஏன் அழிக்கப்படவில்லை என்று கேள்விகள் தொடுக்கப்படுகின்றன.

அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆங்கிலப்பத்திரிகை ஒன்றுகூட இராணுவ உயரதிகாரிகள் மீது கண்டனம் செய்திருந்தது.

வடக்கு-கிழக்கில் நடைபெறும் போரும், அதன் கொடூரமான விளைவுகளும் பற்றியெல்லாம் அந்தப் பத்திரிகைகள் கவலைப்படவில்லை.

விமானத்தாக்குதல்கள் ஏற்படுத்தி வரும் இழப்புக்கள் குறித்தும் அவை அலட்டிக்கொள்வதில்லை.

எப்படியோ வெற்றி பெற்றால்

பேசியிருந்தார்.

இணைந்திருக்கலாம் என்று அவர் உறுதியாக கூறக்கூட இல்லை.

ஆனால் ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் சில, எல்லாம் போச்சு என்ற தொனியில் எழுதித் தள்ளிவிட்டன.

ஒரு பத்திரிகை சிங்கள மக்களிடம் அபிப்பிராயம் கேட்டு வெளியிட்டிருந்தது.

தமது கருத்துக்கு சாதகமான அபிப்பிராயங்களை வெளியிட்டு வடக்கு-கிழக்கு பிரிந்தேயாக வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றது.

தமிழ்க் கட்சிகளிடம் அபிப்பிராயங்கள் கோரப்பட்டன.

தமிழ்க் கட்சிகள் யாவும் பிரிக்கக்

நிலைமைகளை குறுகிய அரசியல் கண்ணோட்டங்கள் ஏற்படுத்தி விடுகின்றன.

படையினருக்கு மேலும் புதிய ஆயுதத் தளபாடங்கள் வாங்கப்படும் என்று தெரிகிறது.

கடற்படையினருக்கும் புதிய போர்

திற்குள் பலத்தை அதிகரிக்கச் செய்யலாம். ஆனால் அரசியல் பிரச்சனைகளைத் தீர்க்க உதவாது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நீண்டகால அனுபவ முதிர்ச்சியுள்ளவர்.

உருவாக்கப்படுவதில்லை.

கூட்டுப்படை தலைமைத்துவம் தொடர்பாக பாதுகாப்புப்படை அதிகாரிகள் மட்டத்தில் முரண்பட்ட கருத்துக்கள் காணப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் கூட்டுப்படை தலைமையகத்தின் சில அதிகாரங்களை குறைத்துவிட முயற்சிகள் நடந்தன.

படைத்தளபதிகள் தமது படைகளின் நடவடிக்கைகளை தாமே திட்டமிட்டு செயல்படுத்துவது பயன்கொடுக்கும் என்று சொல்லப்பட்டது.

எனினும் அவ்வாறான நடவடிக்கைகளிலும் பாரிய வெற்றிகள் ஏற்படவில்லை. எனவே மீண்டும் கூட்டுப்படைத் தலைமையகமே அதிகாரம் கொண்டதாக இருந்தது.

இப்போது கூட்டுப்படைத்' தலைமையகம் கலைக்கப்பட்டு விட்டதால் படைத்தளபதிகள் சுதந்திரமாக செயல்பட தூண்டப்பட்டுள்ளார்கள்.

புலிகளின் சமீபத்திய தாக்குதல்கள் பாதுகாப்பு வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன.

பெருந்தொகைப் பெறுமதியான ஆயுதங்களை இராணுவத்தினரே புலிகளுக்கு கொடுத்துவிட்டனர். "ஆயுதமும், உணவும் கொடுத்து புலிகளைப் பலப்படுத்தி நியாயமான முறையில் போர் நடத்தும் புதிய உத்தியை இலங்கையின் பாதுகாப்புப் படையினர் கடைப்பிடித்து வருகின்றனர்." இவ்வாறு நகைச்சுவையாக விமர்சகர்கள் சிலர் கூறுவதுண்டு.

பிரச்சனைகள் புலிகளை உருவாக்கின. இப்போது இராணுவத்தினர் புலிகளை பலமேற்றுகிறார்கள். ஆக புலிகளை ஆதரிப்பதாக தமிழர்களை குறை கூறிப் பயனில்லை.

"முன்னர் வருடத்திற்கு ஒரு தடவைதான் இராணுவத்தினர் புலிகளுக்கு ஆயுதம் கொடுப்பதுண்டு. இப்போது வாரத்திற்கொரு தடவை கொடுப்பது வழக்கமாகி வருகிறது" என்கிறார் ஒரு



அரசியல் அவதானி.

பருத்தித்துறைக் கடலில் படகையும் ஆயுதங்களையும் கடற்படையினர் பறிகொடுத்தனர்.

கடற்படைப்படகை புலிகளின் படகுகள் அருகில் வந்து நெருங்கும்வரை கடற் படையினர் ஏன் கவனிக்கவில்லை என்பது இதுவரை கண்டறியப்படாத மர்மமாக இருக்கிறது.

கோளாறு எங்கோ இருக்கக்கூடியதாக, படகைப் பறிகொடுத்த ஆத்திரத்தில் யாழ் நகர் மீது விமானங்கள் கோபம் காட்டி ஓய்ந்தன.

கிளாலிப் பாதையிலும் குண்டு மழை பொழிந்தது.

எய்தவன் தப்பித்துக் கொள்வதும், எட்டிப்பார்ப்பவன் தலை உருள்வதும்தான் நடந்து கொண்டிருக்கிறது.

இதே நேரத்தில் சிங்கள-ஆங்கிலப் பத்திரிகைகள் சில போரின் வேகம் போதாது என்று எழுதிக்கொண்டிருக்கின்றன.

பாதுகாப்புப்படை உயரதிகாரிகள் மீதும் கிண்டல் சொல்லி கண்டிக்கின்றன.

இராணுவம் என்ன பூப்பறித்துக்



போதும் என்ற ரீதியில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

இராணுவ பலத்தால் மட்டுமே வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு முடிவு காண முடியும் என்று தவறான கண்ணோட்டத்தை அவர்கள் கொண்டிருக்கின்றனர்.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுகள் விடயத்தில் குறுகிய அபிப்பிராயங்களையே அவை வெளியிடுகின்றன.

வடக்கு-கிழக்கைப் பிரிக்கவேண்டும். ஆனால் நாடு பிரியக்கூடாது என்று பத்தி பத்தியாக எழுதுகிறார்கள்.

நாட்டைப் பிரிக்கக்கூடாது. தமிழ் பேசும் மக்களைப் பிரிக்க வேண்டும் என்று சொன்னால் அதை எப்படி நேர்மையான தேசபக்தி என்று சொல்ல முடியும்?

பிரிவினைவாதிகள், பயங்கரவாதிகள் என்று புலிகளைக் கூறிக்கொண்டு வடக்கு-கிழக்கைப் பிரிப்பதில் தீவிரம் காட்டுவோரை எப்படி அழைப்பது?

சிறுபான்மை இனம் ஒன்று சேர்வதும் வலுவான தளத்தில் காலூன்றி நிற்பதும் பெரும்பான்மை இனத்தை அழிப்பதற்காக என்று நினைத்துக் கொள்கிறார்கள்.

தம்மை அழிவில் இருந்து காத்துக் கொள்ளும் நம்பிக்கையை தமிழ் பேசும் மக்கள் பெறும்போதும் தேசிய நீரோட்டத்தில் நம்பிக்கையோடு வந்து கலப்பார்கள் என்பதை விளங்கிக் கொள்ளாமல் இருக்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு இணைந்திருப்பது நாடு பிரிந்து போவதற்கு சமம் என்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு பிரிக்கப்படுமானால் நாடு எப்போதும் ஒற்றுமையாக இருக்காது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை.

தமிழ்-முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்ந்திருக்க வேண்டும் என்று ஒரே குரலில் சொல்லுகின்றன.

தமிழ் கட்சிகள் தனியே அவ்வாறு அபிப்பிராயம் சொல்லியிருந்தால் முஸ்லிம் கட்சிகள் அப்படிச் சொல்லவில்லையே என்று கூறியிருப்பார்கள்.

தமிழ்-முஸ்லிம் கட்சிகள் தமக்குள் ஒரு முடிவுக்கு வர வேண்டும், என்று மத்தியஸ்தர் நிலையில் இருந்து பதில் சொல்லப்பட்டிருக்கும்.

இப்போது தமிழ்-முஸ்லிம் கட்சிகள் ஒரே குரலில் சில கோரிக்கைகளை முன்வைக்கத் தொடங்கியிருப்பதால் பந்தை அடித்துவிட இடம் இல்லாமல் போய்விட்டது.

இடைக்கால நிர்வாக விடயத்தில் கூட புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்-முஸ்லிம் கட்சிகள் ஒரே குரலில் பேசியமை மேலும் ஆச்சரியம்.

அதனால் சாக்குப் போக்குகள் சொல்வதை விட்டு விட்டு 'இனப் பிரச்சனையே இல்லை' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டு விட்டனர்.

முன்னர் ஒரு முறை சர்வகட்சி மாநாட்டில் வடக்கு-கிழக்கு இணைப்புக்குதான் எதிர்ப்பல்ல என்ற தொனியில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா

கூடாது என்று கூறுவதால் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. சிங்கள மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பது போல ஒரு தோற்றத்தை உருவாக்கினார்கள்.

இன்றுவரை வடக்கு-கிழக்கு இணைந்துதான் இருக்கிறது. அதனால் சிங்கள மீக்களின் உரிமைகளுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டுவிடவில்லை.

மாறாக இணைந்திருக்கும் போது கூட தமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற தமிழ் பேசும் மக்கள் பாரிய இழப்புக்களை சந்தித்துள்ளார்கள்.

பெறுமதியான விலைகளைக் கொடுத்துள்ளார்கள்.

எனவே தமது பலம் பிரிக்கப் படுமானால் எதிர்காலம் என்னாகும் என்று தமிழ் பேசும் மக்கள் அஞ்சுவதில் நியாயம் இருக்கிறது.

இந்த விடயத்தில் சிங்கள மக்களை சிலர் அச்சம் ஊட்டுவதில் என்ன நியாயம் இருக்கிறதோ தெரியவில்லை.

தேவையற்ற சந்தேகங்களும், பிரச்சனைகளைத் தீர்ப்பதில் குறுகிய கண்ணோட்டங்களும் இல்லாதொழியும் வரை இராணுவ பலத்தால் மட்டுமே யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முடியாது.

விரைவில் யுத்தத்தை முடிக்க வேண்டும் என்ற தீவிரத்தில் முரட்டுத் தனமான இராணுவ நடவடிக்கைகள் முடுக்கி விடப்படுமானால் அது மேலும் தமிழ் மக்களின் நம்பிக்கையீனங்களையே உருவாக்கும்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை கவனத்தில் கொண்டு ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தீர்வொன்றினைக் காணவேண்டும்.

புலிகள் பேச வருகிறார்கள் இல்லை. நாம் என்ன செய்வது? என்று அரசாங்கம் கேட்டு வருகிறது.

ஏற்கனவே அரசாங்கத்தோடு பேசிக்கொண்டிருக்கும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் கூறுவதையாவது கேட்கலாம் அல்லவா?

புலிகளைத் தவிர ஏனைய தமிழ் அமைப்புக்கள் ஜனநாயகப் பாதைக்கு வந்து விட்டதாக முன்னாள் ஜனாதிபதி முதல் இந்நாள் ஜனாதிபதி வரை கூறுகிறார்கள்.

ஆனால் ஜனநாயகப் பாதைக்கு வந்துள்ளதாக தாம் சுட்டிக்காட்டும் அமைப்புக்களுடன் பேசி ஒரு தீர்வைக் காண்பதில் ஏன் தாமதிக்கிறார்கள் என்றுதான் தெரியவில்லை.

தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றை முன்வைத்து அதனை நடைமுறைப் படுத்தும் அரசியல் நோக்கத்துக்காக இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப் படுமானால் இது தமிழர்களுக்கு எதிரான யுத்தமல்ல என்று கூறுவதில் அர்த்தமிருக்கும்.

போரை தமிழ் பேசும் மக்கள் விரும்பவில்லை.

ஆனால், போரைத் தவிர வேறு என்ன வழி என்று கேட்கக்கூடிய

படகுகள் வந்து சேரும்.

மேலும் விமானங்கள் தருவிக்கப் படலாம்.

ஆயினும் நீர் உள்ளவரை மீன்கள் வாழத்தான் செய்யும்.

கடல்பகுதியை வேண்டுமானால் மனித நடமாட்டம் இல்லாத பகுதியாகப் பிரகடனம் செய்யலாம்.

தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளை என்ன செய்வது?

அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் இனப்பிரச்சனை என்ற அரக்கனின் நடமாட்டத்திற்கு முடிவு கட்டுவதே ஒரே வழி.

அதனைத்தான் செய்ய வேண்டும். இராணுவ உத்திகளில் மாற்றங்களும், அதிகாரிகளை மாற்றுவதும் இராணுவத்

கடினமான போக்குகளை விரும்பாதவர். அதனால் சிங்கள- ஆங்கிலப் பத்திரிகைகள் சிலவற்றால் கண்டிக்கவும் பட்டவர்.

எனவே இராணுவ பலத்தால் எல்லாவற்றையும் முடிவுக்குக் கொண்டு வரலாம் என்ற துடிப்போடு பேரழிவுக்கு தூபமிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாது என்று நம்புவோமாக.

எனினும் பிரச்சனைகளின் தீர்வு என்பது படையினரின் அல்லது படை உயரதிகாரிகளின் கைகளில் இல்லை.

அரசாங்க உத்தரவுகள் அவர்களால் நிறைவேற்றப்படுகின்றன.

அரசாங்கமும், அரசியல் சக்திகளும் பரந்த மனப்போக்கை வெளிப்படுத்துவதே இன்றைய தேவையாகும்.



## அதிரடி அய்யாத்துரை

வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள் என்று எங்கட ராஜதந்திரி போன கிழமை எழுதியிருந்தார். அந்தக் காலத்தில கப்பலோட்டினது சரிதான். இந்தக்காலத்தில மானம் எல்லோ கப்பலேறுது. வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை தமிழர் குழு பிரிச்சு, சாதி சொல்லி சந்தியிலே நிண்டு அடிபடுகினம். வீரம் கொப்பளிச்சு வெள்ளைக்காரனையும் தனித்தனிய அடிபடக்கூப்பிடுற லெவலுக்கு போய் இருக்குது. அடிக்கு அடிதான் சரி. ஆனால் பாருங்கோ எங்கட பல்லுகள நாங்களே குத்திக்காட்டுறதுதான் பிழை எண்டு சொல்லுறன்.

கொழும்பில சட்டமாநாடு நடக்குது. ரசியாவில இருந்தும் சட்டமா அதிபர் வந்திறங்கினவர். அவருக்கு அட்டகாசமான சந்தோசம். இப்பதான் முதன் முதலாக வெளிநாட்டுக்கு பயணம் செய்திருக்கிறார். உலக சட்டங்களை அறிஞ்சா உள்ளூர் சட்டங்கள் பிடிக்காமல் போயிடும் எண்டு முந்தி உலகம் சுற்ற விடுறது கிடையாதாம். ஆட்சி மாறின பிறகுதான் காட்சியும் மாறியிருக்குது.

முன்னாள் உயர்தலைவருக்கும் இரண்டெழுத்துக்காரர் பிரச்சனை பண்ணலாம் எண்டு பாதுகாப்பு சம்பந்தப்பட்ட துறைகள் சொல்லியிருக்காம். அரசியலில் இருந்து ஒய்வு பெற்ற பிறகும் இதென்ன தொல்லை எண்டு அவர் பேசுறதாக் கேள்வி.

முக்கியமான இடத்திலை இருந்து இனப்பிரச்சனை இல்லை எண்டு சொல்லப்படுகுது. யாரும் சத்தம் போடேல்ல. ஒரு வேளை அதே இட்த்தில இருந்து வடக்கு-கிழக்கு இணைப்பு பற்றி பேசியிருந்தா எதிர்த்தரப்பு வட்டாரங்கள் என்ன துள்ளுத் துள்ளியிருக்கும்! நாடு பிரிஞ்சு போச்சு, எல்லாம் போச்செண்டு கத்தியிருப்பினம். வாக்குலாபம் இல்லாட்டி ஏன் வாய்திறக்கினம். அதுவும் சரிதான்.

கொழும்பில எக்கச்சக்கமான விளம்பரத்தோட நடந்த இரவு இசை நடன நிகழ்ச்சி பலருக்கு ஏமாற்றமாம். கூட நின்று போட்டோ பிடிக்கவும் பணம் கேட்டது ரசிகர்கள் சிலருக்கு வருத்தமாப் போச்சு. ஆர்வமிகுதியில் மேடையில் தாவிய ரசிகர்களை நெஞ்சில் பிடிச்சு தள்ளினதும் கவலைக்குரிய காரியம்தான். கனக்க எதிர்பார்த்ததால- எதிர்பார்க்க வைக்கப்பட்டதால முடிவு சப்பெண்டு போச்சுதாக்கும்.

முன்னாள் பாதுகாப்பு செயலாளரை அவுஸ்திரேலியாவில இருந்து பிறகு சீமைக்கு மாற்றிய விசயத்தில முன் நாட்டுக்கு கொஞ்சம் மனவருத்தமாம். இவளவு விரைவாக மாற்றம் செய்வது வழக்கம் இல்லை என்கிறார்களாம்.

தேர்தல் அறிவிப்பு வெளியாகி பிறகு நிறுத்தமானாலும் இன்னும் அதை ஒட்டிய விசயங்கள் வந்து கொண்டுதான் இருக்குது. ஒரு அமைப்பு புள்ளடி போட ஆட்களையும் செட்டப் பண்ணிக் கொண்டிருந்ததாம்.

வவுனியா ஆஸ்பத்திரிக்கு நண்பர் ஒருவர் போன் எடுத்திருக்கிறார். பேச வேண்டிய ஆளின் பெயரைச் சொல்ல, மறுமுனையில் இருந்து, நிறைமுசுபாத்தியிலை 'டேய் எல்லாரும் லீவடா டேய்' என்று மரியாதையாக பதில் வந்ததாம். மருந்து குடுக்கும் இடத்தில் இருந்து பிழையான மருந்து பாவிக்கினம் போல கிடக்கு. யாரும் நல்ல மருந்தாக் குடுப்பதற்கு இடையில் உரியவர்கள் கவனித்தால் நல்லது.

*அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்- அதை*
*அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;*
*வெந்து தணிந்தது காடு-தழல்*
*வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?*

இது பாரதியார் பாட்டு. காடு எரிஞ்சா பரவாயில்லை. இஞ்ச நாடே எரியுது. இதைப் பார்க்க சிறு பிள்ளை வேளாண்மையல்லோ நினைவுக்கு வந்து தொலைக்குது. வீரத்தோட விவேகமும் வேணும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மோதிக் கொண்டவர்கள் மேசைக்கு வந்தார்கள்!

உலக [illegible]




## 45 ஆண்டுகால போர் மேகம் விலகியது!



### -ஒரு முன்னோட்டம்-

### கடினமான சமாதானம்

"இஸ்ரேல் என்ற பெயரையே உலகப் படத்திலிருந்து அழித்துவிடுவேன்"

அன்று அப்படித்தான் சபதம் செய்தார் எகிப்தின் அன்றைய அதிபர் அன்வர் சதாத்.

அவரது சபதத்தைத் தொடர்ந்து மூண்டது பெரும் போர்.

1967ல் ஆறு நாட்கள் நடந்தது அந்த அகோரப் போர்.

எகிப்து, ஜோர்டான் மற்றும் சிரியா படைகள் கூட்டாகக் களத்தில் குதித்தன. இஸ்ரேலை வீழ்த்த போர் தொடுத்தன.

ஆனால், அமெரிக்கா இஸ்ரேலுக்கு அபயக்கரம் நீட்டியது. ஆயுதம் வழங்கியது. ஆலோசனை கொடுத்தது.

மத்திய கிழக்கில் இஸ்ரேலை வைத்து அமெரிக்கா விளையாட நினைத்தது. தனது நாட்டின் நலனுக்கான விளையாட்டு அது.

அமெரிக்கா உதவியோடு இஸ்ரேல் ஆறுநாள் போரில் வெற்றிபெற்றது.

கோலன் குன்றுகள், சினாய், காஸா, மேற்குக்கரை, கிழக்கு ஜெரூசலம் ஆகிய பிரதேசங்களையும் இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டது.

ஆக்கிரமித்த பகுதிகளை மீண்டும் அரபுமக்களிடம் கொடுக்கும்படி ஐ.நா.சபை பணித்தது. ஆனால் இஸ்ரேல் அலட்சியம் செய்து மறுத்தது.

விளைவு, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த பாலஸ்தீன மக்களுக்கும் இஸ்ரேலிய யூத இன மக்களுக்கும் இடையே மோதல்கள் வெடித்தன.

1948ம் ஆண்டு மே மாதம் 14ம் திகதி இஸ்ரேல் சுற்றிலும் உள்ள அரபு நாடுகளுக்கு சவாலாக மாறியது.

மத்திய தரைக்கடல் ஒரு புறமும்; எகிப்து மறுபுறமும், ஜோர்தான், சிரியா ஏனைய புறங்களிலும் சூழ இருக்க இஸ்ரேல் என்ற குட்டி நாடு கொட்டமடித்துக் கொண்டிருந்தது.

இஸ்ரேல் உருவானதையே, உலக வரைபடத்தில் இஸ்ரேல் என்ற நாடு இருப்பதையோ எந்தவொரு அரபுவும், எந்தவொரு இஸ்லாமியரும் விரும்பவில்லை.

யூத இன இஸ்ரேலியர்களுக்கும், அரபு இனத்தவர்களுக்கும் ஏற்பட்ட பகைமை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அது ஜென்மப்பகை.

வரலாறு அறிந்த காலம் தொட்டே வளர்ந்து வரும் பகைமை அது.

இயேசு கிறிஸ்து நாதரும் பிறப்பால் ஒரு யூதர்தான்.

பத்துக் கட்டளைகளை பிரகடனப்படுத்திய மோசேயும் யூத இனத்தவர்தான்.

இன்று இஸ்ரேல் உள்ள பிரதேசத்துடன் அண்டிய பகுதி அன்று கானான் என்று அழைக்கப்பட்டது. அங்குதான் யூதர்கள் வாழ்ந்து வந்தனர்.

உலக நாகரீகத்தின் உச்சாணிக் கொம்பில் இருந்த ரோமர்கள் யூதர்களின் நாட்டை ஆக்கிரமித்தனர்.

எகிப்திய மன்னர்களும் யூதர்களை அடிமைப்படுத்தினார்கள். சிறையிலிட்டார்கள்.

எகிப்தில் அடிமைப்பட்டுக்கிடந்த யூதர்களை கானான் தேசத்துக்கு அழைத்து மீளக் குடியேற்றியவர் மோசே என்று விவிலிய நூல்கள் கூறுகின்றன.

குடியேறிய கானான் தேசத்திலும் யூதர்களுக்கு தொல்லைகள் தொடர்ந்தன.

ஐரோப்பாவின் பல நாடுகளுக்கு தஞ்சம் தேடி ஓடினார்கள் யூதர்கள்.

ஜேர்மனி, போலந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் குடியேறிய யூதர்கள் தம் மூளையின் பலத்தைக் காட்டினார்கள்.

விஞ்ஞானிகளாகவும், மருத்துவர்களாகவும் பல துறைகளில் நிபுணர்களாகவும் மாறினார்கள்.

அமெரிக்காவையும் விட்டு வைக்கவில்லை. அங்கும் கால்வைத்து வட்டிக்குப் பணம் கொடுப்போராக மாறினார்கள்.

அமெரிக்காவின் பொருளாதாரமே யூதர்களின் கையில்தான் இருக்கிறது என்று ஒரு காலத்தில் பேசப்பட்டது.

யூதர்களின் வளர்ச்சி ஐரோப்பிய நாடுகளில் வெறுப்பாக உருவெடுத்தது.

அதனால் யூத இனத்துக்கு எதிராக வெறித்தனமான பிரச்சாரம் செய்த ஹிட்லருக்கு வரவேற்பு கிடைத்தது.

யூத இனத்தை கருவறுப்பது என்பதே ஹிட்லரின் கோசமாக இருந்தது.

ஹிட்லர் பதவிக்கு வந்த பின் இலட்சக் கணக்கான யூதர்கள் சித்திரவதை முகாம்களில் அடைக்கப்பட்டனர். கொன்று குவிக்கப்பட்டனர்.

ஹிட்லரின் பிடியில் இருந்து தப்பிக் கொள்ள யூதர்கள் இஸ்ரேல் நோக்கி ஓடினார்கள். ஓடியவர்களுக்கு நிலம் போதவில்லை.

அதனால் நிலம் பிடிக்க ஆரம்பித்தார்கள். அயலிலுள்ள அரபுக்களின் கோபத்தையும் சம்பாதித்தார்கள்.

ஜெரூசலம் தமது பாரம்பரியப் பகுதி என்று கூறிய இஸ்ரேல் அதனை மீட்டெடுக்கப் போவதாக அறிவித்தது.

பாலஸ்தீனியர்களை இஸ்ரேலின் அறிவிப்பு கோபப்பட வைத்தது.

பாலஸ்தீன விடுதலை இயக்கம் 1964ம் ஆண்டு ஜுன் 2ல் உதயமானது.

அரபு நாடுகள் உதவி செய்தன. ஆயுதங்களை அள்ளிக் கொடுத்தன. கொரில்லா தாக்குதல்களில் பாலஸ்தீனியர்கள் குதித்தனர்.

இந்தக் கட்டத்தில்தான் எகிப்து, சிரியா ஜோர்டான் ஆகிய மூன்று நாடுகளும் இஸ்ரேல் மீது போர் தொடுத்தன.

எனினும் போரில் இஸ்ரேல் வென்றது. புதிய பகுதிகளையும் பிடித்துக் கொண்டது.

மத்திய கிழக்கில் இஸ்ரேலிய பாலஸ்தீன பிரச்சனை அமைதிக்கு வேட்டு வைப்பது தொடர்ந்தது.

எத்தனையோ சமாதான முயற்சிகள்.

சில பேச்சளவில் இருந்தன. சில இடையிலே முறிந்தன.

### மாறியது காட்சி!

இப்போது நடக்கவே முடியாது என்று நினைத்திருந்த மாற்றம் ஏற்பட்டு விட்டது.

45 ஆண்டுகால பிரச்சனைக்கு தீர்வு காணும் திட்டவட்டமான திசை நோக்கி காலடிகள் எடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இஸ்ரேல் என்ற நாட்டை அங்கீகரிக்க மறுத்த பாலஸ்தீன விடுதலை இயக்கம் இப்போது தனது நிலையை மாற்றிக் கொண்டு விட்டது.

பாலஸ்தீன விடுதலை இயக்கம் பயங்கரவாத இயக்கம் என்று பறைசாற்றிய இஸ்ரேலும் தன் கருத்தை மாற்றிக் கொண்டுவிட்டது.

ஒப்பந்தங்கள் உருவாக்கப்படுகின்றன. எனினும் ஜென்மப் பகைவர்களோடு நட்பை நாடிச் செல்லுவதா? வேண்டாம் என்று பாலஸ்தீனிய தீவிரவாதிகள் குரல் எழுப்பியிருக்கின்றனர்.

ஆனால் இஸ்ரேலில் சமாதானத்திற்கு ஆதரவான பதாகைகளோடு மக்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர்.

யாசிர் அரபாத் ஒரு துரோகி என்று அதி தீவிரவாதியான அபுமூஸா பிரகடனம் செய்திருக்கிறார். கொலை மிரட்டலும் விடுத்திருக்கிறார்.

வேறு சில தீவிரவாதக் குழுக்களும் கொதித்திருக்கின்றன.

யாசீர் அரபாத் அச்சுறுத்தல்களுக்கு அசைந்து கொடுக்கவில்லை.

சமாதானத்திற்கான முயற்சிகளில் தடைகள் சகஜம். ஆனால் முயற்சிகளில் ஈடுபடுவோர் மத்தியில் பிரச்சனைகளை தீர்க்கும் உறுதி அவசியம்.

பாலஸ்தீன-இஸ்ரேலிய பேச்சுக்களும், சமாதான முயற்சிகளும் இலங்கையின் இனப்பிரச்சனை தீர்வுக்கும் ஒரு முன்னுதாரணமாக மாற வேண்டும்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் எத்தனையோ எதிர்பாராத மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன.

- ★ சோவியத் யூனியன் சின்னா பின்னமானது.
- ★ பேர்லின் சுவர் தகர்ந்து கிழக்கு மேற்கு ஜேர்மனிகள் ஒன்றாகி விட்டன.
- ★ தென் ஆபிரிக்காவின் நிறவெறி அரசு கறுப்பின மக்களுக்கு ஆட்சியில் பங்கு வழங்க முன்வந்திருக்கிறது. தேர்தலுக்கு ஆயத்தம் செய்யப்படுகிறது.

இப்போது இஸ்ரேலிய பாலஸ்தீன பிரச்சனைக்கு ஒரு தீர்வு நெருங்கி வருகிறது.

அகில உலகமும் அதனை வரவேற்கிறது- வாழ்த்துச் சொல்கிறது. இலங்கையும் வரவேற்றுள்ளது.

இங்கும் மாற்றங்களின் வெளிச்சம் தெரியுமா? தெரிய வேண்டும். ●

# 89ல் நடந்ததற்கு இன்று உரிமை கோரல்!
# "அமுதர் கொலை! துரோகத்திற்கான விலை"!!

*தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் கொழும்பில் வைத்து 1989ம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார். (13.7.89)*

*அவரோடு முன்னாள் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரனும் கொல்லப்பட்டார்.*

*திரு. அமிர்தலிங்கத்தின் மெய்ப் பாதுகவலர்கள் கொலையாளிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். கொலையாளிகள் மூவரும் கொல்லப்பட்டனர்.*

*கொல்லப்பட்டவர்களில் ஒருவர் விசு. அவர் புலிகள் இயக்கத்தின் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர் என்று இனங் காணப்பட்டார்.*

*ஆனால் புலிகள் அமைப்பினர் அப்போது அதனை முற்றாக மறுத்தனர்.*

*விசு தமது இயக்கத்தில் இருந்து ஏற்கனவே விலக்கப்பட்டுவிட்டார் என்று புலிகள் அமைப்பினர் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தனர்.*

*இப்போது புலிகள் அமைப்பினரால் விசுவுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டுள்ளது. அவருக்கு மேஜர் அந்தஸ்து வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.*

*யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினரால் நடத்தப்படும் 'ஈழநாதம்' பத்திரிகையில் 'துரோகத்திற்குத் தண்டனை வழங்கியவர் விசு' என்று ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது.*

*பாரிசில் இருந்து புலிகள் அமைப்பினரால் வெளியிடப்படும் 'எரிமலை' என்னும் சஞ்சிகை ஆவணி 93 இதழில் அதனை மறுபிரசுரம் செய்துள்ளது.*

*அதிலிருந்து சில முக்கியமான பகுதிகள் கீழே தரப்படுகின்றன.*

■

"விசுவோட பழகினா அவனில் வெறுப்பு வைக்க மாட்டீங்கள். அந்தமாதிரித் தான் பழகுவான். பொதுவா, எல்லாரையும் எல்லாருக்கும் பிடிக்காது. ஆனா விசு எல்லாருக்குமே பிடிச்சவனா நடந்து கொள்வான். ஒவ்வொரு விசயத்தையும் தெளிவா, ஆறுதலா எல்லோருக்கும் விளங்கக் கூடிய மாதிரிக் கதைக்கிற தன்மை அவனில் இருந்தது. அதனாலதான் இயக்கத்துக்கு புதிசா வந்த பொடியளெல்லாம் விசுவில அன்பாய் இருந்தாங்கள். இவன் அவையோட பழகிற முறை, போராட்டத்தைப் பற்றி விளங்கப் படுத்துற முறை வேறு ஆராலையும் மறக்க முடியாது." இது வன்னிப் பகுதியில் விசுவின் காலப்பகுதியில் பணியாற்றிய ஒரு போராளியின் அனுபவங்கள்.

எப்போதும் சீராக உடையணிந்து சிரித்த முகத்துடனே காணப்படும் இவனை எளிதில் எவரும் மறந்து விட முடியாதுதான். இவன் இயக்கத்துடன் தொடர்பு கொண்ட காலத்தில், இரட்டை இலக்கத்தில் மட்டுமே அங்கத்தவர்கள் இருந்தனர். புலிகள் இயக்கம் சர்வதேச ரீதியாக பிரபலம் அடைந்திருந்தாலும், அங்கத்தவர் தொகை அந்தளவிலேயே இருந்தது. புலிகள் யாரென்பதை இனங் காண்பது கடினம். ஆனாலும் புலிகளைச் சந்திக்க வேண்டும் என்று விசுவும், அவனது நண்பனொருவனும் ஆவலாயிருந்தனர். ஏனெனில் அக்கால கட்டத்தில் புலிகள் இயக்கத்தின் பெயரால் மோசடிப் பேர்வழிகள் துண்டுப் பிரசுரம் விடுத்துக் கொண்டிருந்தனர். தாங்களே உண்மையான புலிகள் இயக்கம் என்ற மாயையை மக்கள் மத்தியில் திணிக்க முயன்று கொண்டிருந்தனர். தமது சகாவான சுந்தரத்தைப் பிரபாகரன் குழு கொன்று விட்டதாக ஓங்கி ஒலித்தனர். யார் உண்மையான புலிகள் எனத் தெரியாத நிலையில் விடுதலை விரும்பிகள் தத்தளித்தனர். ஒரு நாள் இயக்கத்தின் துணைத்தலைவராக விளங்கும் மாத்தையா சைக்கிளில் துண்டுப் பிரசுரம் விநியோகித்தபடி வந்தார். "துரோகத்துக்குப் பரிசு" என்ற தலைப்பிலான அந்தத் துண்டுப் பிரசுரத்தில், சுந்தரம் மீது மரணதண்டனை விதிக்கப்பட்டமைக்கான காரணங்கள் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருந்தன. கட்டுப்பாடான அமைப்பைக் கொண்ட இயக்கத்திலிருந்து, இயக்கத்துக்குச் சொந்தமான துப்பாக்கியுடனும் பணத்துடனும் மறைந்தமை இயக்கக் கட்டுப்பாட்டை மீறித் தனியொரு இயக்கம் ஆரம்பிக்க முற்பட்டமை ஆகிய காரணங்களுக்காக இத்தண்டனை வழங்கப்பட்டது என்று அதில் குறிப்பிடப் பட்டிருந்தது. புலி இலச்சினை பொறிக்கப் பட்ட அந்தச் சின்னத்தைக் கண்டதும் உண்மையான புலிகளைக் கண்ட மகிழ்ச்சியிற் திளைத்தனர் விசுவும், அவனுடைய நண்பனும்.

இயக்கத்துடன் தம்மை இணைத்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டனர். அவ்வேளை, "உங்களது கோரிக்கை ஆராயப்படும்" எனப் பதில் கிடைத்தது.

அந்தக் காலத்தில் இருந்த வடிகட்டல் முறையில் இவர்கள் தேறினர். எனவே, இவர்கள் ஆதரவாளர்களாகச் செயற்பட அனுமதிக்கப்பட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் ஜீப் மீதான முதலாவது தாக்குதலுக்கு விசுவே தகவல், மற்றும் தங்குமிட ஏற்பாடுகளையும் கவனித்தான். எத்தனை மணிக்கு ஜீப் வருகிறது? என்னென்ன ஆயுதங்கள் வைத்திருக்கின்றனர்? எத்தனை பேர் வருகின்றார்கள்? எல்லாம் தினசரி குறிப்பெடுத்து வழங்கியதன் மூலம், அதற்கேற்ற வகையில் திட்டமிட்டு அத்தாக்குதல் வெற்றிகரமாக அமைவதற்கு உதவி செய்தான். அத்தாக்குதலில் நான்கு சிறிலங்காவின் பொலிஸ்காரர்கள் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

காரைநகர் முகாமிலிருந்து புறப்பட்டுவரும் கடற்படையினருக்கு எதிரான தாக்குதலை மேற்கொள்வதற்காக பொன்னாலைப் பாலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி எதிர்பாராத விதத்தில் வெற்றியளிக்காது போகவே அங்கிருந்து வானில் தப்பிச் சென்ற போராளிகள் நேரே இவனிடந்தான் சென்றனர். இந்தமாதிரியான நேரங்களில் விசுவிடம் போவதே அனைவருக்கும் பாதுகாப்பு எனக் கருதினர் போராளிகள். எல்லோரையும் மறைத்து வைத்திருந்து, காப்பாற்றிப் பத்திரமாக அனுப்பி வைத்தான். போராட்டம் வளர்ச்சி பெறாத காலத்தில் இதெல்லாம் மதிப்பிட முடியாத பணிகள் தான். அடுத்த வீட்டுக்கே தெரியாமல் இவ்வளவும் செய்ய வேண்டும். விசுவால் அது முடிந்தது.

தொடர்ந்து 1983ம் ஆண்டில் இவன் முழுநேர உறுப்பினராக இணைத்துக் கொள்ளப்பட்டான். இராணுவப் பயிற்சிக்காகக் கடல் கடந்து சென்ற அவன், பயிற்சி முடிந்ததும் அரசியல் வேலைகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசியல் கற்கலானான். அது முடிந்ததும் தாய்நாட்டிற்கு மீண்டும் திரும்பிய இவன், வன்னி மண்ணில் எதிரிகள் மீது இலக்குப் பார்த்தான்.



விசு
இராசையா அரவிந்தராம்

**நாங்கள்தான் செய்தோம்" என்று நான்கு வருடங்களின் பின் உரிமை கோரியுள்ளனர் புலிகள்.**



அமரர் அமிர்தலிங்கம்

1987ஆம் ஆண்டு வடமராட்சியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையின் பின் நெல்லியடியில் உள்ள மகாவித்தியாலயத்தில் அமைந்திருந்த இராணுவ முகாம் மீது நடைபெற்ற முதற் கரும்புலித் தாக்குதலில் இவனது பங்கு மகத்தானது. இது இவனின் சொந்த இடமாகையால், மேலதிகப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. முகாமினுள் நுழைந்த முதற் குழுவினுள் ஒருத்தனாகவும் இருந்தான். இவனோடு கூடச் சென்ற கமலும் வின்சனும் மரணித்தனர். இவனது கண்ணிலும் ஏதோ ஒரு சிதறல் பறந்து வந்து தாக்கியது. இதனால் பார்வையில் பாதிப்பு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து வைத்தியத்திற்காக இந்தியா சென்றான். இந்திய இராணுவத்துடனான மோதல் தொடங்கியதும், இவனுக்கு தான் ஒரு நோயாளி என்பதை விட, தான் ஒரு போராளி என்ற உணர்வே தலைதூக்கியது. பூரணமாகக் குணமாகாத கண்ணுடன் தமிழீழத்தை வந்தடைந்தான். இந்திய இராணுவத்துடனான மோதல்களில் இவன் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், உளவுப் பிரிவின் பொறுப்பும் இவனிடம் ஒப்படைக்கப் பட்டது. ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் வெற்றிக்குச் சரியான தலைமை, தியாக உணர்வு என்பவற்றுடன் தகவற் தொடர்பு, உளவுஎன்பனவும் முக்கியமானவையாகும். இந்த இரண்டிலும், அந்த விடுதலை இயக்கம் போதுமான வளர்ச்சியைப் பெற்றிருக்காவிடின், விடுதலை விரிவுபடுத்தப்பட மாட்டாது. இப்படியான பொறுப்பு மிக்க பணிக்கு இவன் நியமிக்கப்பட்டதிலிருந்து, இவன் மீது இயக்கத்தலைமை கொண்டிருந்த நம்பிக்கையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

எங்கள் தேசிய இன விடுதலையைத் தமது சொந்த நலனுக்காக விற்ற துரோகிகளுக்கான தண்டனை வழங்கப்பட்டேயாக வேண்டும். துரோகிகளுக்கான தண்டனையை விரைவுபடுத்தாவிடில், தமிழீழ மண்ணில் மரணங்கள் தொடர்கதையாக இருக்கும்.

இப்பணியை மேற்கொள்ளும் போது, தான் திரும்பி வர முடியாது என இவனுக்கும், இவனது தோழர்களுக்கும் நன்றாகவே தெரியும். அப்படியிருந்தும் துரோகிகளைத் தேடிச் சென்றனர். அங்கே, "இத்தாலிய இளைஞர்களை கரிபால்டி அழைத்தது போல, இங்குள்ள இளைஞர்களை நான் அழைக்கின்றேன்" என்ற முழக்கமிட்ட அமிர்தலிங்கம், சிங்களச் சிப்பாய்களின் துப்பாக்கிகளில் நம்பிக்கை வைத்தபடி......

தனிநாட்டுக் கோரிக்கை தற்கொலைக்கு ஒப்பான செயல் என்று ஒரு காலத்தில் கூறியவருக்கு, தனிநாட்டுக்கான போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பது தற்கொலைக்கு ஒப்பானது; துரோகத்தனமானது என்று வரலாறு கூறிற்று.

'துரோகத்துக்குப் பரிசு' என்ற பிரசுரம் கையிற் கிடைத்ததன் மூலம், தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்ட விசு, துரோகத்துக்குப் பரிசு கொடுத்த பின், தன்னை இந்த மண்ணுக்குக் கொடுத்துக் கொண்டான். கூடவே தோழர்கள் இருவரும். ■

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


## அலசுவது - இராஜதந்திரி

# யாழ்ப்பாண நூலகத்தை நினைவுபடுத்தும் ஜே.ஆர். ஞாபகர்த்த நிலையம்!

அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 81வது பிறந்த தினம் கடந்த ஆகஸ்ட் 30ந் திகதியன்று நுவரெலியாவில் விமரிசையான முறையில் கொண்டாடப்பட்டிருந்தது.

அமைச்சர் தொண்டாவின் இப்பிறந்த தின வைபவம் அவரது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள், மற்றும் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குதூகல வைபவமாக இடம் பெற்றிருந்தது.

தமது அன்பையும், நன்மதிப்பையும் வெளியிடும் வகையில் தொண்டாவின் அபிமானிகள் மலர்மாலைகளை, அதுவும் தடித்த ஆளுயரமான மாலைகளை தொண்டாவுக்கு அணிவித்து தமது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தனர்.



பிறந்த நாளைக் கொண்டாடுபவருக்கு இவ்வாறு வாழ்த்துக்கள் தெரிவிப்பதும், பரிசுகள் வழங்குவதும் சாதாரண வழக்கமாகும். ஆனால் பிறந்த நாளுக்குரியவர் தன்னை வாழ்த்துவோருக்கு பரிசையோ வெகுமதியையோ வழங்குவது மிகவும் அரிதாகவே இடம் பெறும் ஒரு நிகழ்வாகும்.

இந்த வகையில் அமைச்சர் தொண்டமானும் தனது பிறந்த நாள் பரிசாக இலங்கையின் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதில் தமக்குள்ள கரிசனையை மனந்திறந்து வெளியிட்டுள்ளார்.


அமைச்சர் திரு.எஸ்.தொண்டமான் தமது 81வது பிறந்த நாள் வைபவத்தைக் கொண்டாடியிருந்த அதே சமயம், இலங்கையின் மற்றுமொரு சிரேஷ்ட அரசியல்தலைவர் தமது ஞாபகார்த்தமாக தாம் உயிரோடிருக்கும் போதே ஒரு ஞாபகார்த்த நிலையத்தை நாட்டு மக்களிடம் கையளித்திருந்தார்.

அந்த சிரேஷ்ட அரசியல் தலைவர் வேறு யாருமல்ல; அவரே இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பரிணமித்திருந்த 'சாட்சாத்' ஜே.ஆர். ஜயவர்தனா ஆவார்.

திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் ஞாபகார்த்த நிலையம், அரசில், வரலாறு,

# பேச்சுவாா்த்தைகளில் பங்குபற்ற விரும்பும் புலிகள்; ஆட்சியாளர்களும் களத்தில் குதிக்க வேண்டும்!

"புலிகளும் பேச்சுவாத்தைகள் குறித்த தமது நிலைப்பாட்டை வெறுமனே வானொலி மற்றும் பத்திரிகைகள் வாயிலாக மட்டும் அறிவிக்காமல் காத்திரமான ராஜதந்திர அணுகுமுறைகள் மூலம் வெளிப்படுத்த வேண்டும்"



மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்த பல்வேறுபட்ட தகவல்களையும் உள்ளடக்கிய ஒரு சுவடிகள் நிலையமாகவும், மறுபுறத்தே பெறுமதி மிக்க நூல்களைக் கொண்டுள்ள ஒரு நல்ல நூலகமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவை த்விர திரு. ஜே.ஆர் ஜயவர்த்தனா 1978ம் ஆண்டு முதல் 1989ம் ஆண்டுவரை ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் வெளிநாட்டுத் தலைவர்கள் மற்றும் பல்வேறுபட்ட முக்கியஸ்தர்களால் அவருக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புக்கள், வெகுமதிகள் ஆகியனவற்றையும் உள்ளடக்கியதாகவே இந்த ஞாபகார்த்த மண்டபம் காட்சி தருகின்றது.

திரு.ஜே.ஆர் ஜயவர்த்தனா ஞாபகார்த்த நிலையம் அமைந்துள்ள கட்டிடம் அவரது தகப்பனாரின் இல்லமாகும். திரு. ஜயவர்த்தனாவின் தகப்பனார் இலங்கையின் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர்களில் ஒருவராவார்.

இதுதவிர திரு. ஜயவர்த்தனாவின் மூத்த உறவினர்கள் பலரும் இந்நாட்டின் சட்டத்துறை, மற்றும் அரசியலில் பெருமளவு ஈடுபட்டவர்களாகவே விளங்கியிருந்தனர்.

எனவே அவர்களின் சட்ட நூல்கள், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த தஸ்தாவேஜுக்கள் என்பன திரு. ஜயவர்த்தனாவிடம் பெருமளவில் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

திரு.ஜே.ஆர் ஜயவர்த்தனா ஜனாதிபதிப் பதவியிலிருந்தும் ஓய்வு பெற்று மூன்று ஆண்டுகளின் பின்னர் இந்த ஞாபகார்த்த நிலையத்தை உருவாக்கியுள்ளார். நூல்கள், மற்றும் பெறுமதிமிக்க சுவடிகள் என்பவற்றின் மீது திரு.ஜே.ஆர் ஜயவர்த்தனா கொண்டுள்ள கரிசனையையும், விருப்பத்தையும் வெளிப்படுத்துவதாகவே கொழும்பு தர்மபால மாவத்தையில் அமைந்துள்ள அவரது ஞாபகார்த்தக் கட்டிடம் விளங்குகின்றது.

இவ்வாறு தமது வாழ்நாளில் நாட்டு மக்களின் நலன்கருதி, குறிப்பாக எதிர்காலச் சந்ததியினரை மனதில் நிறுத்தி இத்தகையதொரு நிலையத்தை திரு. ஜயவர்த்தனா நாட்டு மக்களுக்கென நிறுவியிருப்பது ஒரு நல்ல கைங்கரியமாகவே இருக்கின்றது.

தென்னிலங்கையில் வாழும் இன்றைய சந்ததியினர் திரு. ஜயவர்த்தனாவின் இந்த நடவடிக்கையை நிச்சயம் பாராட்டவே செய்வர். எனவே நூல்கள், மற்றும் வரலாற்றுக் குறிப்புக்கள், சுவடிகள் மீது தமக்கிருக்கும் அபரிமிதமான விருப்பத்தை தமது பெயரில் ஒரு ஞாபகார்த்த நிலையமாகவே உருவாக்கியிருக்கும் திரு.ஜே.ஆர் ஜயவர்த்தனா, தமது ஆட்சிக்காலத்தின் போது 1982ம் ஆண்டில் யாழ்ப்பாண பொதுசன நூலகம் எரிந்து சாம்பாரான சம்பவம் குறித்துக் கொண்டிருந்த நிலைப்பாடு எத்தகையது என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

யாழ் நகருக்குள் பிரவேசிக்கும் போது கம்பீரமாக திராவிடக் கட்டிடக் கலையம்சத்துடன் காட்சிதரும் அழகிய மாடிக் கட்டிடமாகவே யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் விளங்கியிருந்தது.

தமிழர் பூமியான யாழ்ப்பாணத்தில் நடுநாயகமாக விளங்கியிருந்ததால் யாழ் பொதுசன நூலகம் பெருமளவு தமிழ் நூல்களையே கொண்டிருக்கும். எனவே அந்த நூலகத்தை எரிப்பதன் மூலம் தமிழ் நூல்கள் பலவற்றை அழித்து விடலாம் என்று யாழ் நூலகத்துக்குத் தீயிட்டவர்கள் கருதியிருக்கலாம்.

ஆனால் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் காணப்பட்ட நூல்களில் பெரும்பாலானவை மிகப் பெறுமதி வாய்ந்த ஆங்கில நூல்களே என்பதை அந்நூலகத்துக்குத் தீவைத்த காடையர் கூட்டம் அன்று அறிந்திருக்கவில்லை.


சுமார் ஒரு லட்சம் நூல்கள் அன்று அக்கினிக்கு இரையாகியிருந்தன. இதனையடுத்து ஆசியாக் கண்டத்தின் சிறந்த நூலகங்களில் ஒன்றாக மதிக்கப்பட்ட யாழ் பொதுசன நூலகம், ஒரு சாம்பல் மேடாகக் கருகிச் சிதையலாயிற்று.

இது தவிர யாழ் பொதுசன நூலகம் தீயிடப்பட்ட அதே இரவிலேயே யாழ்ப்பாணத்தின் பிரபல பத்திரிகைக் காரியாலயமான 'ஈழநாடு' பத்திரிகை நிறுவனமும் பொதுசன நூலகத்தை எரித்த காடையர்களால் தீக்கிரையாக்கப்பட்டிருந்தது.

இரண்டாம் உலகப் போர் தீவிர மடைந்திருந்த போது ஜெர்மன் சர்வாதிகாரி அடோல்வ் ஹிட்லரின் விமானப் படை நேசநாட்டு நிலைகளின் மீது குண்டுகளைப் பொழிந்திருந்தது. அழகிய ஐரோப்பிய நகரங்கள் பலவற்றின் கட்டிடங்கள், குடியிருப்புக்களை ஹிட்லரின் விமானப்படை தவிடு பொடியாக துவம்சம் செய்திருந்தது.

ஆனால் அந்த விமானப்படைக்கு ஹிட்லரிடமிருந்து கண்டிப்பான உத்தரவு ஒன்றும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. "எக்காரணம் கொண்டும் லண்டன் நூல் நிலையம் மீது கைவைக்கக்கூடாது" என்பதே ஹிட்லரின் அந்த உத்தரவாகும்.

எனவே சர்வாதிகாரி ஹிட்லர் கூட தனது ஆளுமையை விஸ்தரிக்கும் கொடிய யுத்தத்தில் குதித்திருந்த போதிலும், லண்டனின் பழமை வாய்ந்த நூலகக் கட்டிடம் போரினால் எதுவித சேதத்துக்குமுள்ளாகக்கூடாது என்பதில் உறுதியாக இருந்திருந்தார்.



1982ம் ஆண்டு யாழ் பொதுசன நூலகம் தீர்வைக்கப்பட்ட சம்பவம் யாழ்ப்பாணத்தவர் மனதைப் புண்படுத்தியிருந்த வேளையிலேயே 1983ம் ஆண்டு கொழும்பில் ஆடிக்கலவரம் மோசமான முறையில் வெடித்திருந்தது.

கொழும்பில் தமிழர்களின் உயிர், உடமைகள் தீப்பிழம்பாகியிருந்தன. இலங்கையின் சிரேஷ்ட அரசியல் பிரமுகர்களில் ஒருவரும், பிரபல சட்டத்தரணியும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான திரு.மு. சிவசிதம்பரத்தின் கொழும்பு வாசஸ்தலத்தைக் கூட கலகக் கும்பல் நாசமாக்கிவிட்டிருந்தது. திரு.மு. சிவசிதம்பரத்தின் சட்ட நூல்கள், மற்றும் பெறுமதிமிக்க தஸ்தாவேஜுக்கள் பலவற்றையும் கலகக்காரர்கள் சேதமாக்கிவிட்டிருந்ததுடன், அவர் தமது வீட்டின் அலுவலக அறையில் வைத்திருந்த புத்தபகவானின் சிலையையும், கலகக்கும்பல் சேதப்படுத்தியிருந்தது.

எனவே இத்தகைய நிகழ்வுகள் பத்தாண்டுகளுக்கு முன்பு இலங்கையில் கோரத்தாண்டவம் ஆடியபோது, இலங்கையின் ஆட்சியாளராக அதுவும் பூரண நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக திரு.ஜே.ஆர் ஜயவர்த்தனாவே பதவியிலிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று இதே ஜே.ஆர் ஜயவர்த்தனா தமது நூல்களையும், சேகரிப்புக்களையும் ஒன்று சேர்த்து தமது பெயரிலேயே ஒரு ஞாபகார்த்த நிலையத்தையும் நிறுவியுள்ளார்.

ஜப்பான் நாட்டவரைப் பொறுத்தவரை திரு.ஜே.ஆர் ஜயவர்த்தனா மீது அவர்களுக்கு மிகுந்த நல்லபிமானம் காணப்படுகின்றது.

இரண்டாம் உலகப் போரின் போது தென்கிழக்காசியா, மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் நேச நாட்டுப் படைகளுக்கெதிராக ஜப்பான் பலத்த தாக்குதல்களை மேற்கொண்டிருந்தது.

அமெரிக்காவின் கடற்படைத்தளங்கள் பலவும் ஜப்பானிய விமானங்கள், மற்றும் போர்க்கப்பல்களின் மூர்க்கத்தனமான தாக்குதல்களுக்குள்ளாகியிருந்தன. ஜப்பானிய விமானங்களின் தாக்குதல் நடவடிக்கைகள் இலங்கை வரை விஸ்தரிக்கப்பட்டிருந்தன.

அமெரிக்காவின் பேர்ள் துறைமுகத்தை (Pearl-Harbour) நிலை தளரச் செய்திருந்த ஜப்பானிய விமானங்கள், இலங்கையில் திருகோணமலைத் துறைமுகம், மற்றும் இரத்மலானை விமானத் தளப்பிரதேசம், கொழும்பு நகரப்பகுதிகளிலும் குண்டு வீச்சுக்களை நடத்தியிருந்தன.

ஜெர்மனிய நாஸிபடைகளை ஐரோப்பாவில் எதிர்கொண்டிருந்த நேச நாட்டுப் படைகளுக்கு, தென்கிழக்காசியா, பசுபிக் பிராந்தியத்தில் ஜப்பானின் தாக்குதல்கள் பெரும் சவாலாக இருந்தன.

இதனையடுத்தே அமெரிக்கா ஜப்பானின் மீது இரு தடவைகள் அணுகுண்டுகளை வீசியிருந்தது. இந்த அணுகுண்டுவீச்சு மனிதகுலம் கண்டிராத படுபாதகமாக விளங்கியிருந்த போதிலும், இரண்டாம் உலகப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதில் இக்குண்டு வீச்சும் ஒரு முக்கிய காரணமாகவே விளங்கியிருந்தது.

இதனையடுத்து 1951ம் ஆண்டு அமெரிக்காவின் சான்பிரான்ஸிஸ்கோ மாநகரில் இடம் பெற்ற அமைதி மகாநாடொன்றில் ஜப்பானை மீண்டும் உலக சமூகத்துடன் ஒன்றினைப்பது குறித்துப் பரிசீலிக்கப்பட்டது. அப்போது ஜப்பானுக்காக குரல் கொடுத்து திரு.ஜே.ஆர் ஜயவர்த்தனா சான்பிரான்ஸிஸ்கோவில் உரையாற்றியிருந்தார்.

"பகைமையைப், பகைமையினால் வெல்ல முடியாது. அன்பினாலேயே பகைமையை வெல்லமுடியும்" என்று திரு.ஜயவர்த்தனா அன்று குறிப்பிட்டிருந்ததுடன், ஜப்பானை உலக சமூகம் எற்றுக்கொள்ளச் செய்வதில் அன்று பெரும்பங்காற்றியிருந்தார்.

இதே ஜே.ஆர். ஜயவர்த்தனா இருபத்தியேழு (27) ஆண்டுகளின் பின்னர் இலங்கையின் பூரண நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக 1978ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட பின்னர் இலங்கை அரசியலில் இனப்பிரச்னை தொடர்பாக பலத்த சவால்களை எதிர்நோக்கியிருந்தார்.

அப்போதெல்லாம், தாம் முன்பு நிகழ்த்திய சான்பிரான்ஸிஸ்கோ உரையிலிருந்தும் வேறுபட்ட கருத்துக்களையே அவர் வெளியிட்டிருந்தார்.

"போர் என்றால் போர். சமாதானம் என்றால் சமாதானம்" என்று குறிப்பிட்டு வடக்கு-கிழக்குப் பிரச்னையை இராணுவ ரீதியாக கையாள்வதில் திரு. ஜயவர்த்தனா முனைப்பாக இருந்தார்.

இதன் விளைவாகவே இன்று இலங்கையின் இனப்பிரச்னை விஸ்வரூபமெடுத்த நிலையில் காணப்படுகின்றது.

எனவே, அனர்த்தங்கள் நிறைந்துள்ள இத்தருணத்தில் தீர்வொன்றை எட்டி இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதே இன்றைய ஆட்சியாளர்களினதும், அரசியலாளர்களினதும் தலையாய பொறுப்பாக இருக்கின்றது.

இந்தவகையில் ஏறத்தாள திரு.



ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் சமகால அரசியலாளரும், இன்று இலங்கையில் தொடர்ந்து அரசியலிலீடுபட்டுள்ள முதிர்ந்த அரசியல்வாதியுமான அமைச்சர் எஸ். தொண்டமான், இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக சமரசப் பேச்சுக்களில் ஈடுபடத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

திரு. தொண்டமானின் இந்த அறிவிப்பு துணிகரமானதொன்றாகும்.

இதேவேளை புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்டன் பாலசிங்கமும் கடந்தவாரம் பி.பி.ஸி. வானொலிக்கு வழங்கிய பேட்டியொன்றில் புலிகள் பேச்சுக்களை நடத்தத் தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ளார். கூடவே சமஷ்டி முறையை அடிப்படையாகக் கொண்ட தீர்வு யோசனையைப் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தவிர புலிகளின் நிலைப்பாட்டினை முழுமையாக அறிந்து கொள்ளும் வகையில் தென்னிலங்கையின் கல்விமான்கள், புத்திஜீவிகள், அரசியலாளர்கள் யாழ்குடாநாட்டுக்கு விஜயம் செய்யவேண்டுமெனவும், டாக்டர் அன்டன் பாலசிங்கம் தமது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

புலிகள் பேச்சுக்களுக்கு வர வேண்டும் என்பதே ஆட்சியாளர்களின் கோரிக்கையாக இருந்துவருகின்றது. இந்நிலையில் புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்டன் பாலசிங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் புலிகளுக்கிருக்கும் விருப்பத்தை பிபிஸி மூலமாக வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் திரு எஸ். தொண்டமானும் சமரசப் பேச்சுக்களில் உதவத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

எனவே ஆட்சியாளர்களும் களத்தில் குதித்து பேச்சுக்களில் ஈடுபட முன்வர வேண்டும். இதன் மூலமே ஓர் உறுதியான தீர்வை நோக்கி நம்பிக்கையுடன் காலடி எடுத்து வைக்க முடியும்.

புலிகளும் பேச்சுவாத்தைகள் குறித்த தமது நிலைப்பாட்டை வெறுமனே வானொலி மற்றும் பத்திரிகைகள் வாயிலாக மட்டும் அறிவிக்காமல் காத்திரமான ராஜதந்திர அணுகு முறைகள் மூலம் வெளிப்படுத்த வேண்டும்.

இத்தகைய வெளிப்படுத்தலின் மூலமே அரசியல் அவதானிகளின் நம்பிக்கையையும் அவர்கள் பெற்றுக் கொள்வதுடன், அவர்கள் மீதான சந்தேகங்களயும் விலக்கிக் கொள்ள முடியுமெனக் கருதலாம்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# அம்சமான அழகுக்கு!

★ உயரமான தோற்றமுடைய பெண்கள் குதிக்கால் உயர்ந்த பாத அணிகளைக் கூடியவரை விலக்க வேண்டும். தரையோடு படிந்த அடிப்பாகம் கொண்ட பாத அணிகளை அணிய வேண்டும்.

★ சற்று உடல் பருமனாக உள்ள பெண்கள் மெலிந்த தோற்றம் பெற வேண்டும் என்றால் சற்று அழுத்தமான வண்ணம் கொண்ட ஆடைகள் அணிய வேண்டும். அப்போது உடல் பருமன் அதிகமாகத் தெரியாது.

★ புருவங்களை வளைவாகத் தீட்டாமல் சற்று நீளவாக்கில் அமைத்தால் உருண்டையான முகத் தோற்றமுடைய பெண்களுக்கு அழகாக இருக்கும்.

★ அளவுக்கு மீறித் தங்கள் உடலின் நிறம் கறுப்பாக இருக்கிறது என்று எண்ணும் பெண்கள் பசுப்பாலுடன் கசகசாவை அரைத்து, குளிப்பதற்கு முன் உடல் முழுவதும் தடவி வைத்திருந்து சிறிது பொறுத்துக் குளித்து விடலாம். நாளடைவில் உடலின் நிறம் சற்று வெளுப்பாகும். உடல் ஆரோக்கியமும் குறையாது.

# சமைப்போம் சுவைப்போம்

## பிரியாணி

தேவையான பொருட்கள்:

*பிரியாணி அரிசி- (பாசுமதி) - 1 கிலோ*
*நெய்/ மாஜரின்- 125 கிராம்*
*ஆட்டிறைச்சி- 1 கிலோ*
*வெங்காயம்(வெட்டியது)- 125 கிராம்*
*கறுவாப்பட்டைத்துண்டு- 2"*
*ஏலக்காய் (தூளாக்கியது) -6*
*ரம்பை இலை- இரண்டு*
*உப்பு- சுவைக்கேற்ப*
*மஞ்சள் தூள்- சிறிதளவு*

செய்முறை:

ஆட்டிறைச்சியை இரண்டு அங்குலத் துண்டுகளாக வெட்டிப் பாத்திரத்தினுள் இடவும். கறியை மூடும் அளவுக்குப் போதிய தண்ணீர் விட்டு வேகவிடவும். வேறு பாத்திரத்தில் நெய்யை உருக்கி நன்றாகச் சூடானதும் ரம்பை இலையையும், வெங்காயத்தில் மூன்றில் ஒரு பகுதியையும் இட்டு வெங்காயம் பொன்னிறமாகும் வரை கிளறவும். வேகவைத்த ஆட்டுக் கறியையும், வெந்த நீரையும் அரிசிப் பாத்திரத்தினுள் இடவும். (அரிசி வேக நீர் போதவில்லை எனில் தேவையான அளவு சுடுநீர் விடவும்.) ஏலக்காய் மஞ்சள்தூள் தவிர்ந்த ஏனைய பொருட்களை அரிசிப் பாத்திரத்தினுள் இட்டுக் கிளறவும். அரிசி பாதியளவுக்கு வெந்ததும் ஏலக்காயை இடவும். அரிசி வெந்து தயாரானதும் அதில் சிறிதளவை எடுத்து வெவ்வேறு நிறச் சாயங்களில் ஊறவைத்துப் பரிமாறும் போது வைக்கும் பிரியாணியின் மீது தூவினால், அழகாகவும், அலங்கார மாகவும் இருக்கும்.

# சிறுவர்களுக்கு நொறுக்குத் தீனி

சிறுவர்கள் உள்ள வீடுகளில் சில பண்டங்கள் - அவர்கள் அடிக்கடி கொறிப்பதற்குத் தேவை. அவர்களுக்கு பிற்பகல் அல்லது மாலை வேளைகளில் தேனீருடன் உண்பதற்கு ஏதாவது சிற்றுண்டிகள் கொடுப்பது நல்லது. தென்பாகவும் அதே நேரத்தில் களைப்பு நீக்கியாகவுமிருத்தல் வேண்டும்.

தெருவழியே பலவகை உணவுப் பண்டங்களை விற்றுத் திரிவார்கள். பணம் பண்ணுவதையே இலக்காகக் கொண்ட பல வியாபாரிகள் கலப்படப் பண்டங்களையே விற்கின்றனர். அவர்களுக்கு நமது குழந்தைகளின் தேக நலனைப் பற்றியோ பொதுச் சுகாதாரத்தைப் பற்றியோ அக்கறை கிடையாது. நஞ்சானாலும்- விலை போகுமானால் விற்று விட்டு ஓடி மறைந்து விடுவார்கள். ஆகவே வீடு தேடி விற்பனைக்கு வரும் பலகார வகைகள், ஐஸ்கிறீம், ஐஸ்பழம் ஆகியவற்றின் மீது தாய்மார் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். விலை மலிவாகக் கிடைக்கும் பண்டத்தை நமது பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுத்து விட்டு அதனால் ஏற்படும் உபாதைகளுக்காக மருத்துவமனை நாடி பல மடங்கு பணத்தை மருந்துக்காகச் செலவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

சில வருடங்களுக்கு முன்னர் விலை குறைந்த ஐஸ்கிறீம் விற்ற வியாபாரிகள், தங்கள் பண்டங்களின் கவர்ச்சியை அதிகரிப்பதற்காக ஐஸ்கிறீமுக்கு பலவர்ண தோற்றங்களை ஊட்டினார்கள். இந்த வர்ணங்கள் உண்பதற்குரிய வர்ணக் கலவைகளல்ல என்று கண்டு பிடிக்கப் பட்டது. சில நலன்விரும்பிகள் இந்த வர்ணங்களையிட்டு இரசாயன முறை பகுப்பாராய்ச்சிகளை நடத்தியபோது அவை பிடவைகளுக்கு வர்ணமிடப் பயன்படுத்தப்படும் சாயம் என்று தெரியவந்தது. இந்தச் சாயம் உட்கொள்ளப்படும் போது புற்றுநோய் தோன்றுவதற்கான சூழ்நிலை உருவாகும் என்று எச்சரிக்கப்பட்டது.

எனவே தெருவில் விற்பனைக்கு வரும் பண்டங்கள் மீது மட்டுமல்லாமல், கடைகளில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் தரத்தைப் பார்த்தே நமது குழந்தைகளுக்கு அவற்றை வாங்கி உண்ணக் கொடுக்க வேண்டும்.

இத்தகைய ஆபத்தை விலைக்கு வாங்காமல் எமது குழந்தைகளுக்கு வேண்டிய நொறுக்குத் தீனிகளை- சிரமம் பார்க்காமல் நாமே நமது வீட்டில் தயாரித்துக் கொள்ளுவது சாலச் சிறந்தது.

செலவு குறைந்ததும் இலகுவில் தயாரிக்கக்கூடியதும் சத்துள்ளதுமான சில பண்டங்களைத் தயாரிக்கும் முறைகளை இப்பகுதியில் அவ்வப்போது நாம் தருவோம். சகோதரிகள் தங்களுக்குத் தெரிந்த முறைகளையும் எழுதி அனுப்பலாம்.

## காரட் அல்வா

இன்று காரட் அல்வா செய்யும் முறையினைப் பார்ப்போம். இதில் குங்குமப்பூ மற்றும் வாதாம் பருப்பு ஆகிய இரு பொருட்களும் விலை கூடியவை. அத்துடன் சுத்தமான குங்குமப்பூ கிடைப்பதும் நம் நாட்டில் கஷ்டம்தான். வசதியானவர்கள் குங்குமப்பூவைப் பயன்படுத்தலாம். இல்லாவிட்டால் அதனைச் சேர்க்காமல் விட்டு விடலாம். வாதாம் பருப்புக்குப் பதிலாக முந்திரிப் பருப்பினைப் பயன்படுத்தலாம்.

தேவைப்படும் பொருட்கள்:

*காரட் கிழங்கு (துருவியது)- 3 கோப்பை*
*நெய்- 2 1/2 மே. கரண்டி*
*பால்- 3 கோப்பை*
*சீனி- 1 கோப்பை*
*ஏலக்காய் (இடித்துப் பொடியாக்கியது) - 2*
*குங்குமப்பூ- 3 சிட்டிகை*
*வாதாம்பருப்பு (அல்லது) -6*
*முந்திரிப்பருப்பு- 10*

செய்முறை:

ஒரு பாத்திரத்தில், அளவான சூட்டில் அடுப்பில் வைத்து, நெய்யை ஊற்றவும். ஏற்கனவே கழுவி தேங்காய்ப்பூப் போன்று மெல்லியதாகத் துருவிய கரட்டை சூடான நெய்யிலிட்டு வதக்கவும். இதில் பாலையும் விட்டுக் கிளறவும். பாத்திரத்தை மூடாமல், ஓரளவு தடிப்பான கலவையாக வரும் வரை தொடர்ந்து கிளறவும். இப்பொழுது சீனியைக் கொட்டி மேலும் கிளறவும். சீனி கரைந்ததும் ஏலக்காய்ப் பொடி யினைத் தூவி, சிறிதளவு பாலில் கரைக் கப்பட்ட குங்குமப் பூவையும் சிறு துண்டுகளாக வெட்டப்பட்ட வாதாம் பருப்பு அல்லது முந்திரிப் பருப்பையும் சேர்த்து 2 நிமிடங்களில் அடுப்பிலிருந்து இறக்கவும்.

இதனைத் துண்டுகளாக வெட்டி சூடாகவோ அல்லது ஆறியபின்போ தேனீருடன் பரிமாறலாம். இது ஐந்து பேருக்குப் போதுமானது.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் தொடர்ந்து 27வது வரை (15 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.


பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

# நீங்களும் தைக்கலாம்

## பெண் பிள்ளைகளுக்கான பள்ளிச் சீருடை


| | |
|---|---|
| மார்புச் சுற்றளவு | 34"+2= 36"÷4=9" |
| தோள் நீளம் | 12"÷2=6" |
| சட்டை நீளம் | 14" அல்லது 15" |
| கழுத்து அகலம் | 4"÷2=2" |
| பின் கழுத்து இறக்கம் | 1 1/2" |
| முன் கழுத்து இறக்கம் | 5" |
| அக்குள் நீளம் | 5 1/2" |
| கைச் சுற்றளவு | 8 1/2" |
| கை நீளம் | 6"+ 1 1/2"= 7 1/2" |
| நுனிக்கைச் சுற்றளவு | 6" |
| கொலர் நீளம் | 16" |
| அகலம் | 4" |





8" அகலமான துணியை எடுத்து இரண்டாக மடித்து ABCD எனப் பெயரிடுக. A யிலிருந்து E வரை 2"உம் A யிலிருந்து F வரை 1 1/2" வரைந்து பின் கழுத்து EFஐ வெட்டவும். A யிலிருந்து G வரை 6" உம் B யிலிருந்து H வரை 5 1/2" உம் வரைந்து GH ஐ வெட்டவும். CD என்பவற்றை சேர்த்து மடித்து I யிலிருந்து 1/2"அகலத்திற்கு J யிலிருந்து 4"உயரம் வரை ராக்ஸ் இடுக.

பின் உடம்பு வெட்டியது போலவே திறப்புக்கு 1 1/2" உள்விட்டு மடித்து முன் உடம்பு வெட்டவும். முன் கழுத்து 3 1/2" கூடுதலாக இறக்கி வெட்டவும். முன் கையும் 1/4" அளவு உள் நோக்கிக் கூடுதலாக வெட்டவும்.


பின் உடம்புக்கு தைத்தது போலவே முன் உடம்புக்கும் ராக்ஸ் இடுக.




16" நீளமும் 8" அகலமுமான துணியை எடுத்து இரண்டாக மடிக்கவும். C யிலிருந்து 1/2" உள்நோக்கி E ஐயும் D யிலிருந்து 1/2" உள்நோக்கி F ஐயும் வரைக. பின்பு FE என்பவற்றை வளைத்து வெட்டவும்.

7 1/2" நீளமான 8 1/2" அகலமான துணியை எடுத்து இரண்டாக மடிக்கவும். B யிலிருந்து 3 1/2" பதிவாக E வரையும் D யிலிருந்து 2" உள் நோக்கி F வரையும் வரைந்து வெட்டுக. H யிலிருந்து I வரை 1/2" உயர்த்தி வரைந்து வெட்டுக. வெட்டிய கையை விரித்து வைத்து படத்தில் உள்ளது போல் 1/4" உள்நோக்கி முன் கை வெட்டுக.




கை பொருத்தும் போது கவனமாகப் பொருத்த வேண்டும். முன் கை முன் உடம்புடன் பொருந்தும் படி தைக்க வேண்டும். 36" அகலமும் 26" நீளமும் உடைய 2 துணிகளை எடுத்து நீங்கள் விரும்பிய அளவில் சுருக்கு வைத்து மேல் உடம்புடன் பொருத்தலாம். (மேலே குறிப்பிட்ட அளவுகள் 15,16 வயதுப் பிள்ளைகளுக்குப் பொருத்தமானதாகும்.)


-சுதா-
நீர்கொழும்பு

# லேடீஸ் ஸ்பெசல்


# வீட்டுக் குறிப்புக்கள்



காய்கறி வெட்டப் பயன்படுத்தும் கத்தியின் கைப்பிடி தேய்ந்தும், துருப்பிடித்தும் இருந்தால், ரெக்சின் துண்டு ஏதாவது இருந்தால் அதைக் கத்தியின் கைப்பிடியில் சுற்றி, பெவிக்கோல் போட்டு ஒட்டி விடுங்கள். அழகாக இருப்பதோடு, கைக்கும் எந்தப் பாதிப்பும் இருக்காது.



ஜன்னல்களுக்கெல்லாம் மெல்லிய துணியாலான திரைச்சீலை போட்டிருக்கிறீர்களா? குளிர் காலத்தில் இந்தத் திரைச்சீலையை மாற்றி விடுங்கள். லைனிங் துணி வைத்துத் தைத்த திரைச்சீலையை ஜன்னல்களுக்கு மாட்டி விடுங்கள். குளிரின் தாக்கம் குறைவாக இருக்கும். குளிர் அதிகமாகவே இருக்கிறதே என்று கதவை அடைக்க வேண்டிய அவசியமும் இருக்காது.



துணிகளில் இருக்கும் வியர்வைக் கறையை நீக்க வேண்டுமா? ஒரு தேக்கரண்டி வெள்ளை வினிகர் (கடைகளில் கிடைக்கும்) எடுத்துக் கொள்ளுங்கள். அதில், தண்ணீர் சில சொட்டுக்கள் கலந்து, கறை உள்ள இடத்தில் போட்டு சிறிது நேரம் ஊறவையுங்கள். பிறகு வழக்கம் போல் துவைத்து உலர்த்தி விடுங்கள். கறை இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.




தினமும் காலையில் எழுந்தவுடன், வெறும் வயிற்றில் எலுமிச்சம் பழச்சாறு குடிப்பது உடலுக்கு மிகவும் நல்லது. முதல் நாள் இரவே பத்து காய்ந்த திராட்சைகளைத் தண்ணீரில் ஊற வைத்து விடுங்கள். இந்த ஊறின திராட்சையையும், எலுமிச்சம் பழ ஜூஸில் கலந்து குடித்து விடுங்கள். இரட்டிப்பு பலன் கிடைக்கும்.



முகம் காட்டும் கண்ணாடியை அடிக்கடி சுத்தப்படுத்த வேண்டும். கண்ணாடியைச் சுத்தப்படுத்துவதற்கென்றே திரவம் கடைகளில் கிடைக்கும். அதை வாங்கிப் பயன்படுத்தலாம். அல்லது தண்ணீர் போட்டும் ஈரம் போகத் துடைத்து விடலாம். கண்ணாடி பளீர் என்று ஒளி வீசும். நம் உருவமும் பளிச்சென்று தெரியும்.



பிட்டு அவிப்பதற்குத் தனியாக பாத்திரம் எதுவும் தேடிக் கொண்டிருக்காமல் இட்லி குக்கரில் துணி கட்டியோ, அல்லது இட்லி தட்டுகளின் மீதோ, பிட்டு மாவை தேங்காய்த் துருவல் கலந்து வைத்து இட்லி வேக வைப்பது போல் வேக விடுங்கள். பூப் போன்ற பிட்டு கிடைக்கும்.

எலுமிச்சம் பழம், அன்னாசி, தோடம்பழம், மாம்பழம், திராட்சை எந்த பழமாக இருந்தாலும் சாறு பிழிவதற்கு முன், சிறிது நேரம் வெந்நீரில் போட்டு வைத்திருந்து பிறகு சாறு பிழியுங்கள். நிறையச் சாறு கிடைக்கும்.

சூப் செய்யும் போது ஒரு துண்டு கறுவாப்பட்டை, சிறிது கடுகை நெய்யில் வறுத்துச் சேர்த்துக் கொள்ளுங்கள். வாசனையுடன் இருக்கும்.



உங்கள் வீட்டு டைனிங் டேபிளுக்கு மைக்கா ஷீட் ஒட்டியிருக்கிறீர்களா? மைக்கா ஷீட் மீதியாகி விட்டதா? தூக்கியெறிந்து விடாமல், வீட்டில் உள்ள மரப்பெட்டி, முக்காலி போன்றவற்றின் மீது ஒட்டிவிடுங்கள்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பூட்டிய கராஜ் கதவம் திறந்தது!

# வெளியே பாய்ந்தான் வௌவால் பையன்

ஆகஸ்ட் 22–28 தினமுரசு வாரமலரில் அமெரிக்காவின் லா வேஜஸ் நகரில் வௌவால் பையன் மடக்கிப் பிடிக்கப் பட்டதாகத் தெரிவித்திருந்தோம்.

இரண்டு அடி உயரமும் 19 இறாத்தல் எடையும் கொண்ட அந்தப் பிராணியை உயிரியல் டாக்டர் டிலான் 12 வாரங்கள் ஆராய்ச்சி செய்தார்.

கராஜ் ஒன்றில் அடைத்து வைக்கப் பட்டிருந்த வௌவால் பையன் அங்கிருந்து எப்படியோ தப்பி விட்டது.

மீண்டும் தேடுதல் முயற்சி. அமெரிக்காவின் கூட்டாச்சி உளவு முகவர் பிரிவினர் (F.B.I.) தேடுதல் முயற்சியில் வெற்றியடைந்தனர்.

வௌவால் பையனின் கெட்டகாலம்! கடும் மழை காரணமாக மிஸ்ஸிசிப்பி நதி பெருக்கெடுத்தது.

பல நகரங்களும் கிராமங்களும் வெள்ளக் காடாகின.

வௌவால்ப் பையனால் நீண்ட தூரம் தப்பிப் போக முடியவில்லை.

கிழக்கு மிஸ்யூறி பகுதியில் ஒரு பண்ணை வீட்டின் கூரையில் தொற்றிக் கொண்டது.

தகவல் அறிந்த F.B.I. உளவுப் பிரிவினர் அதனை மீண்டும் மடக்கிப் பிடித்தனர். இப்போது பாதுகாப்பான இடத்தில் வைத்துள்ளனர்.

எனினும் அந்தரங்கமாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சில வெளியாகியுள்ளன.

வௌவால் பையனைப் பிடிக்கும் போது மயக்க ஊசியை துப்பாக்கி போன்ற சாதனத்தில் பொருத்தி செலுத்தியுள்ளனர்.

வௌவால் பையன் அதனால் மயங்கி விழுந்து விட்டது. உடனடியாக உருக்கு வலைக்குள் அதனை அமுக்கிப் பிடித்து வாஷிங்டனுக்கு கொண்டு சென்றனர்.

இப்போது வௌவால் பையன் இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால். மீண்டும் தப்பக்கூடும் என்பதால் பலத்த பாதுகாப்பு.





**பிரியாத தோழன்**

கலிபோர்னியாவில் உள்ள சாந்தா பார்பறா நகரத் தெருவில் தன் பிரியமான பெரிய பாம்புடன் பயணம் செய்யும் மனிதன். தோளிலே பாம்பு. காலிலே உருளைச் சப்பாத்து. சந்தோசமான பயணம்தான்.


## தகவல் பெட்டி

படுகொலைகள் செய்பவர்களைப் பார்த்து இரத்தம் குடிப்பவர்கள் என்று கண்டனங்கள் பாய்வதுண்டு.

உண்மையாகவே இரத்தம் குடிக்கும் பிரபலமான புள்ளி பற்றிய தகவல் ஒன்று இப்போது வெளியாகி இருக்கிறது.

அந்தப் பிரபலமான புள்ளியார் தெரியுமா? றொக் இசை மூலம் இளைஞர்களையும் யுவதிகளையும் சொக்கி போட்டி ழுக்கும் பாடகர் டொனால்ட் குண்ட்ஸ்.

# இரத்தம் குடிக்கும் பாடகர்! காதலியின் மணிக்கட்டில் ஒரு கடி!!



கனடாவின் டொரெண்டோ நகரில் வாழும் 26 வயதுடைய பாடகர்தான் டொனால்ட்.

அவருக்கு பல காதலிகள். அதில் மிக நெருக்கமான காதலி சல்லி பாஹே.

சல்லி பாஹேயை ஒரு சந்தோசமான நேரத்தில் கட்டியணைத்த டொனால்ட் அவளது மணிக்கட்டை எட்டிப்பிடித்து வாயில் வைத்துக் கடித்தார்.

செல்லமாய் கடிப்பதாகத்தான் சல்லி முதலில் நினைத்தாள்.

ஆனால் டொனால்ட் இறுகக் கடிக்கத் தொடங்கினான்.

சல்லி கதறினாள்.

டொனால்ட் விடவில்லை.

இரத்தம் வரும் வரை கடித்து அந்த இரத்தத்தைச் சப்புக் கொட்டிச் சுவைத்தான்.

சல்லி அதிர்ந்துதான் போனாள்.

இரத்தக் காட்டேரியான தன் காதலன் டொனால்ட் பற்றிய செய்தியை பத்திரிகைகளுக்குக் கொடுத்தாள்.




ஆனால் என்னே ஆச்சரியம் பாருங்கள்.

இப்போதும் டொனால்டை-தான் காதலிக்கிறேன் என்கிறாள் சல்லி.

சல்லி சொல்வது உண்மைதானா? டொனால்ட் இரத்தம் குடிப்பது உண்டா?

டொனால்ட்டிடமே பத்திரிகையாளர்கள் கேட்டனர்.

"உண்மைதான். மனித இரத்தம் என்றால் எனக்குப் பிடிக்கும்" என்று சர்வ சாதாரணமாகச் சொல்லியிருக்கிறார் டொனால்ட்.

இரத்ததானம் செய்வோரை தான் அணுகுவதில்லையாம். தேக ஆரோக்கியம் உள்ளவர்களின் இரத்தத்தைத்தான் தெரிவு செய்வாராம்.

இரத்தம் குடிப்பதை ஒப்புக் கொள்வதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. அதன் சுவையையும் சொல்லிப் புகழுகிறார்.

"செம்பின் ருசியான சுவை அதில் உண்டு. குடித்துப் பழகிய எவரும் இலகுவில் விடமாட்டார்கள்"

இரத்தம் குடிக்கும் பாடகரின் சித்தத்தில் இப்படி ஒரு ரசனையோ?

# பாதிவிரலான பத்து விரல்கள்!

# பொழுதுபோக விரல் கடிக்கும் சிறுமி!!

சென்னையைச் சேர்ந்தவர் சாகுல் அமீது. இவரது துணைவியார் பாத்திமா.

இருவரும் தையல் தொழில் செய்து வருகின்றனர்.

இவர்களுக்கு ஏற்கனவே நான்கு குழந்தைகள்.

ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தாள் ஜாஸ்மின்.

இரண்டு வயது வரை ஜாஸ்மின் ஏனைய குழந்தைகள் போலவே வளர்ந்தாள்.

இரண்டு வயதான போதுதான் விபரீதமே ஆரம்பமானது.



சோறு பொங்கிக் கொண்டிருந்த பாத்திமா தற்செயலாக கஞ்சியைத் தரையில் கொட்டி விட்டார்.

ஆவி பறந்த கஞ்சியில் குழந்தை ஜாஸ்மின் இரு கைகளையும் வைத்து விளையாடினாள்.

பாத்திமா அது கண்டு பதறிப் போய் குழந்தையைத் தூக்கினாள்.

ஆனால் குழந்தை அழவே இல்லை.

மறுநாள் தாயாருக்கு மற்றுமொரு ஆச்சரியம்.

எரிந்து கொண்டிருந்த கொள்ளிக் கட்டையை கையில் எடுத்து விளையாடினாள் ஜாஸ்மின்.

விரல்கள் கருகிப் போயின.

ஆனால் குழந்தை அழவில்லை. முகத்தில் வேதனையும் இல்லை.

அடுத்த சில தினங்களில் ஜாஸ்மின் தன் கைவிரல்களைக் கடித்துக் குதறத் தொடங்கினாள்.

பெற்றோர் தடுத்தனர். எனினும் அவள் கேட்கவில்லை.

இப்படியே தொடர்ந்து நடந்தது. இடையே இடது கால் பெருவிரலில் லேசாக வெடிப்புத் தோன்றியது.

பின்பு ஒருநாள் இடது கால் பெருவிரல் துண்டாகி விழுந்தது.

இப்போது ஜாஸ்மினுக்கு ஏழு வயது.

கடித்துக் கடித்து கைவிரல்கள் பத்தும் பாதியாக இருக்கின்றன.

அவருக்கு வந்திருப்பது நூதனமான நோய் என்கின்றனர் வைத்தியர்கள்.


அவளது மனநலம் நன்றாக இருக்கிறது. உணர்வு நரம்புகள் செயல் இழந்து விட்டன என்றும் வைத்தியர்கள் சொல்கின்றனர்.

எனினும் இதுவரை தகுந்த சிகிச்சை செய்யப்படவில்லை.

பெற்றோர் கவலையோடு இருக்கின்றனர். குழந்தை ஜாஸ்மினோ கவலை எதுவுமின்றி புண்பட்ட விரல்களைக் கூட விளையாட்டாக கடித்துத் துப்பிக் கொண்டிருக்கிறாள்.

பூனைக்கு விளையாட்டு. சுண்டெலிக்கு சீவன் போகுது என்பார்கள். குழந்தைக்கு விளையாட்டு. பெற்றவர்களுக்கு தம் பிஞ்சுக் குழந்தையின் விரல்களை நினைத்து தினமும் சோகம்தான்.

## இவர்தான் குரு



தமிழ்-தெலுங்கு படங்களில் அடிதடி காட்சிகளில் புகுந்து விளையாடும் விஜய சாந்தியின் மானசீகக் குரு யார் தெரியுமோ?

இந்தியாவின் முதல் பெண் பொலிஸ் அதிகாரி கிரண் பேடிதான் அவர்.

கிரண் பேடி வளைந்து கொடுக்காத பெண். ரவுடிகளுக்கு பேடியின் பெயர் கேட்டாலே போதும். தொடை நடுங்கும். அரசியல்வாதிகளுக்கும் விட்டுக்கொடுக்காத கிரண்பேடியை பல பிரிவுகளுக்கு பந்தாடுகிறது அரசியல். நேர்மைக்கு காலமில்லை.

www.padippakam.com



## மாபெரும் வெற்றியும் ஒரு அடிதான்!

வோல்டர் வெற்றிவேல் வெள்ளிவிழா கண்டதில் சத்யராஜ் சந்தோசப்பட்டார்.

அவர் நாயகனாக நடித்து வெள்ளிவிழாக் கண்ட முதல் படம் வோல்டர் வெற்றிவேல் தான்.

ஆனால் ஒரு பிரச்சனை. அதற்குப் பின்னர் வந்த சட்டனையும் உடன் பிறப்பும் பாரிய வெற்றியைப் பெறவில்லை.

வோல்டர் வெற்றிவேல் படத்தில் பார்த்த சத்யராஜ்தான் வேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

சில படங்களின் மாபெரும் வெற்றி ரசிகர்களிடையே பலத்த எதிர்பார்ப்புக்களை உருவாக்கிவிடுகின்றன.

நாயகன் படத்தின் வெற்றி அதன்பின் வந்த கமலின் சில படங்களையும் பாதித்தது.

என்றாலும் தற்போது உடன் பிறப்பு பாதகமில்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறது.





## சொந்தமாக சுவரொட்டி!

தனது எந்தப் புதுப்படம் வெளியானாலும் தனது சொந்தச் செலவில் போஸ்டர் அடித்துவிடுவார் சரத்குமார்.

சென்னையில் கடைப்பிடித்த அதே பாணியை ஆந்திராவிலும் கடைப்பிடித்திருக்கிறார்.

'கேப்டன்' என்ற தெலுங்குப் படத்தில் நடிக்கும் சரத் அதன் தொடக்க விழாவுக்கு வண்ணப் போஸ்டர்களை அடித்து விட்டிருக்கிறார். தெலுங்குப் பிரபலங்கள் பலர் அதிர்ந்து போயிருக்கிறார்கள்.





## சினிமா விமர்சனம்

ஆங்கிலப் படங்களை நினைவுக்குக் கொண்டுவர முயன்றுள்ளார்கள். பேய்பாப்பாவுக்குள் புகுந்த ஆவி நடத்தும் அதிரடி திகில் விவகாரங்கள் குறை சொல்ல முடியாமல் படமாக்கப்பட்டுள்ளன.

குட்டி நட்சத்திரம் ஷாம்லி மீது நம்பிக்கை வைத்து பணத்தை இறைத்து படம் எடுத்திருக்கிறார்கள். ஷாம்லி வெளுத்து வாங்கியிருக்கிறாள்.

ராம்கி நேர்மை தவறாத போலீஸ் அதிகாரியாக வந்து மனதில் நிற்கிறார். இறக்கிறார்.

அது யாரது? அட ஐஸ்வர்யா. போர்த்து மூடி கண்களைக் கசக்கி... சத்தியமாக நம்பமுடியவில்லை.

வில்லனால் கொல்லப்படும் ராம்கியின் ஆவி ஷாம்லிக்குள் புகுந்து வில்லன்களை குளோஸ் பண்ணுவதுதான் கதை. அதை பரபரப்பாக நகர்த்தி பயப்படவைத்து ஜாலம் காட்டியிருக்கிறார்கள்.

தமிழ் திரைப்பட தொழில் நுட்பம் வளர்ந்திருக்கிறது. பொழுது போக வேண்டுமா. தங்கப்பாப்பா பார்க்கலாம். இயக்கம்- அரவிந்தராஜ். இசை- தேவா.

## வந்தாரை வாழவைக்கிறது

முன்னர் ஆந்திரப்படவுலகிலிருந்து பானுமதி, சாவித்திரி, பானுப்பிரியா, கௌதமி போன்றவர்களும், கேரளத்திலிருந்து பத்மினி, அம்பிகா, ராதா போன்றவர்களும் தமிழ்த் திரையுலகிற்கு வந்து கதாநாயகிகளாக நடித்து வெற்றிக் கொடி நாட்டிக் கொண்டிருந்தார்கள்.

தற்போது நிலைமை தலைகீழ். தமிழகத்திலிருந்து சென்ற விஜயசாந்தி, மீனா போன்றவர்கள் ஆந்திராவிலும், ஊர்வசி, சாந்தி கிருஷ்ணா போன்றவர்கள் கேரளத்திலும் பிரகாசிக்கிறார்கள்.

ஆனால் தமிழகத்தில் இப்போது பம்பாய் இறக்குமதிகள் ரூபினி, குஷ்பு, அமலா, மதுமதி, ப்ரியா அரோரா, வினிதா என்று தமிழ் தெரியாத நடிகைகளின் பட்டியல் தொடர்கிறது. தமிழகம் மட்டுமல்ல, தமிழ் திரையுலகமும் வந்தாரை வாழவைக்கிறது.





## மினி சினி

★ கட்டளை படத்தை அடுத்து சொந்தப் படம் ஒன்றைத் தயாரிக்க திட்டமிட்டுள்ளார் பானுப்பிரியா. படத்தில் கதாநாயகனாக நடிப்பதற்கு கார்த்திக்கையும், இயக்குவதற்கு பிவாசுவையும் அணுகியுள்ளார்.

★ பாரதிராஜாவின் நிறம் மாறாத பூக்களில் கதாநாயகனாக அறிமுகமாகி பல படங்களில் நடித்தவர் விஜயன். இவர் திரைக்கதை வசனம் எழுதி இயக்கித் தயாரித்த புதிய ஸ்வரங்கள் என்னும் படம் தயாராகி இரு வருடமாகியும் வெளிவராத நிலையில், அண்மையில் நேர்கோடுகள் என்ற பெயரில் புதிய படமொன்றிற்குப் பூஜை போட்டுள்ளார்.

★ அஞ்சலி புகழ் குட்டி நட்சத்திரம் ஷாமிலி, முதல் முறையாக ஆண் வேடத்தில் சிவராத்திரி என்னும் படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தை இராம நாராயணன் இயக்கி வருகிறார்.

★ ரூபினி, பல்லவி கௌதமி ஆகியோர் ஒரு பாடல் காட்சியில் நடனமாடியது போன்று காவல்துறை படத்தில் ரோஜா ஒரு பாடல் காட்சியில் வந்து நடனமாடுகிறார். இப்படத்தில் நாகார்ஜுன், ஷோபனா ஜோடியாக நடிக்கிறார்கள்.

★ முக்தா சீனிவாசன் தயாரிக்க, மனோஜ்குமார் இயக்கத்தில் சரத்குமார் கதாநாயகனாக நடிக்கவுள்ள படத்திற்கு ராஜபாண்டி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

★ இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகரின் சில படங்களுக்கு ஷோபா சந்திர சேகரும் ஆர்.வி.உதயகுமாரின் சில படங்களுக்கு சுஜாதா உதயகுமாரும் கதை எழுதி வருவது தெரிந்ததே. தற்போது அந்த வழியில் சுரேஷ் கிருஷ்ணாவின் மனைவி சந்திரா சுரேஷ் கிருஷ்ணா ரோஜாவைக் கிள்ளாதே படத்திற்கு கதை எழுதியுள்ளார்.

★ சின்ன சின்ன ஆசை பாடலுக்கு இசையமைத்த ஏ.ஆர்.ரகுமானின் சின்னச் சின்ன ஆசை என்ன தெரியுமா? தனது இசையமைப்பில் பொப் பாடகர் மைக்கல் ஜாக்சனைப் பாட வைக்க வேண்டும் என்பதுதானாம்.

★ புதிய முகம் வெற்றி பெற்றதை அடுத்து சுரேஷ் மேனன் திரைக்கதை எழுதி இயக்கித் தயாரிக்கும் பாசமலர்கள் படத்தில் அரவிந்த் ஸ்வாமி கதாநாயகனாக நடிக்கிறார்.

★ மலையாள இயக்குநர் பாலசந்திரமேனன் இயக்கத்தில் பாக்கியராஜ் நடிக்க இருந்த படம் வீட்ல விசேஷங்க. தற்போது அந்தப் படத்தை நிறுத்தி விட்டு அதே பெயரில் வேறொரு படத்தை பாக்கியராஜ் திரைக்கதை வசனம் எழுதி இயக்கவுள்ளார்.

## என்றாலும் ஃபுனிச் சல்தான்!

நடிகை ரோஜாவுக்கு கராத்தே கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசையாம். மற்றொரு ஆசை சென்னை மெரினா கடற்கரையில் குளிக்க வேண்டுமாம். சொந்தக் குரலில் பாடவேண்டும் என்பது மூன்றாவது ஆசை. கடைசி இரண்டு ஆசையும்தான் அடுத்தவரை வதைக்கும் ரகமான ஆசைகள்.

எந்த நடிகரோடு சேர்ந்து நடிக்க விரும்புகிறீர்கள் என்று ரோஜாவிடம் கேட்டால் என்ன சொல்கிறார் என்கிறீர்கள்?

எனக்கு கமலுடன் நடிக்க ஆசை. ரஜனியுடன் நடிக்க ஆசை என்று சொல்கிறாரா? அதுதான் கிடையாது. எனக்கு கமலும் ஒன்றுதான். விமலும் ஒன்றுதான் என்பதுதான் ரோஜாவின் பதில்.





## கமலின் புதிய கலைக்குழு! உலகம் சுற்றும் நாயகன் நடனமாடுவார்.

20 ஆண்டுகளுக்கு முன் நடன ஆசிரியர் தங்கப்பனிடம் நடனம் கற்றவர் கமலஹாசன்.

மேடைகளிலும் நடனக் குழுவினருடன் அவர் நடனமாடியிருக்கிறார்.

இடையில் திரையுலகில் பிசியாகி மேடை நடனங்களை நிறுத்திவிட்டார்.

இப்போது மீண்டும் நடனமாடும் ஆசை வந்திருக்கிறது 'உலகம் சுற்றும் நாயகன்' என்ற பெயரில் கலைக்குழுவை ஆரம்பித்துள்ளார். குழுவில் 60 போர் உள்ளனர். 15 போர் நடனக்கலைஞர்கள்.


செப்டெம்பர் 12ம் திகதி சிங்கப்பூரில் முதல் நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. தொடர்ந்து, வேறு பல நாடுகளிலும் நடன நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிட்டுள்ளார் கமல்.

சுகன்யா, ரோகினி, நாகேஷ், எஸ்.பி பாலசுப்பிரமணியம், அபஸ்வரம் ராம்ஜி, ஆகியோரும் குழுவில் உள்ளனர். இரண்டுமணி நேரம் நிகழ்ச்சி நடைபெறும்.

கமலின் குழுவுக்காக இளையராஜா இரண்டு பிரத்தியோகப் பாடல்களை இசையமைத்துக் கொடுத்துள்ளார்.

கமலின் உடையலங்காரத்தை கவனிப்பது யார் என்கிறீர்கள். கமலின் துணைவி சரிகாவேதான்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



## யார் அது?

இப்போதெல்லாம் குஷ்பு பாராட்டிப் பேசும் நடிகர் யார் என்கிறீர்களா? பிரபு என்று நினைக்கவேண்டாம். அது அர்ஜுன்.

## வள்ளி வெற்றி! ரஜனி குஷி!!

வள்ளி வெற்றிகரமாக ஓடுவதில் ரஜனி சந்தோசத்தில் இருக்கிறார்.

தன்னைக் கெடுத்தவனை கொலை செய்யும் நாயகியை உருவாக்கிய ரஜனியின் துணிச்சலை சினிமா வட்டாரம் வியந்து பேசுகிறது.

ரஜனியின் சொந்தப் படங்களில் வள்ளி வெகு சிறப்பாக வந்திருப்பதில் ரஜனி ரசிகர்கள் மத்தியிலும் படு குஷி.

வள்ளியைத் தொடர்ந்து சூட்டோடு சூடாக புதிய படம் ஒன்றை தயாரிக்குமாறு ரஜனியின் நெருங்கிய வட்டாரங்கள் நச்சரிக்கின்றன.

'பார்க்கலாம்' என்று மட்டும் பதில் சொல்லுகிறாராம் ரஜனி.

இனி வரும் ரஜனி படங்களுக்கு அவரே வசனமெழுதினால் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பும் கிடைக்கும். அதோடு சொல்ல நினைக்கும் கருத்துக்களையும் சொல்ல முடியும் என்று சிலர் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள்.

ரஜனி அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டார்.

லதா ரஜனிகாந்திற்கு பின்னணி பாடுவதற்கு நிறைய அழைப்புகள் வருகின்றன. இப்போதைக்கு அவற்றை ஏற்பதற்கில்லை என்று கூறிவிட்டாராம் லதா.



## நானோ சின்னப் பொண்ணு உதவுகிறார் அம்மாக் கண்ணு!

முன்னாள் நடிகை தேவிகாவின் புத்திரிதான் இந்நாள் நடிகை கனகா. கனகா விடயத்தில் தேவிகா தலையிடுவதாக தயாரிப்பாளர்கள் பொருமுகிறார்கள்.

இது பற்றி கேள்விப்பட்ட கனகா ஒரு கிழி கிழித்திருக்கிறார். எப்படி? போலி செக் கொடுத்து ஏமாற்றும் இந்தத் தயாரிப்பாளர்களிடம் அம்மா விவரம் அறிந்து கவனமாக நடக்கிறார். அதுதான் இப்படியான புரளிகளைக் கிளப்பிவிடுகிறார்கள். நானோ சின்னப் பொண்ணு(அப்படியா) அனுபவசாலியான அம்மா துணையாய் இருப்பதில் என்ன தவறு என்பதுதான் கனகாவின் வாதம்.

## காதோடு சொல்லுகிறோம்

★ பூ நடிகை சினிமாவுக்கு டாட்டா காட்டுவது பற்றி யோசித்து வருகிறாராம். மகாபலிபுரம் கடற்கரையில் மாபெரும் மாளிகை ஒன்றை கட்டி வருகிறாராம். ஓய்யாரமாய் ஓய்வு பெறுவதற்கு உபயோகமாக இருக்குமாம்.

★ மீன் நடிகைக்கு ரசிகர்கள் சிலர் கடிதங்கள் போட்டிருக்கிறார்கள். தயவு செய்து கவர்ச்சி காட்ட வேண்டாம். சகிக்காது தாயே என்று எழுதியிருக்கிறார்களாம். படித்துவிட்டு துள்ளுகிறார். 'இவனுங்க எல்லாம் கேட்டுக்கிட்டா கவர்ச்சி காட்டணும். துட்டு இவனுங்களா குடுக்கிறானுங்க' என்று வெறுப்படிக்கிறாராம். துட்டுக்கேற்ப துணிகூடும், குறையும். யாரும் கேட்கக்கூடாது. விரும்பினால் பார்க்கலாம். அதுதான் பொலிசி.

★ குண்டான நடிகைகளுக்கு சமீபகாலமாக மார்க்கட் நல்ல நிலையில் இருப்பதாக யாரோ சொல்லி விட்டார்கள். போச்சடா போ. கனக நடிகை கண்டதையும் சாப்பிட்டு பாரத்தை அதிகரிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறாராம். திரை கொள்ளுமோ?

★ சென்னையில் தண்ணீர் தட்டுப்பாடு. மான் நடிகைக்கு கோபமேற்றி விட்டதாம். உப்பு நீரில் குளித்தால் அழகுப் பட்டம் வாங்கிய உடம்பு வாடிய துரும்பாகிவிடும் என்று எல்லோரிடமும் சொல்லிப் புலம்புகிறாராம்.

★ சிரிப்பு நடிகர் ஜனகமானவர் கௌரவ ஆசிரியர் என்று சொல்லி ஒரு பத்திரிகை வருகிறது. ஒரு கௌரவமாக இருக்கட்டும் என்று அவரும் ஒத்துக் கொண்டார். இசை ராஜாவை கண்டித்து தன் பெயரில் செய்திவர ஆடிப்போய்விட்டார் ஜனகமானவர். பத்திரிகையும் வேண்டாம் ஒரு இழவும் வேண்டாம் என்று கும்பிடு போடுகிறார். தனக்கிட்ட வேலை தன் வெறுக்கே சேதம்.

★ பம்பாய் நடிகைகள் என்றால் பிரச்சனையில்லை என்று கோடம்பாக்கம் தயாரிப்பாளர் வட்டாரங்கள் ரகசியம் பேசிக்கொள்கின்றனவாம். ஏனோ தெரியவில்லை.

★ அடுத்த படத்தையாவது வெற்றிகரமாக ஓட வைப்பதில் பாருக்கு ராஜாவான இயக்குநர் தீவிரமாகச் சிந்தித்து வருகிறாராம். வைதேகியோடு வரப்போகிறாரோ அல்லது ஜெகசக்தி வரப் போகிறாரோ தெரியவில்லை.

## ஜோடி நல்ல ஜோடிதான்

மலையாளப்படவுலகில் மோகன் லால், ரேவதி ஜோடிக்கு எப்போதுமே நல்ல வரவேற்பு.

'கிலுக்கம்' என்ற படத்திலிருந்து ஆரம்பித்த வரவேற்பு இன்றுவரை தொடர்கிறது.

அடுத்து இந்த ரசிகமான ஜோடி இணைந்து தருகின்ற படம் 'மாயா மயூரம்'.

கேரள ரசிகர்கள் படம் எப்போது வரும் என்று காத்திருக்கிறார்கள்.

## குஷ்புவுக்கு சுவையான பட்டம்!

நடிகர் கார்த்திக் நகைச்சுவை உணர்வுள்ளவர்.

படப்பிடிப்பு நேரங்களில் நெருங்கிப் பழகுபவர்களுக்கு பட்டம் சூட்டுவதிலும் வல்லவர்.

அப்படியாகப்பட்ட கார்த்திக் குஷ்புவுக்கும் ஒரு பட்டம் வழங்கினார். 'கைலின் பட்லர்'.

இப்போது அந்தப் பட்டத்தை மாற்றி புதிய பட்டம் ஒன்று வைத்துள்ளார். அது என்ன தெரியுமோ? 'பப்ளி மாஸ்'

## ...கா சாந்தி

## ...றக்குது

...கனாக நடித்து ...காமல் போய் ...யே தலை ...ரகுவரன். ...மீண்டும் ...முற்றிலும் ...பாத்திரத்தில் ...ாக ரகுவரன் ...ும் படத்தின் ...நான்பறக்குது. ...க்கு ஜோடியாக ...ா கிருஷ்ணன் ...ார்.

## குறை கூறியவர்கள் வாயில் விரல் வைக்கிறார்களாம்!

புதுநெல்லு புது நாத்து படத்தில் அறிமுகமான புதிதில் என்னுடைய முகம், வாய் அழகில்லை என்று எல்லோரும் கூறினார்கள். இப்போது அது கொஞ்சம்கொஞ்சமாகக் குறைந்து விட்டது என்று கூறுகிறார் சுகன்யா. இவ்வருட ஆரம்பத்தில் வெளியாகிய கோல்டன் வெற்றிவேல், சின்னமாப்ளே போன்ற படங்களின் வெற்றியால் கைவசம் பல படங்கள் உள்ளன.

தற்போது சுயம்வரா(?) ஜோடியாக மகாநதி படத்தில் நடித்து வருகிறார். சுப்பர் ஸ்டார் நடிக்கும் படமொன்றில் அவருக்கு ஜோடியாக நடித்துவிட வேண்டும் என்கிறார் சுகன்யா. எல்லா நடிகைகளுக்கும் உள்ள ஆசைதானே.

## கிசுகிசு



## பம்பாயில் கிளி தேடும் படலம்!

'ஆரன்மனைக்கிளி' படத்திற்காக பம்பாய் சென்று இரு கிளிகளை பிடித்து வந்து நடிக்க வைத்தவர் ராஜ்கிரண். ராஜ்கிரண் அடுத்து வழங்கவுள்ள படம் சின்னக் கருப்பன்.

சின்னக் கருப்பனுக்கும் இரு நாயகிகளைத் தேடுகிறார் ராஜ்கிரண். பம்பாயில் தேடுதல் நடக்கிறதாம். "உங்களுக்கு மொழிப்பற்று கிடையாதா? தமிழ் பெண்கள் இருக்க பம்பாய் பெண்கள் ஏன்" என்று ராஜ்கிரணை கேட்கிறார்களாம்.

அதற்கு ராஜ்கிரண் சொல்லும் பதில் "நான் எதிர்பார்க்கிற மாதிரியான தமிழ் பெண் கிடைத்தால் அவர்களுக்குத்தான் முதலிடம்."

## அவர் இல்லை, பெயர் உண்டு!

அர்ஜுனை கதாநாயகனாகப் போட்டு படமெடுக்க விரும்பினார் 'மாநகரக் காவல்' தியாகராஜன்.

அர்ஜுன் நேரம் இல்லை என்றுவிட்டார். உடனடியாக சரவணனை வைத்து படமெடுக்கும் 'மாநகரக்காவல்' தியாகராஜன் படத்திற்கு வைத்துள்ள பெயர் அர்ஜுன். இது பக்தியோ? அல்லது பழிவாங்கலோ?





www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# ஆமையின் ஆசை

கடலில் ஒரு ஆமை நீண்ட நாட்களாக வசித்தது. அது ஒரு சமயம் ஒய்வெடுக்க கரையோரம் வந்தது. மணலிலே படுத்துக் கொண்டு ஆகாயத்தைப் பார்க்கத் தொடங்கியது.



அப்போது ஆகாயத்தில் விதம் விதமான பறவைகள் மிகவும் அழகாகப் பறந்து சென்று கொண்டிருந்தன. அந்தக் காட்சியைக் கண்ட ஆமைக்கும் அதே மாதிரி வானவெளியில் பறந்து பார்க்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

ஆனால் அந்த ஆசையை அதனால் எப்படி நிறைவேற்றிக் கொள்ள முடியும்? அதற்குச் சிறகுகள் முளைத்து அதன் உதவியுடன் ஆகாயத்தில் பறப்பது என்பது நடக்கக்கூடிய காரியமா?

ஆமை அதை நினைத்தாலும் சோர்ந்து போய்விடவில்லை. ஏதாவது ஒரு வழியில் பறந்தே பார்த்து விட வேண்டும் என்ற முடிவிற்கு வந்து யோசித்தது. உடனே அதற்கு ஒரு உபாயம் தோன்றியது. அந்தச் சமயத்தில் ஒரு கழுகு மிகவும் தாழ்வாகப் பறந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த ஆமை, பெரிதாகச் சத்தம் போட்டு அதை அழைத்தது.

கழுகும் ஆமையிடம் வந்து நின்றது.

"ஏன் ஆமையாரே ஏன் என்னை அழைத்தீர்?", என்று கேட்டது கழுகு.

"கழுகண்ணா! எனக்கு இந்தக் கடலிலும், தரையிலும் வாழ்க்கை நடத்தி ஒரே போரடித்து விட்டது. உங்களைப் போல எனக்கும் இறக்கைகள் இருந்தால் நான் வானத்திலும் பறந்து வாழ்க்கையை அனுபவிப்பேன். ஆனால், இறைவன் என்னை இப்படி வஞ்சித்து விட்டானே? நீங்கள் பறப்பதைப் பார்த்தால் எனக்கு எத்தனை ஆசையாக இருக்கிறது தெரியுமா?" என்று ஆமை பேசியது.

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கழுகு கேட்டது.

"கழுகண்ணா! நீங்கள் நினைத்தால் எனது பறக்கும் ஆசையைப் பூர்த்தி செய்ய முடியும்," என்று பீடிகை போட்டது ஆமை.

"என்னால் எப்படி?" என்று இழுத்தது கழுகு.

"கழுகண்ணா உங்கள் இரண்டு கால்களாலும் என்னைத் தூக்கிக் கொண்டு வானவெளியில் சிறிது தூரம் பறந்து விட்டு, மறுபடி என்னை இங்கே கொண்டு வந்து இறக்கி விட்டால் போதும். நான் என்றும் நன்றியுடையவனாக இருப்பேன்." என்றது ஆமை.

"இவ்வளவுதானே! நான் செய்கிறேன். இதில் ஒன்றும் குறைந்து விடமாட்டேன்", என்று சொன்ன கழுகு, தனது கால்களால் ஆமையைத் தூக்கிக் கொண்டு வானவெளியில் பறந்தது.

ஆகாயத்தில் மிதந்து செல்வது ஆமைக்குச் சுகமாக இருந்தது. ஆனந்தமாகவும் இருந்தது. அது மேலிருந்து கீழே பார்த்தது.

'ஆகா! நான் வசிக்கிற இடம் தான். ஆனால் இவ்வளவு உயரத்தில் இருந்து பார்க்கும் போது எத்தனை ரம்மியமாகவும் அழகாகவும் இருக்கிறது. ஆயுள் முழுக்க இப்படிப் பறந்தபடியே ரசித்துக் கொண்டிருக்கலாம் போலிருக்கிறதே?' என்று நினைத்துச் சந்தோசப்பட்டது.

அந்தச் சமயத்தில் கழுகு, தனது கால் பிடியில் ஆமை இருக்கிறது என்பதை மறந்து, எதற்கோ கால்களை உதறியது.

அவ்வளவுதான், பிடி நழுவ, அந்த ஆமை அசுரவேகத்தில் கீழ் நோக்கி விழ ஆரம்பித்தது.

"ஐயோ மோசம் போனோமே?" என்று நினைப்பதற்குள் அந்த ஆமை பெரிய பாறை ஒன்றில் விழுந்து சுக்கல் சுக்கலாகச் சிதறிப் பிறகு இறந்தது.

அருமைக் குழந்தைகளே! நமக்கென்று ஒரு சக்தி இருக்கிறது. அதை மீறினால் நாம் இன்பத்தை விட, துன்பத்தைத்தான் சந்திக்க நேரிடும் என்பதை இந்தக் கதை நன்கு உணர்த்துகிறதல்லவா? ■

# சிறுகதைக்குள் விடுகதை

1. ஒரு மரத்தில் இரண்டு கிளைகள் மேலும் கீழுமாக இருந்தன. ஒரு நாள் அந்த மரத்துக்கு பறவைகள் கூட்டமொன்று வந்தது. அதில் சில பறவைகள் மேல் கிளையிலும், மற்றைய பறவைகள் கீழ்க் கிளையிலும் இருந்தன. மேலுள்ள பறவைகள் கீழுள்ள பறவைகளை நோக்கி, "உங்களில் ஒருவர் எங்களுடன் சேர்ந்து கொண்டால் நாங்கள் உங்களை விட இரு மடங்கு கூடுதலாக இருப்போம்" என்றது. ஆனால், கீழுள்ள பறவைகள் அது முடியாது. நீங்கள் ஒருவர் எங்களுடன் வாருங்கள் அப்படியானால், நாங்கள் இருவரும் சரிசமமாக இருப்போம் என்றது. அப்படியாயின் மேலுள்ள பறவைகள் எத்தனை, கீழுள்ள பறவைகள் எத்தனை என கணித்துச் சொல்லுங்கள்?

2. ஒரு விவசாயிக்கு மருந்துக்காக ஒரு மாதுளம்பழம் தேவைப்பட்டது. மாதுளம் பழம் ராஜாவின் தோட்டத்தில் மாத்திரமே இருந்தது. எனவே விவசாயியும் ராஜாவிடம் சென்று, மருந்துக்காக ஒரு மாதுளம்பழம் தருமாறு வேண்டினான். ராஜாவும் ஒரு பழம் பறித்து அதை என்னிடம் காட்டிவிட்டுத்தான் செல்ல வேண்டும் என்றான். அவ்வாறே விவசாயி தோட்டத்துக்குச் சென்றான். அங்கு ஏழு காவல்காரர்கள் இருந்தனர். அவன் அந்த ஏழு காவற்காரர்களையும் தாண்டும் போது ஒவ்வொருவரும் மாதுளம் பழத்தில் அரைவாசியை எனக்குத் தரவேண்டும். அது பாதியாக இருக்கக்கூடாது என்றனர்.
பாவம் விவசாயி! கணித்து எத்தனை பழம் பறித்தான் என்று கூறுங்களேன்?

3. ஒருவன் ஒரு தொகைப் பணத்துக்கு பொருள் வாங்கி விற்று, ஒரு மடங்கு லாபம் பெற்றான். அந்தப் பணத்தில் ரூ.6/= விற்கு ஹோட்டலில் சாப்பிட்டான். இரண்டாவது நாள் மீதியிருந்த பணத்துக்கு பொருள் வாங்கி, விற்று ஒரு மடங்கு லாபமடைந்தான். அந்தப் பணத்திலும் ரூ.6/= விற்கு சாப்பிட்டான். மூன்றாவது நாளும் மீதியிருந்த பணத்துக்குப் பொருள் வாங்கி விற்று ஒரு மடங்கு லாபம் பெற்றான். இப்போது அவனிடம் இருக்கும் மொத்தப் பணம் ரூ.6/= தான். அதற்கும் சாப்பிட்டு விட்டு வீட்டுக்குச் சென்றான். அவனிடம் ஒரு சதம் பணம் கூட எஞ்சவில்லை. அவனிடம் முதலில் இருந்த பணம் எவ்வளவாக இருக்கும்?

**விடைகள்**

1. மேலுள்ள கிளையில் 7, கீழுள்ள கிளையில் 5.
2. 128 மாதுளம் பழங்கள்.
3. முதலில் இருந்த பணம் ரூ.5.25சதம்.

செல்வி: தஸ்லிமா நூர் முஹம்மது
அக்குறணை மத்திய கல்லூரி.

## விஞ்ஞானக் கருவிகள்

01. அல்டி மீட்டர்:-விமானம் பறக்கும் பொழுது உயரத்தை அளக்கும் கருவி.
02. அமீட்டர்:- மின்னோட்டம் அளக்கப்படும் கருவி.
03. அனிமோட்டர்:-ஒலியின் அளவை விலிமையை அளக்கப் பயன்படும் கருவி.
04. பரோமீட்டர்:- காற்றின் அமுக்கத்தை அல்லது நழுவு வீதத்தை அளப்பது
05. காடியோகிராப்:- இருதயம் வேலை செய்வதைக் காட்டும் கருவி.

## விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புக்களும்

| கண்டுபிடிப்பு | விஞ்ஞானிகள் |
|---|---|
| 1. போல் பொயின்ட்- | ஒலில்வன் |
| 2. உலகின் பரிணாமக்கொள்கை- | சாள்ஸ் டார்வின் |
| 3. பென்சிலின்- | சேர் அலெக்சாண்டர் பிளேமிங் |
| 4. எக்ஸ்ரே கதிர்- | றோன்ற் ஜேன் |
| 5. இருதய மாற்றுச் சிகிச்சை- | கலாநிதி கிறிஸ்ரி. |

ஜெயசுதா நவரெட்ணசிங்கம்
ஸ்ரீ சண்முக வித்தியாலயம்
திருகோணமலை.

# விடுகதைகளும் விடைகளும்

1. உயர்ந்த கொப்பிலே மலர்ந்த பூ
2. தெரிந்து பூப்பூக்கும் தெரியாமல் காய் காய்க்கும்.
3. பக்கமுள்ள பட்டணத்தை பார்க்க முடியவில்லை.
4. உச்சிக்கிளையில் ஒரு முழக்குச்சி ஊசலாடுது.
5. வாயில்லாப் பறவை ஊர் ஊராய்ப் பறக்குது.
6. வெய்யிலில் மலரும் காற்றில் உலரும்.
7. மணி அடித்தால் மலைப் பாம்பு நகரும்.
8. முதுகெல்லாம் கூனல் வயிறெல்லாம் பல்.
9. சிவப்பு நிறக்காளை நீருக்குள் பதுங்கும்.
10. விண்ணைச் சிரிக்கச் செய்வான் கண்ணைப் பறிக்கச் செய்வான்.

விடைகள்
1. குடை
2. வேர்க்கடலை
3. முதுகு
4. முருங்கைக்காய்
5. விமானம்
6. வியர்வை
7. ரயில்
8. கருக்கரிவாள்
9. நெருப்பு
10. மின்னல்.

முகம்மது லாபீர் ரஜா
தி/அந்- நஹ்ரா மகளிர் மஹாவித்தியாலயம்
மூதூர்.

1. ஆடை மேல் ஆடை போர்த்திருப்பான். அதை கழற்றினால் நம்மை அழச் செய்வான். அவன் யார்?
2. குடிக்க தண்ணீர் உண்டு. ஆனால் குளிக்க தண்ணீர் இல்லை. அவன் யார்?
3. நண்பர்கள் இருவர் கூடவே போவார்கள். கூடவே வருவார்கள். அவர்கள் யார்?
4. கையினால் விதைக்கப்பட்டு வாயினால் பொறுக்கப்படும். அது என்ன?
5. வெளிச்சத்தில் பிடிபட்டவன் இருளில் தெரிவான். அவன் யார்?
6. கனலை ஏந்தியதும் கண்ணீர் வடிப்பாள். கண்ணீர் வடித்ததும் கரைந்து போவாள். அவள் யார்?
7. ஒரு சாண் குதிரைக்கு உடம்பெல்லாம் பல். அது என்ன?
8. உயிரில்லை.-ஊருக்குப் போவான். காலில்லை-வீட்டுக்கு வருவான். வாயில்லை- வார்த்தகள் சொல்வான். அவன் யார்?
9. கடித்தால் கடிப்படாது. பிடித்தால் பிடிபடாது. அது என்ன?
10. பதுங்கிக் கிடப்பான். ஆனால் பந்திக்கு முந்துவான். அவன் யார்?

விடைகள்
1. வெங்காயம்
2. தேங்காய்
3. செருப்பு
4. எழுத்துக்கள்
5. நிலா
6. மெழுகுவர்த்தி
7. சீப்பு
8. தபால்
9. தண்ணீர்
10. பாய்.

என். நித்திய கல்யாணி
நு/மெதடிஸ்ட் தமிழ் மகா வித்தியாலயம்,
கந்தப்பளை.

## பூனை



நல்ல நல்ல பூனை
நான் வளர்க்கும் பூனை
சின்னச் சின்னப் பூனை
செல்லமான பூனை
துள்ளித்துள்ளித் திரியும்
சோறும் பாலும் தின்னும்
சொன்னபடி செய்யும்
சுத்தமான பூனை
மியா மியாவ் பூனை
மீசைக்காரப் பூனை

இர்ஷாட் ஏ. லெத்தீப்
முஸ்லிம் ஆண்கள் வித்தியாலயம்
அக்கரைப்பற்று-4.

# சிறுவர் முரசு

## நாடுகளும் நாடாளும் சபைகளும்

| நாடு | பெயர் | நாடு | பெயர் |
|---|---|---|---|
| அமெரிக்கா- | காங்கிரஸ் | இஸ்ரேல்- | நெஸ்ஸெட் |
| டென்மார்க்- | ரிக்ஸ்டாஜ் | மங்கோலியா- | குறள் |
| இங்கிலாந்து- | பார்லிமென்ட் | மலேசியா- | மஜ்லிஸ் |
| பிரான்ஸ்- | நெஷனல் அசம்பிளி | ஸ்வீடன்- | ரிக்ஸ்டாக் |
| இத்தாலி- | செனட் | நோர்வே- | ஸ்டார்டிங் |
| ஜப்பான்- | டைட் | ஆப்கானிஸ்தான்- | ஷோரா |
| ஸ்பெயின்- | குரோடஸ் | ஜேர்மன்- | பண்டர்ஸ்ரோக் |
| இந்தியா- | பார்லிமென்ட் (லோகசபா, ராஜ்யசபா) | | |

ஸ்ரீ. நிரோசினி
புனித பெர்னடேற் த.ம.வி.-சிலாபம்.

## வர்ணம் தீட்டும் போட்டி இல.4

பரிசுக்குரியவர்:
எம்.எஸ்.எப். ஹனீனா
70/3, புழுகொஹதென்னை
அக்குறணை.

**பாராட்டுக்குரியவர்கள்**

ஜே.எம். பாரிஸ்
'ஜாமியுல் அஸ்ஹர் மகாவித்தியாலயம்',
உடதலவின்ன.

அ. கிருத்திகன்
கொழும்பு இந்துக் கல்லூரி.

செ.ராணி
மட்டக்குளி, கொழும்பு-15.

வீ. தயாளன்
மாத்தளை இந்துக் கல்லூரி.

செல்வி. ரௌஸான் நிஹாரா ஹஸ்மீன்
மடவளை பசார், கண்டி.

எம்.எச்.எப். பௌமியா
லெமலதெனிய, முறுத்தகஹமுல.

முகமட் இஸ்திகார்
அமீதியா மகா வித்தியாலயம்,
உக்குவெல.

பீ. சர்மிளா
அப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயம்,
அப்புத்தளை.

ஜெ. தனேஸ்ராஜ்
மட்டக்களப்பு.

எஸ்.எம்.எச். மிஸ்காத்
மூன்றாம் குறுக்குத் தெரு, புத்தளம்.

எம். சுமதி
பன்விலதென்ன
கம்பளை.

சி. சுபாஷினி
நல்லாயன் மகளிர் தமிழ் பாடசாலை
கொழும்பு.

எப். ரமீஸா
கிராண்ட்பாஸ், கொழும்பு-14.

ரீ. ஸ்ரீஸ்கந்தராஜா
கொழும்பு-6.

எம்.பீ.எம். முபாரக்
அக்குறணை.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு சிறந்த வர்ணம் தீட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணத்திற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. தபாலட்டையில் படத்தை ஒட்டி அனுப்பவும். அனுப்பவேண்டிய கடைசித் திகதி-25.9.93.

முகவரி:
வர்ணம் தீட்டும் போட்டி இல-07
தினமுரசு வாரமலர்
88/14 சோமாதேவி - பிளேஸ்
கொழும்பு-05.

# இலக்கிய நயம்

கவிஞர் வைரமுத்து

கவிஞர் வைரமுத்து. எரிமலை எப்படிப் பொறுக்கும் என்று ஆவேசப்பட்டவரும் அவர்தான். கூடையில என்னபூ குஷ்பூ என்று திரையுலக வியாபார நிர்ப்பந்தத்துக்கு இணங்கி எழுதியவரும் அவர்தான். வைரமுத்து கவியரசரா இல்லையா என்பது வேண்டுமானால் வாதத்திற்குரியதாக இருக்கலாம். ஆனால் வைரமுத்து வலுவும், வனப்பும் உள்ள கவி வரிகளை படைக்கக்கூடிய கவிஞர் என்பதில் கருத்து பேதம் இருக்கமுடியாது. கவிஞர் வைரமுத்துவின் படைப்பில் இருந்து இலக்கிய நயத்தில் கலக்கும் சிறு துளி இது. பருகிப்பாருங்கள்.



## மழைக்காலப் பாடல்கள்!

"ராகங்கள் மாறுவதில்லை" படத்திற்குப் பாடலைச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

எஸ்.பி.பாலசுப்ரமணியம் எழுதிக் கொண்டிருந்தார். அந்தப் பாடல் ஒரு தேவமங்கையைப் பற்றிய ராஜவர்ணனை.

"விழிகள் மீனோ?
மொழிகள் தேனோ?
நிலவின் மகளே நீ தானோ?"

என்று தொடங்கி கேசம் முதல் பாதம் வரை அந்த மங்கையைத் தொட்டும் பார்க்கிறது பாட்டு.

குழலில் தொடங்கி இடை வரையில் ஒரு சரணம்.

"குழலில் மேகம்
குடியிருந்தாலும்
விழியில் ஏதோ
புதுவிதத் தாகம்.
பௌர்ணமிப் பார்வை பொழிகிறதே!
மனம்தனில் இன்பம் வழிகிறதே!
பெண்மையின் பாகம் தாமரையாகும்!
இடையின் பாகம் நூலாகும்."

இடையில் தொடங்கி அடிவரையில் ஒரு சரணம்.

இனிமேல் என்ன நடக்கப் போகிறதோ? என்று எஸ்.பி. பாலசுப்ரமணியம் அடுத்த சரணத்தின் மீது அதிக ஆர்வத்தைக் காட்டினார்.

அடுத்த சரணத்தை ஆரம்பித்தேன்.

"அடடா கால்கள்

அழகிய வாழை..."

பிறகு ஒரு புன்னகை பூசிய மௌனம்.

"நினைத்தால் மணக்கும்
ரகசியச் சோலை"

எழுதுவதை நிறுத்திவிட்டு, சொல்லிச் சொல்லி ரசித்தார். பிறகு பாதிக் கண்களை மூடி, சிருங்காரமாய்ச் சிரித்தார்.

"நான் பல மொழிகளில் பாடுகிறேன். இப்போது தமிழில் மாதிரி இசையும் எழுத்தும் இவ்வளவு அழகாய் எங்குமில்லை" என்றார்.

அவர் ஒரு நல்ல பாடகர்.

அத்துடன் சின்னதாய் ஓர் இலக்கிய வாதி.

"இந்திப் பாடல்களில் வித்தியாசமான வீச்சுக்கள் இருப்பதாக அறிகிறேனே" என்றேன்.

"சில நேரங்களில் வேறு யாரும் எட்ட முடியாத அளவுக்குச் சிந்திக்கிறார்கள்" என்றார்.

"உதாரணம் சொல்லுங்கள்" என்றேன்.

இரண்டு காதலர்கள் இரவில் சந்தித்துக் கொள்கிறார்கள்.

இதைப் பாட வந்த கவிஞன்-

"இந்த இரவில்
இரண்டு நட்சத்திரங்கள்
பூமியில்
சந்தித்துக் கொள்கின்றன"

என்று ஆரம்பிக்கிறான்.

நான் என்னை மறந்து 'இச்' கொட்டினேன்.

இன்னொரு சூழல்.

ஒரு மழைக் கால இரவு.

காதலனைப் பிரிந்த காதலி ஜன்னலோரத்தில் உட்கார்ந்து மழையைப் பார்த்துக் கொண்டே அழுது கொண்டிருக்கிறாள்.

"இன்று பூமியில்
இரண்டு மழை,
விண்ணில் இருந்து ஒரு மழை
இவள்
கண்ணில் இருந்து மறுமழை"
அடடா!

வியந்து போனேன்.

கவிதையில் பயிர் செய்ய வேண்டியதைப் பாடலிலேயே பதியம் போட்டிருக்கிறானே ஒரு கவிஞன்!

அந்தக் கவிஞனுக்கு நான் ஆச்சரியத் தந்தி அனுப்பி வைத்தேன். என் பழைய தனிப்பாடல் ஒன்று எனது நினைவுக்கு வந்தது. ஒரு மழை மாதத்தில் காதலியைப் பிரிந்த ஒரு கவிஞன் இன்னொரு மழை மாதத்தில் மழையில் நனைந்து கொண்டே பாடுகிறான்.

"மழை பொழிகிறது
மழை பொழிகிறது.
என்னோடு நனைய எவர்
வருவீர்கள்
எல்லாத் துளியும் குளிர்கிறது
இருதுளி மட்டும் சுடுகிறது
அதுதான் எனது கண்ணீர்த்துளி
இதை
அறியுமா எனது கன்னிக் கிளி"

இதைச் சொன்னபோது எஸ்.பி. பாலசுப்ரமணியம் எனது ரசனையின் உயரத்திற்கு என்னோடு ஓடி வந்தார்.

"இது எந்தப் படத்தில் வருகிறது?" என்று என்னை ஆசையோடு வினவினார்.

"இது எந்தப் படத்திலும் வரவில்லை. காரணம் இந்தப் பாட்டுக்கான சூழல் எந்தப் படத்திலும் எனக்குச் சிக்கவில்லை" என்றேன்.

இன்னொன்றும் சொன்னேன்.

"தமிழ்த்திரைப் பாடல்களின் நிறத்தையும், மணத்தையும் முற்றிலும் மாற்றி அமைத்துவிட ஆண்டாண்டு காலமாக எனக்கு ஆசைதான். ஆனால் நல்ல பாடல்கள் என்பதும் ஜனரஞ்சகமான பாடல்கள் என்பதும் வெவ்வேறு துருவங்கள் என்று எண்ணப்படுவதே அதற்கு இடையூறாய் இருக்கிறது.

கவிஞனை எழுத வைப்பதற்கு, கதைகளும் இப்போது கை கொடுப்பதில்லை.

முன்பெல்லாம் கதையில் சம்பவம் இருந்தது. இப்போதெல்லாம் ஒரு சம்பவமே கதையாக இருக்கிறது. எனவே தமிழ்த் திரைப்பட பாடல்களை இன்னும் உயர்த்துவது என்பது கவிஞனின் கையில் மட்டுமல்ல; காலத்தின் கையிலும் இருக்கிறது. ●

# தேன் கிண்ணம்

### விடியலை விழுங்கும் கருமேகங்கள்

அங்கு-
நுளம்புகளைக் கொன்றுவிடாமல்
நுளம்புச் சுருள்
வியாபாரம்
சூடுபிடிக்கிறது!
இங்கு-
பிரச்சினைகள் தீர்ந்துவிடாமல்
அவதானமாக
அரசியல் வியாபாரம்
களைகட்டுகிறது!
வியாபாரங்கள்
வெற்றிக்கொடி நாட்ட
இந்த-
வியாபாரிகளுக்கு
வேண்டுவதெல்லாம்
தற்காலிக
தீர்வுகளே!

ஷெல்லி தாசன்-திருகோணமலை.

### ஹைக்கு ஒன்று

கரை கடந்த சந்தோஷம்
கவலையில்லாத சிரிப்பு
பைத்தியக்காரன் ஆன பின்பு.

அழகானந்தம் அரவிந்தன்
கொழும்பு-15.

### தூக்கம்

நிரந்தர
உறக்கத்திற்காக
நேர்த்தியான
ஒத்திகை.

குமார்-இறம்பொடை.

### அவள்!

நிர்ப்பந்திக்காத
என்-
இதய நிஜத்தில்
யாசித்த
விமர்சன மலர்.
மௌன வறுமையில்
கிரகண நிலவாய்
உதித்து-
பௌர்ணமியாய்
புன்னகைத்து,
என்-
இதய நிஜத்தில்
உணர்வுச் சரத்தை
எழுதிய மின்மினி.
சிமிட்டும்
இளமைகளில்
சிந்தும்
ஒளி.

பொத்துவில்- எம்.எல்.சம்மூன்.

### கொஞ்சம் பொறு!

காதலி!
கொஞ்சம் பொறு!!
உன்
விழிகளை விலக்கி
மானிடர்களில்
ஒளியை விதை!
சுயநலத்தை சேமிக்காதே!
பொது நலத்தால்
உன் இதயத்தை
நெய்து கொள்!
அன்பைக் கொய்து
நீ வாழ்!
வேதனை வேலிகளுக்குள்
நம் காதல்
கை கோர்க்கக் கூடாது
வறுமை வேர்களில்
பட்ட மரங்கள்!
ஆணாதிக்கக்கடலில்
மூழ்கி
மூச்சை இழக்கும்
பூம் படகுகள்!
சீதன சாக்கடையால்
வாழ்க்கைக் கடை திறக்கும்
முள்ளந்தண்டில்லாப் புழுக்கள்!
நிர்வாணமாய்ப் போன
நம் தேசம்!
சூரியனைத் தொலைத்த
சகோதரர்கள் இங்கே!
பண முதலைகளின்
வயிற்றுக்குள் ஜீரணமாகும்
ஏழ்மை வியர்வைகள்!
காதலி...!
இப்படி எத்தனையோ
பிரச்சினை முட்கள்!
அந்த
முட்களை உடைத்து
பூக்களை
உருவாக்கும் வரை
கொஞ்சம் பொறு!

நிந்ததாசன்.

### சரித்திரம்

வான் வெளியில் புள்ளினங்கள் வண்ணச் சிறகடிக்க
தேன் மொழியில் குயிலினங்கள் கூவிக் குரல் கொடுக்க
தீன் தேடும் வண்டினங்கள் தாவித் தத்தழிக்க-நான்
ஏனிங்கு பிறவி எடுத்தேனோ?

★

ஆலய மணியோசை அதிர்ந்தது பாதியாக
ஆயுத வெடியோசை அலறியது மீதியாக
அந்தகார அவலங்கள் அன்பை அறுத்துப் போக-நான்
அவனியில் அவதரித்த அந்நியனோ?

★

காடையர் கருணையின்றி கண்ணியமாய் காவலிருக்க
வேடுவ வேந்தர்களாய் விரக்தியில் விழித்திருக்க
தேடுகின்ற தேவியரும் தெம்மாங்கு பாடிவர-நான்
பாடுவது பாவத்தின் பல்லவியோ?

★

எதிர்காலம் ஆழ்கடலாய் எதிரிலே தென்பட
நிகழ்கால தீபங்கள் நிபந்தனை ஆகிட
புதிரோடு புவியதுவும் புலராது சுழன்றிட- நான்
மதிகெட்டு மாய்கின்ற மானிடனோ?

ஜி.பிரபாகர்.

### நடப்பு

இப்போதெல்லாம்
இரவு கூட
அவசரமாய்
தன் இமைகளை
மூடிக் கொள்கிறது.
குருதிப் பேய்களின்
கோரத்
தாண்டவத்தைக்
காணச்
சகியாமல்....


ஏ.அமீர்-சம்மாந்துறை.

### காலக்கொடுமை!

குளத்து நீரைக்
குடித்துக் குடித்து
கொழுத்துப்போன
கொக்கிடம்
யாசகம்
கேட்டதாம்
குளம்.

-மதிப்பிரியன்-

### விலையேற்றம்



வேகமாய் நடக்கிறது
விலைவாசி;
எங்கள்
வறுமைக்கு ஒட்சிசன்
வழங்கி வழங்கி
வேகமாய் நடக்கிறது
விலைவாசி!

★

முன்பெல்லாம்-
எங்களை
பணத்தின் கண்கள்
பார்ப்பதே இல்லை;
இப்போது-
பண்டங்களுமல்லவா
பார்க்கமறுக்கின்றன!

★

கடன் தொல்லையால்
கட்டுப்பட்டு
தேசப் பொருளாதாரம்
தேம்பியழ
வரவை மிதித்துக் கொண்டு
முரட்டுச் செலவு
முன்னேறுகிறது.

★

இங்கு-
குறைந்த விலையில் கிடைப்பது
(இலவசமாக)
குருதி மட்டும்தான்.
விரும்பாச் செயலுக்கு
விலை மலிந்ததால்
தேசம்-
அநியாயங்களையே
தட்டுப்பாடில்லாமல்
தருகிறது!

★

இன்றுவரை நாங்கள்
மூலதனமாக
நினைத்துக் கொண்டிருந்தது
நிம்மதியைத்தான்;
அந்தக்கூட-
விலையேற்றம்
விழுங்கிவிட்டதே!

★

எங்களைப் போன்றே
வறுமைக் கோடுகளால்
வரையப்பட்ட தேசமே...!
இந்த நிலைக்குள்ளுமா
நீ-
ஆயுதங்களால்
அலங்கரித்துக் கொள்ளுகிறாய்?

★

விலையை
அரிசி- பருப்புக்கு
அதிகரித்ததை
மன்னிக்கிறோம்; மறக்கிறோம்.
தேசமே! நீ-
மனிதாபிமானத்தையாவது
மலிவு விலையில் தா!

காத்தான்குடி அனு.



### கழுதை மேல்

குதறித் தள்ளி
குழிபறிக்கும்
குதிரையின் மேல்
சவாரி செய்வதைவிட
சுமந்து செல்லும்
கழுதையின் மேல்
சவாரி செய்வது மேல்!

நிலாப்புத்திரன்-நாரளை.

# இந்த வாரம் உங்கள் பலன்

(19.09.93 முதல் 25.9.93 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், வியாழன், செவ்வாய், புதன் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| சிம்மம் | - வெள்ளி |

19.3.93இல் துலா இராசியில் செவ்வாய் பிரவேசம். 23.3.93இல் துலா இராசியில் புதன் பிரவேசம். சந்திரன் துலாம், விருட்சிகம், தனு, இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: (சுப நேரம்)

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | நிலைப்பிரிவு, புத்திக் குறைவு. | பி.ப 4 மணி |
| திங்கள்- | இனசனக் கஷ்டம், சத்துரு பீடை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, புண்ணியதல யாத்திரை. | காலை 11 மணி |
| புதன்- | கௌரவம், பொருள்வரவு. | பி.ப 1 மணி |
| வியாழன்- | தூர இடப்பிரயாணம், அந்நியர் உதவி. | காலை 10 மணி |
| வெள்ளி- | பொருள் சேர்க்கை, பூமியால் இலாபம். | காலை 7 மணி |
| சனி- | எடுத்த கருமம் வெற்றி, இறைவழிபாடு. | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: (சுப நேரம்)

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், தேகசுகம் நன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- | பணவரவு, காரிய நன்மை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | தூரஇடப் பயணம், புதிய முயற்ச்சி. | பி.ப 1 மணி |
| புதன்- | பிள்ளைகளால் நன்மை, வீண் பிரயாசம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | பணக்கஷ்டம், பெரியோர் உதவி. | காலை 8 மணி |
| சனி- | துயர் நீங்கும், திடீர் பணவரவு. | காலை 9 மணி |

அதிஷ்டநாள் -புதன், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: (சுப நேரம்)

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தனதானிய இலாபம், சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| திங்கள்- | மறைமுக எதிர்ப்பு, பொருள் நட்டம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், பணவரவு. | காலை 10 மணி |
| புதன்- | கருமங்களில் வெற்றி, காரிய சித்தி. | காலை 9 மணி |
| வியாழன்- | துன்பம் விலகும், மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | மனைவியினால் தொல்லை, அந்நியர் நட்பு. | பி.ப 4 மணி |
| சனி- | காரியானுகூலம், பெரியோர் சகவாசம். | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: (சுப நேரம்)

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரிய சித்தி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | இல்லச் சிறப்பு, விருந்துபசாரம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | பண நெருக்கடி, அந்நியரால் தொல்லை. | பகல் 12 மணி |
| புதன்- | நடைக்கஷ்டம், வீண் பிரயாசம். | காலை 9 மணி |
| வியாழன்- | புகழ் மேன்மை, உறவினரால் தொல்லை. | காலை 11 மணி |
| வெள்ளி- | தேகசுகம் பாதிப்பு, கௌரவம். | காலை 8 மணி |
| சனி- | மனக்கஷ்டம், பூரண தொழில் வெற்றி. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: (சுப நேரம்)

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | சரீர சுகம், போசனநிறைவு. | பி.ப 1 மணி |
| திங்கள்- | திடீர்ப் பிரயாணம், நினைத்த காரியத் தடை. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | நற்கீர்த்தி, அந்நியரால் கஷ்டம். | காலை 10 மணி |
| புதன்- | இராசபயம், அபகீர்த்தி. | காலை 9 மணி |
| வியாழன்- | நடைக்கஷ்டம், சரீர காந்தி குன்றுதல். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | தேகமெலிவு, புத்திரராற் கவலை. | பி.ப 1 மணி |
| சனி- | கோப மிகுதி, பண நெருக்கடி. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### கர்க்கடகம்: (சுப நேரம்)

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | காரியசித்தி, கடன்பயம். | காலை 7 மணி |
| திங்கள்- | எண்ணங்கள் ஈடேறும், இனசனக் கொண்டாட்டம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | தேகசுகம் பாதிப்பு, வைத்தியச் செலவு. | காலை 9 மணி |
| புதன்- | துன்பம் விலகும், பணவரவு. | காலை 11 மணி |
| வியாழன்- | புதிய ஸ்தானம், கடன் பயம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | உறவினர் வருகை, சுபகாரிய நன்மை. | பி.ப 3 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, பணவரவு. | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மகரம்: (சுப நேரம்)

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்கவலை, புத்திரர் சுகக் குறைவு. | காலை 11 மணி |
| திங்கள்- | பணவரவு, அந்நியர் உதவி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | நினைத்த காரியத் தடை, நிலைப்பிரிவு. | காலை 11 மணி |
| புதன்- | பயனற்ற பிரயாசம், புதியஸ்தானம். | காலல் 8 மணி |
| வியாழன்- | பொருட் சேதம், வீண் பழி கேட்டல். | காலை 11 மணி |
| வெள்ளி- | வாக்குக் கலகம், வீண் பழி கேட்டல். | பி.ப 3 மணி |
| சனி- | சத்துரு பீடை, சன்மானம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: (சுப நேரம்)

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தனவிருத்தி, இல்லச் சிறப்பு. | காலை 9 மணி |
| திங்கள்- | நற்கருமச் செய்கை, உறவினர் உதவி. | காலை 11 மணி |
| செவ்வாய்- | வீண் அலைச்சல், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| புதன்- | பொருள் வரவு, பெரியோர் அனுகூலம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | அற்ப சுகம், அகால போசனம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | கருமங்களில் வெற்றி, பகைநீங்கும். | காலை 11 மணி |
| சனி- | நீடித்த நோய், பணத்தட்டுப்பாடு. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### தனு: (சுப நேரம்)

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | நற்கீர்த்தி, தேகமெலிவு. | காலை 7 மணி |
| திங்கள்- | இனசனக் கஷ்டம், பொருள்வரவு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | குடும்ப மனஸ்தாபம், பிரயாசமிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- | மனக்கவலை, சத்துருபயம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | ஆரோக்கியம், காரிய ஜயம். | காலை 11 மணி |
| வெள்ளி- | இலட்சுமீகரம், எண்ணங்கள் நிறைவு பெறும். | பி.ப 4 மணி |
| சனி- | சரீர சுகம், தொழில் குறைவு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்: (சுப நேரம்)

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | விச ஜந்து பீடை, வைத்தியச் செலவு. | காலை 8 மணி |
| திங்கள்- | புதிய முயற்சிகளில் வெற்றி, காரியானுகூலம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, பாராட்டு. | பி.ப 3 மணி |
| புதன்- | பணவரவு, காரியசித்தி. | காலை 11 மணி |
| வியாழன்- | கண்டத்திற்கு மேற்பட்ட நோய், கவலை. | காலை 10 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, பணக்கஷ்டம். | காலை 11 மணி |
| சனி- | அந்நியர் சகவாசம். | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்: (சுப நேரம்)

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணத்தட்டுப்பாடு, முன்னேற்றம். | பி.ப 3 மணி |
| திங்கள்- | காரிய சித்தி, திடீர் பிரயாணம். | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | பகைவர் அதிகம், பண நெருக்கடி. | காலை 9 மணி |
| புதன்- | முயற்ச்சி மேன்மை, பணச் செலவு. | காலை 11 மணி |
| வியாழன்- | கடன் பயம், தீராத நோய். | காலை 7 மணி |
| வெள்ளி- | அறிஞர் நட்பு, பணவரவு. | பி.ப 1 மணி |
| சனி- | புதிய முயற்ச்சி, திடீர் செலவு. | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-2

### கன்னி: (சுப நேரம்)

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | வீண்குறை கேட்டல், பிரயாணம். | காலை 10 மணி |
| திங்கள்- | அந்நியர் சகவாசம், முதியோர் உதவி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | பணநெருக்கடி, ஊதாரிச் செலவு. | பி.ப 2 மணி |
| புதன்- | கவலைகள் குறைவுபடும், பணவரவு. | பி.ப 4 மணி |
| வியாழன்- | தனலாபம், வீண் தொல்லை. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, மனைவியால் தொல்லை. | பி.ப 6 மணி |
| சனி- | புதிய முயற்ச்சி, தெய்வானுகூலம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-8

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

அறிந்து கொள்ளுங்கள் – ஆரோக்கியம் பெறுங்கள் – ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ + விந்தைகள்

## மார்பிலே மறைந்துவாழும் சகோதரன் மருத்துவம் மரிக்காமல் மீட்குமா?



தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் நடராஜா.

நடராஜா பிறக்கும் போதே அவருடன் ஒட்டிப்பிறந்த சகோதரனை சத்திர சிகிச்சை மூலம் பிரித்தெடுக்க முடியவில்லை.

காரணம் ஆச்சரியமானது. ஒட்டிப்பிறந்த சகோதரனின் உடலின் பாகங்கள் நடராஜனின் மார்புப்பகுதிகளுக்குள் இருக்கின்றன.

சகோதர பாசம் நெஞ்சில் இருக்கிறது என்கிறார்கள்.

நடராஜன் தனது சகோதரனை நெஞ்சில் வைத்திருக்கிறார்.

நெஞ்சில் இருக்கும் சகோதரனின் இரு கைகளும் ஒரு தோள்மூட்டும் மட்டுமே வெளியே தெரிகின்றன.

கடந்த 42 வருடங்களாக நடராஜனின் சகோதரன் அவரது மார்புக்குள் இருக்கிறான்.

வெளியே தெரியும் கைகளின் விரல்களில் நகங்கள் வளர்கின்றன.

நடராஜன் சாதாரண வாழ்க்கை வாழும்போதும் அவரது வலது காலில் ஊனமிருப்பதால் ஊன்று கோலுடன்தான் நடமாடுகிறார்.

நடராஜனின் தோற்றத்தைக் காட்டும் புகைப்படங்களை ஒரு மருத்துவ மாணவன் மூலம் ரசிய சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் மிக்கோஸ்ட் பார்த்திருக்கிறார்.

உடனடியாக சில ஆராய்ச்சிகளை மேற்கொண்ட ரசிய நிபுணர் லேசர் கதிர்வீச்சு மூலமான சிகிச்சையால் நடராஜனின் மார்பில் மறைந்திருக்கும் சகோதரனை வெளியே கொண்டு வர முடியும் என்று கூறியிருக்கிறார்.

சத்திர சிகிச்சை மூலம் நடராஜனுக்கு உதவ முடியும். உள்ளே இருக்கும் அவரது சகோதரனை உயிரோடு மீட்க முடியுமா என்பது சந்தேகமே என்கிறார் டாக்டர் மிக்கோஸ்கியா.

மறைந்திருக்கும் சகோதரன் மரிக்காமல் வெளியே வர வேண்டும் என்பதே நடராஜனின் ஏக்கம்.

பத்துமாதம் சுமந்த தாய் பாசத்தில் உருகும் போது, 42 வருடம் சுமந்த சகோதரனை இழப்பது சாதாரண சோகமா என்ன?

## முடி உதிர்வோர் முகம் மலரலாம் புதிய கண்டுபிடிப்பு வழிசொல்கிறது



சாதாரண ஒலிவ் எண்ணை தலைமுடியற்று தட்டையாகி விட்டவர்களுக்கு புது முடிவளர உதவுவதாக புதிய கண்டுபிடிப்பொன்று கூறுகிறது. இந்தப் புதிய கண்டுபிடிப்பு தற்செயலாகவே இடம்பெற்றதென சுவீடன் நாட்டின் வாக்ஸ்ஜோ நகர மருத்துவ நிபுணர் டாக்டர் துரே விக்கோஃப் கூறுகிறார்.

ஒலிவ் எண்ணையைப் பயன்படுத்தி தலை வழுக்கையைப் போக்கலாம் என்பதனை ஆய்வுகூட ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கவில்லை.

தனது தலையில் ஒரு வகை சொறி படருவதாக மருத்துவ மனைக்கு ஒரு நோயாளி வந்தார். இவர் 50 வருடங்களுக்கு மேலாக வழுக்கைத் தலையராகவே வாழ்ந்து வந்தவர். இவருடைய தலையைப் பரிசோதித்த டாக்டர் விக்கோஃப் அவருடைய தலையில் சிவப்பு நிறப்படர் இருப்பதைக் கண்டார். அதே இடங்களில் ஒலிவ் எண்ணையினை சிறிதளவு எடுத்து ஒவ்வொரு நாளும் ஒரு நிமிடம் வரை தேய்த்து வரும்படி கூறினார்.

ஆறு வாரங்களின் பின்னர் நோயாளி மீண்டும் மருத்துவ மனைக்கு வந்தார். அவருடைய முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சி தாண்டவமாடியது. அவருடைய தோற்றத்தைக் கண்ட டாக்டர் விக்கோஃப் ஆச்சரிய மேலீட்டால் அதிர்ந்து போனார். அவருடைய தலையில் ஓரளவு முடி வளர்ந்திருந்தது. அது சாதாரண முடிபோல் அல்லாமல் சற்று வித்தியாசமானதாகவே இருந்தது. இருப்பினும் அது தலை முடிதான் என்பதில் ஐயமே இல்லை. ஒலிவ் எண்ணையை வைத்து மேலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டால் நிச்சயமாகப் பெரும் பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. நீண்ட நெடுங் காலமாக ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு பெரும் சவாலாக விளங்கிவந்த வழுக்கைப் பிரச்சனைக்கு இப்பொழுது ஒரு நல்ல தீர்வு கிடைத்திருக்கிறது.

"எண்ணையை வெறுமனே தலையில் தடவுவதனால் மட்டும் பலன் கிட்டப்போவதில்லை. எண்ணையை தலையில் தேய்ப்பதுடன் தலையை உரிய முறையில் (மசாஜ்) அழுத்தித் தேய்ப்பதனால் தான் நல்ல பலன் கிட்டும்" என்கிறார் மற்றுமொரு முடித்துறை வல்லுநர்.

டாக்டர் விக்கோஃபின் கண்டுபிடிப்புப் பற்றிய செய்தி வெளியான காலத்திலிருந்து ஸ்கந்தனேவிய நாடுகளில் ஒலிவ் எண்ணைக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.


## பாத வெடிப்புக்களை சரிப்படுத்த ஒரு கருவி!

சிலருக்கு கால்களில் பித்தவெடிப்பு ஏற்பட்டு இருக்கும். பாதங்களில் தோல் வெடித்து அசிங்கமாகக் காணப்படும்.

அந்தப் பித்த வெடிப்புக்களைப் போக்க இப்போது ஒரு கருவி கண்டுபிடிக்கப்பட்டள்ளது.

இக்கருவியின் பெயர் எலக்டிரிக் எரேசர்.

மிக மென்மையாக வலி இல்லாமல் வெடிப்புக்களில் உள்ள இறந்த சிசுக்களை(டெட்ஸ்கின்ஸ்) அகற்றும்.






## இதுதான் காதல் என்பதா?

அமெரிக்காவில் 50 சதவிகிதமான திருமணங்கள் விவாகரத்தில் தான் போய்முடிகின்றன.

இதேவேளையில் 70 வயதான றே ஏளி லேக்ஸன் 18 வயதான நான்சி ஜோ பெய்லியை திருமணம் முடிக்கப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெளி உலகம் எதைக் கூறினாலும் இந்த சோடி எதையும் பொருட்படுத்தப் போவதில்லை. இந்தக் காதல் சிட்டுக்கள் கடந்த சில மாதங்களாக பல இடங்களிலும் கை கோர்த்துத் திரிகின்றனர். மேற்கு வேர்ஜினியாவிலுள்ள செண். அல்பான்ஸ் நகரைச் சேர்ந்த இந்த சோடியினர் தங்களுக்கிடையிலுள்ள 52 வயது இடைவெளியையிட்டு எக்கவலையும் கொண்டதாகத் தெரியவில்லை. மிக விரைவில் இவர்கள் தங்கள் மகிழ்ச்சியின் உச்சகட்டமான திருமணநாளை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றனர்.

காதலுக்கு கண்ணே இல்லை என்று சொல்லுவார்கள். வயதும் இல்லையோ?

## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—12

குலாம் ஷா எதிர்பாராத திருப்பம். ஆனாலும் குலாம்ஷா ஒடுங்கிப் போகவில்லை.

சாகத்துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கையளவு. குலாம்ஷா துணிந்து விட்டவர்: என்ன நடந்தாலும் சரி ஒரு கை பார்த்து விடுவது என்று இறங்கிவிட்டவர்.

"குலாம்ஷா அவளை ஏன் பிடித்து வைத்திருக்கிறாய்? கொல்லப் போகிறேன் என்று பூச்சாண்டி காட்டும் வேலையை ராஜினாமா செய்துவிடு. ஏன் தெரியுமா? அவள் சாவது பற்றி நாங்கள் ஒன்றும் சங்கடப்படப் போவதில்லை."

கர கர குரலில் குள்ளமானவன் குலாம்ஷா மீது வைத்த விழி விலகாமல் பேசினான்.

குலாம்ஷாவின் பிடியில் இருந்த மதுமிதா மீண்டும் சிரித்தாள்.

"ஷா உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமோ? இங்கு ஒருவர் சாவு பற்றி மற்றவர் கவலைப்படுவதே கிடையாது. நிருபராஜ் பணிந்தது என் உத்தரவுக்கே தவிர என் சாவைத் தடுக்க வேண்டும் என்று நினைத்தல்ல."

மதுமிதா சாவு பற்றிய பயம் இல்லாமல் இப்போது பேசினாள்.

"சரியாகச் சொன்னாய் மது. எங்களுக்கு இவளைவிட நீங்கள் முக்கியம் ஷா. ஒரு மதுமிதா போனால் ஒன்பது மதுமிதாக்களை உருவாக்கி விடலாம். ஒரு குலாம்ஷா தப்பிப் போனால் ஒன்பது அல்ல ஒன்பது ஆயிரம் மதுமிதாக்களைக் கூட உருவாக்க முடியாது. ஏன் தெரியுமா ஷா?"

கேட்டு நிறுத்தினான். விகாரமாய்ச் சிரித்தான்.

அவனை ஒரு குள்ள நரியைப் பார்ப்பது போல் குலாம்ஷா பார்த்தார்.

"என்ன பார்க்கிறீர்கள் ஷா. நீங்கள் தப்பிப்போனால் நாங்களே இருப்பது சந்தேகமாகிவிடுமே. பின்னர் எப்படி மதுமிதாக்களை உருவாக்குவதாம். அதைத்தான் சொன்னேன். எதிரியின் பலம் தெரிந்து விழிப்பாயில்லாவிட்டால் நாம் தொலைந்தோம். உங்கள் பலம் எமக்குத் தெரியும்."

"தெரிந்துமா விளையாடுகிறீர்கள்?"

குலாம்ஷாவின் கேள்வியில் வெறுப்பும் இருந்தது. கோபமும் தொனித்தது.

"நீங்கள் தான் விளையாடுகிறீர்கள் ஷா. எமது கோட்டைக்குள் வந்து தப்புவது சுலபம் என்று நினைத்தீர்கள் பாருங்கள் - அது மகாதவறு. எங்கள் பலம் மதிப்பிட மறந்து போனீர்கள். இப்போது இறந்துபோகப் போகிறீர்கள்."

சொல்லி நகைத்தான். சட்டைப் பையில் இருந்து சிகரெட் பெட்டி எடுத்துப் பிரித்து ஒன்றை எடுத்து உதட்டில் மாட்டினான். அருகில் நின்றவன் லைட்டரை நீட்டி பற்ற வைத்து விட்டான். நிதானமாகப் புகையை வெளியேற்றி ரசித்தபடி குலாம்ஷாவை நோக்கிச் சிரித்தான்.

"உங்களுக்கு சிகரெட் பிடிக்கும் என்று எனக்குத் தெரியும். எனக்கும் சிகரெட் பிடிக்கும். எங்கள் சீக்கிரட் விசயங்களை நீங்கள் ஆராய முற்பட்டது மட்டும் பிடிக்கவில்லை."

"கட்டுமீறிய உங்கள் ஆட்டங்களை கை கட்டி நின்று வேடிக்கை பார்க்கவா கவர்மெண்ட் எங்களுக்கு சம்பளம் கொடுக்கிறது?"

"என்ன பெரிய சம்பளம். இப்போது நீ சாகப் போகிறாய். கவர்மெண்ட் வந்து காப்பாற்றுமா உன்னை?"

கோபமாய் கேட்டான். பேசும் போது கட்டை விரலால் மூக்கின் மையத்தை அடிக்கடி அமுக்கி விட்டுக்கொண்டான்.

"கவர்மெண்ட் என்னைக் காப்பாற்றுகிறதோ இல்லையோ உன்னை நிச்சயம் காப்பாற்றாது."

"குலாம்ஷா உன் துணிச்சலை, உன் என்று ஒருமையில் அழைப்பதில் ஆட்சேபனை இல்லையே, ம்......உன் துணிச்சலை கேள்விப்பட்டவற்றில் பழுதே இல்லை என்று நம்புகிறேன்."

"சந்தோசம். கேள்விப்பட்டாய்- நேரில் கண்டாய். அனுபவத்திலும் அறிந்து கொள்ள ஆசைப்படுகிறாய்."


"அதெப்படி ஷா அனுபவத்தில் அறிந்து கொள்வது?

குள்ளன் கேட்டான்.

குள்ளனின் பின்புறம் இருந்த கதவு திறந்தது. வந்தவன் கறுப்பு சட்டை அணிந்திருந்தான். கறுப்புக் கண்ணாடி போட்டிருந்தான். தாடி வைத்திருந்தான். குள்ளனின் காதோடு ஏதோ சொன்னான்.

குள்ளனின் முகத்தில் அதிர்ச்சி ஒன்று மின்னலாய் வந்து மறைந்தது. குலாம்ஷாவுக்கும் அது புரிந்தது.

பதட்டம் தெரிந்த குரலில் குள்ளன் குலாம்ஷாவை நோக்கிப் பேசினான்.




"குலாம்ஷா உங்களோடு விளையாட எனக்கும் ஆசைதான். சமமான எதிரியோடு சண்டை போடுவதையே எந்த வீரனும் விரும்புவான்."

"உன்னை நீயே வீரனாகச் சொல்லிக் கொள்ளுகிறாய். அதை நானும் ஒத்துக் கொள்ள வேண்டாமா?"

"வேண்டாம். ஏன் என்றால் அடுத்த நிமிடமே சாகப் போகும் நீ ஒத்துக் கொள்வதால் எனக்கொரு கொம்பு முளைக்குமா? இல்லையே."

காட்டமாகச் சொல்லிவிட்டு தன். அருகில் நின்றவன் பக்கம் திரும்பி,

'சூட்'

உத்தரவிட்டான் குள்ளன்.

மதுமிதாவை கவசமாக முன் நிறுத்தி தன் பிஸ்டலை உயர்த்தினார் குலாம்ஷா.

பாதுகாப்புக்காக நிலை எடுத்து எதிரியைத் தாக்க இது ஏற்ற இடம் இல்லை. மதுமிதாவைத் தொடர்ந்து கவசமாக்க முடியாது. முடியுமானவரை எதிரிகளை அழித்துவிட்டு அந்தத் திருப்தியோடு சாகவேண்டியதுதான். குலாம்ஷா முன்கூட்டியே மனதில் குறித்து வைத்திருந்தார். திட்டம் வகுத்து வைத்திருந்தார்.

'சூட்'

என்று குள்ளன் உத்தரவிட அந்த உத்தரவு நிறைவேறும் முன்னரே குலாம்ஷாவின் பிஸ்டல் வெடித்தது.

உத்தரவை நிறைவேற்ற ஆயுதம் தூக்கியவனின் நெற்றிப் பொட்டில் குறி தவறாமல் தோட்டா போய் துளைத்தது.

ஆ... என்று அலறியபடி அவன் சாய, குள்ளன் தரையில் குப்புற விழுந்து படுத்தான்.

கரங்களால் இரு செவிகளையும் பொத்தியபடி குலாம்ஷாவைப் பயத்தோடு பார்த்தான். பயத்தோடு கத்தினான்.

"மடையர்களே இந்த மிருகத்தை சுட்டுத் தள்ளுங்களடா"

அதிர்ச்சியில் உறைந்து போன அடியாட்கள் கூட்டம் ஆயுதங்களை உயர்த்தியது.

மீண்டும் சீறியது ஷாவின் கரம் இருந்த பிஸ்டல்.

கண்ணாடி போட்டிருந்த தாடி நெஞ்சின் மையத்தில் தோட்டாவுக்கு இடம் கொடுத்தான். நெஞ்சைப் பொத்தியபடி பின்புறமாய் சாய்ந்தான். அடியாட்களின் ஆயுதங்களில் இருந்து புறப்பட்ட தோட்டாக்கள் குலாம்ஷா நோக்கி வந்த நொடியில்.....

குலாம்ஷாவின் வலப்புறமாய் இருந்த சுவர் விலக்கியது.

உள்ளிருந்து நீண்ட கரம் குலாம்ஷாவின் கரத்தில் பிடித்து உள்ளே இழுத்தது.

அடியாட்களின் ஆயுதங்கள் பொழிந்த தோட்டாக்கள் குறி தவறிப் போயின.

உள்ளே இழுக்கப்பட்ட குலாம்ஷா இழுத்த கரத்தை தட்டி விட்டு பிஸ்டல் உயர்த்தினார்.

"வேண்டாம். நான் ரம்யா"

என்றாள். என்றபடி உள்புறச் சுவரில் பட்டன் ஒன்றை அமுக்கினாள். விலகிய சுவர் மீண்டும் இணைந்தது.

ரம்யா என்று சொன்னதில் குலாம்ஷா ஆச்சரியமானார். உள்ளே இருட்டு. முகம் தெரியவில்லை. எனினும் குரல் அவள் ரம்யாதான் என்று உறுதி தந்தது.

செத்தவள் எப்படி எழுந்து வந்தாள்? தோட்டா துளைத்து இரத்தம் கொட்டியதை கண்டதும் பொய்யா?

குலாம்ஷா குழப்பமானார்.

"ரம்யா நீ எப்படி?"

"முதலில் தப்பிக் கொள்ள வேண்டும் ஷா. பிறகு ரம்யா எப்படி செத்துப் பிறந்தாள் என்பதை அறியலாம்."

சொல்லியபடியே குலாம்ஷாவின் கரம் பற்றியபடி இருட்டுக்குள் இடம் அறிந்து முன்னேறினாள் ரம்யா.

இருட்டுக்கு தன் விழிகளைப் பழக்கப்படுத்திக் கொண்டு குலாம்ஷா ரம்யாவின் முகம் பார்க்க திரும்பினார்.

அதிர்ந்தார் குலாம்ஷா.

முகத்தை கறுப்புத் துணியொன்றால் மூடிக் கட்டியிருந்தாள். கண்களில் மட்டும் இரு துவாரங்கள் தெரிந்தன.

குலாம்ஷாவின் உள்ளே சந்தேகம் எட்டிப்பார்த்தது?

"இவள் ரம்யாதானா? எப்படி நம்புவது?"

தன் முகம் பார்க்க முயன்று முடியாமல் சந்தேக ரேகைகள் பரவிய குலாம்ஷாவின் முகம் பார்த்து ரம்யா சத்தம் அதிகமில்லாமல் சிரித்தாள்.

குலாம்ஷா மேலும் குழப்பமானார். அவள் முகத்துணி விலக்க கரம் உயர்த்தினார்.

டக்...டக்...டக்....

குலாம்ஷாவின் கரம் உயர்ந்த நேரத்தில் எதிர்ப்புறம் இருந்து காலடி ஓசை கேட்டது.

மறு நொடியில் குலாம்ஷாவை இழுத்தபடி சுவரோடு சுவராய் பதுங்கிய ரம்யா தன் இடுப்பில் இருந்து கத்தி உருவினாள்.

உருவிய கத்தியை குலாம்ஷாவை நோக்கி நீட்டினாள்.

■

மதுமிதா மீது பாய்ந்த தோட்டா அவள் தோள் மூட்டில் போய் இடம் பிடித்துக் கொண்டது.

வெளியே துப்பாக்கிகளும் வாய்மூடிக் கொண்டன.

வாகனம் ஒன்று சீறிக் கொண்டு புறப்பட்டுச் செல்லும் சத்தம் உள்ளே கேட்டது.

பிஸ்டலை முன்நோக்கி குறி வைத்தபடி வெளியே ஓடினார் டி.ஐ.ஜி. டென்சில்.

துணைக்கு வந்த கொன்ஸ்டபிள்கள் இருவரும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

அவர்களின் துப்பாக்கிகளை காணவில்லை.

வேட்டை! எதிரியின் வேட்டை! குறைத்து மதிப்பிட்டு விட்டோம்.

மாபெரும் சதி வலை விரிக்கப்படுவது தெரியாமல் அலட்சியமாய் வந்து மாட்டிவிட்டோம். எனினும் விடப்போவதில்லை.

டி.ஐ.ஜி டென்சில் உக்கிரமானார். சாய்ந்து கிடந்த காவலர்கள் மீது பார்வையை மீண்டும் வீசியவர் கண்களில் பட்டது அது.

பாரம் வைக்கப்பட்டு படபடத்துக் கொண்டிருந்த கடிதம்.

வேகமாய் சென்று குனிந்தெடுத்து படித்தார்.

திகைப்பாய் நிமிர்ந்தார்.

(இன்னும் வரும்)

■

## சிந்தியா பதில்கள்

மனிதனின் தேவை எதோடு முற்றுப் பெறுகிறது?

**எஸ்.எச்..ஜியாஸ்-மூதூர்.**

உண்மையாகவே முற்றும் துறக்கும் சாவு நிலையில்.

■

ரஜனியின் வள்ளியைப் பற்றி சில வரிகள்?

**பிரியதர்சன்-மட்டக்களப்பு.**

வழக்கமான சினிமாத்தனத்திலிருந்து மாறுபட்ட முடிவை தந்ததன் மூலம் வித்தியாசமான கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

■

பெண்களிடம் இரகசியம் தங்காதது ஏன்?

**எஸ்.பாபு-அவிசாவளை.**

யார் பாபு அப்படிச் சொன்னது? அதி முக்கிய ராஜதந்திரக் காரியங்களையே பெண்கள் கவனிக்கும் காலம் இது.

■

சிந்து! சில மனிதர்கள் பணத்தைக் கண்டவுடன் பந்த பாசத்தைக் கூட மறந்து விடுகிறார்களே, அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**கவிப்பிரியா நிஷா-வெல்லம்பிட்டி.**

நடமாடும் பிணங்கள். பிணம்தானே பணம் என்றால் வாய் திறக்கும் என்பார்கள்.

■

பிரபலமான கவிதை ஆசிரியர் யார்? அவரின் முகவரியைத் தருவீர்களா?

**எஸ்.பிரேம்-பெரியகல்லாறு.**

'கண்ணா நீ எங்கே போட்டாய் அப்பா!' சொறி, பிரேம். அவர் சொர்க்கத்தில் இருப்பதால் முகவரி அறிய முடியவில்லை.

■

தேங்காய் விலை மீண்டும் கூடுமா? (நான் ஒரு தேங்காய் வியாபாரியாக்கும்)

**எச்.எம்.மஸ்னவி-புத்தளம்.**

தேங்காய் குறைந்தால் விலையும் கூடும். அது சரி அது வாங்குவோர் கவலைப்பட வேண்டிய விசயமாச்சே.

■

காதல் கசப்பா அல்லது இனிப்பா?

**எ.எச்.எம் ரிசான்-குருநாகல்.**

ஒரு சுவை மட்டும் இருந்தால் தெவிட்டும். காதலில் இரு சுவை மட்டுமல்ல பெருஞ் சுவைகள் பல உண்டு.

■

ஒரு மனிதன் முன்னேற்றமடைவதற்கு தேவையானவை எவை?

**எ.பாலசுப்பிரமணியம்-ஹேவாஹெட்ட.**

தன்னம்பிக்கை, தளராத முயற்சி.

■

காலங்களால் அழியாதது காதலா? கல்வியா?

**என்.ஸலீம்-நமுனுகுல.**

அழியாத காதல்கள் பற்றி எழுதி வைக்க கல்வியறிவுள்ளவர்கள் இல்லாமல் போயிருந்தால் அம்பிகாவதி அமராவதி கதை எமக்கெப்படி தெரியும். இப்போது நீரே தீர்மானித்துக் கொள்ளும்.

■

கபில்தேவ் உலக சாதனையை முறியடிப்பாரா?

**சத்திய சீலன்-கொழும்பு-12.**

முறியடிப்பார். அவரால் முடியும்.

■

இந்திய கிரிக்கெட் வீரர் கபில் தேவ் இலங்கையில் சாதனை நிகழ்த்துவார் என்று எதிர்பார்த்து ஏமாற்றமானோம். கபில் சாதனை நிகழ்த்தாமைக்கு காரணம் என்ன?

**செல்வி நிர்மலா முருகையா-பண்டாரவளை.**

நிகழ்த்த மாட்டார் என்று முரசு முன்கூட்டியே சொல்லிவிட்டதே நிர்மலா. களம் சாதகமாக அமையவில்லை. அதனால் சாதனையும் நிகழவில்லை.

■

பெரும் பரபரப்புக்கு உள்ளான அழகி பமீலா எங்கிருக்கிறார்?

**வா.ஜெயந்தி-கிளிநொச்சி.**

பமீலா என்ன பெண்ணுக்கு பெண்ணுக்கே பொறாமைப்படும் பேரழகியோ! உமக்கெதற்கு அந்த ஜோடி தேடும் நாயகியின் முகவரி?

■

அந்தக்கால சினிமா உலகிற்கும் இந்தக் கால சினிமா உலகுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

**வி.சரோஜா-ஹட்டன்.**

அன்று மரத்தோடு மார்பு மோத வைத்து படமெடுத்தார்கள். இப்போது மார்போடு மார்பு மோதவைத்து படமெடுக்கிறார்கள். அன்று கதையில் கவனம் செலுத்தினார்கள். இன்று சதையில் கவனம் செலுத்துகிறார்கள்.

■

முரளிதரனை ஏன் ஒதுக்குகிறார்கள்?

**ஸ்ரீ ரவி-இரத்தினபுரி.**

இப்போது அப்படித் தெரியவில்லை.

■

தமிழ் நாட்டு அரசியல் நிலை பற்றி சில வரிகள்?

**சுபத்ரா பெருமாள்-கோட்லோஜ்.**

அரசியல் ஒரு சாக்கடை என்று அண்ணா சொன்னதை மட்டும் மறந்து விடாமல் இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

■

பிரபுவின் மனைவியின் பெயர் என்னவென்று கூறமுடியுமா?

**எப்.பகுமிலா பர்வீன்-புத்தளம்.**

முடியாது. ஏன் என்றால் தெரியாது.


■

ஒரு மனிதன் அவன் வாழ்வில் எப்போது முழுச் சந்தோசமடைகிறான்?

**க.சுதன்-செங்கலடி.**

தன் கனவுகள் கைப்படும் போது.

## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: ஏ.ஜி. சேகர்
வயது: 28
முகவரி: மிஷன் வீதி, அக்கரைப்பற்று.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, கரம்.



பெயர்: எஸ்.பி. வசந்தி
வயது: 20
முகவரி: 52, மீப்பிலிமான, நுவரெலியா.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், பூங்கன்று வளர்த்தல்.



பெயர்: எம். றயிஸுதீன்
வயது: 20
முகவரி: றோயல் ரெக்கோட் பார் பிரதான வீதி, கல்பிட்டி.
பொழுதுபோக்கு: கலை இலக்கியத் தொடர்புகள், பாடல்கள் கேட்டல்.



பெயர்: மொஹமட் இல்யாஸ்
வயது: 34
முகவரி: 155/7, மொஹிதீன் மஸ்ஜித் றோட், கொழும்பு- 10.
பொழுதுபோக்கு: பேனா நண்பர்கள் தொடர்பு, பத்திரிகைகள் வாசித்தல்.

பெயர்: எஸ். கண்ணன்
முகவரி: 32, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.
பொழுதுபோக்கு: ரி.வி., வானொலி, பத்திரிகை.

பெயர்: செல்லையா கௌரி
வயது: 23
முகவரி: 20 பீ., வட்டவீதி, களுதாவளை, மாத்தளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர்: எம்.ஸீ. அக்மல் முகமட்
வயது: 18
முகவரி: 76, பெரகும்பா வீதி, குருநாகல்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட் செய்திகளைச் சேகரித்தல்.

பெயர்: பாத்திமா ரமீஸா
வயது: 19
முகவரி: 421, நாரயன்பிட்டி வீதி, கொழும்பு-05.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

பேனா நண்பர் அரங்கம்
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை, கொழும்பு-5.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்




"நோ.... நோ... அப்படியெல்லாம் இல்லை. உன்னோட டெலிபோன்ல பேசினதுக்கும் இப்போ உன்னைச் சந்திக்கிறதுக்கும் நான் சந்தோசப்படறேன். நான் சந்திச்ச, என்னோட காரிலே வந்த எத்தனையோ பேரில நீ ஒருத்தி இல்லைன்னு எனக்கு அப்பவே தெரியும். 'தட் இஸ் வை ஐ ஃபெல்ட் கில்டி' நான் உன்னை நினைக்கக் கூடாதுன்னே நினைக்காமலிருந்தேன். அந்த 'ஈவினிங்' கோட நான் உன்னை மறந்துடறது நல்லதுன்னு மறந்துட்டேன். நான் உனக்கு ஒரு உண்மையைச் சொல்லட்டுமா? என் 'லைஃப்'லே நான் கெடுத்த ஒரே பெண் நீதான். மத்தவங்க எல்லாம்....."

சீச்சீ...எதை மறக்க வேண்டும் என நினைத்து ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்க'ளுக்குள் புகுந்தேனோ, அந்த மனிதரே என்னைக் குழப்பிவிடுவார் என நான் நினைக்கவில்லை.

புத்தகத்தை வைத்து விட்டு இனிய நினைவுகளுக்குள் மட்டும் புகப்பார்க்கிறேன். முடியவில்லை. மனக்கம்பியூட்டர் எந்த இனியவையையும் ஏற்றுக் கொள்வதாயில்லை. எல்லாமே 'ஏர்ரர்.' ஆண்டவனே! சின்ன வயதில் பல்லிக்கு வால் அறுப்பதைத் தவிர வேறு எந்தப் பாவமும் நான் மனமறிந்து செய்யவில்லையே. என்னை ஏன் இப்படி ஒரு பாவம் செய்ய வைத்தாய்.

கண்ணை மூடிப்படுத்தாலும் மனக் கம்பியூட்டர் பிடிவாதமாக இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. சம்பவங்களின் தொடர் 'பிரின்ற்' ஆகி வந்து கொண்டிருக்கிறது.

மாலை நான்கு மணி. அந்த பஸ் தரிப்பு நிலையம் மிக விழிப்பாக இருந்தது. நகரத்தின் இரைச்சலும் வேலை பார்த்த களைப்பும் மனிதர்களின் முகத்தில் சினமாக அச்சேறியிருந்தது. இரண்டொரு ஜோடிகளைத் தவிர மற்றவர்கள் புன்னகையை மறந்து நின்றார்கள். நான் மட்டும் கமகமக்கும் 'செண்ட்' வாசனை, கறுப்புக் கண்ணாடி, வண்ண உடை, எனக்கே உரிய ஒற்றைத் திருநீற்றுப் பூச்சுடன் நிற்கிறேன். மற்றவர்கள் எல்லோரும் பஸ் பிடித்து வீடு செல்வதற்காகக் காத்திருக்க நான் மட்டும் அவளுக்காகக் காத்திருக்கிறேன்.

இன்னும் ஒரு மணித்தியாலம் இருக்கின்றது. அது வந்து சேர்வதாகத் தெரியவில்லை. மூவாயிரத்து அறுநூறு வினாடிகள் அல்லவா! கடிகாரம் பார்ப்பதிலேயே நான்'செஞ்சரி' போட்டு விட்டேன். அந்த ஐந்து மணி மட்டும் வருவதாயில்லை. அருகில் நின்ற எல்லோருடைய இதயத்துடிப்பும் சீராகத்தான் இருக்கும். எனக்கு மட்டும் கொஞ்சம் எண்ணிக்கை கூடவாகவே உள்ளது. வேகம் கூடிக்கூடிக்... கூடி...இதயம் பிளந்துவிடுமோ....

இறுதித்தடவை என நினைத்தபடி கடிகாரத்தைப் பார்க்கிறேன். 4.55 காட்டுகிறது. சந்தேகத்தில் அடுத்தவர் கையையும் பார்க்கிறேன். அங்கும் அதே தான். இன்னும் ஐந்து நிமிடங்கள் தான் இருக்கிறது. இன்னும் அரை மணித்தியாலம் பிந்தி ஐந்து நிமிடங்கள் வரக்கூடாதா. அந்த இடையில் என்னை ஆசுவாசப் படுத்திக் கொள்ளலாம். எதையும் பின் போடுவது தான் எனது சுபாவம். வந்த காரியத்தை மறந்து திரும்பிப் போய் விடலாமா என்று கூட நினைக்கிறேன். நோ....நோ... இன்று முடிவு அறிந்து விட வேண்டும். இன்னும் ஆரம்பிக்கவே இல்லை என்பது வேறு விடயம்.

இத்தனைக்கும் நான் எதிர்ப்பார்த்துக் காத்திருக்கும் அவள் எனது வீட்டு அனெக்சில் குடியிருப்பவள். கதைக்க வேண்டியதை வீட்டிலேயே கதைத்திருக்கலாமே. எத்தனை நாள் நாங்கள் தனித்து இருந்திருக்கிறோம். எல்லாம் எனது முன் யோசனையின் பின்விளைவுதான். வீட்டில் வைத்துக் கதைத்தால், கதைக்கப் போகும் விடயத்திற்கு அவள் உடன்பாடாக இல்லாமல் இருந்தால், அவளுக்குக் கோபம் வரும். அதை அவள் வெளிக்காட்டினால் எனது பெற்றோர் அல்லது அவளது பெற்றோர் என்னைக் கண்டிக்கலாம். களைப்படையும் போது நான் படுத்துக் கொள்ளும் அம்மாவின் மடி முள்ளாகலாம். அன்றி- அவளுடைய தாய்- எனக்காகவே விசேடமாகத் தயாரித்து நெய், சீனிச் சம்பலுடன் தரும் தோசை...அதைவிட மேலாக பெற்ற பிள்ளைபோல் என்மீது அவ காட்டும் அன்பு கிடைக்காமல் போகலாம். இது பற்றியாருடனும் ஆலோசிக்க முடியாது. நான் தான் யாருடைய ஆலோசனைகளையும் கேட்கும் ஆளில்லையே. நீண்ட யோசனையின் பின் இங்கு வந்து அவளுடன் கதைக்க முடிவு செய்தேன். ஒரு மணித்தியாலம் பயணம் செய்யும் போது அவள் எல்லாவற்றையும் மறந்துவிடலாம். அல்லது என்மீது உள்ள கோபத்தை பஸ்ஸிலேயே விட்டுவிடலாம்.

வாகனங்கள் வருகின்றன. போகின்றன. என்னோடு நிற்கும் மனிதர்கள் மறைகிறார்கள். புதியவர்கள் வருகிறார்கள். நான் மட்டும் அப்படியே நிற்கிறேன். நான் சொன்னேன் என்பதற்காக அவள் வேலை செய்தபடியே மேற்கொண்டு படித்தது... தனக்குத் தெரிந்த தின்பண்டங்களை எல்லாம் செய்து எனக்கு முதலில் பரிமாறி எனது விமர்சனத்திற்காகக் காத்திருப்பது.... எனக்குப் பிடிக்கும் என்பதற்காக தனக்குப் பிடிக்காத ஜெயகாந்தனையும் சுஜாதாவையும் பாலகுமாரனையும் படிப்பது.... மசாலாக்களில் மனிதர் திளைத்திருக்க என்னோடு வங்காளத் திரைப்படங்களில் மூழ்குவது..... மனத்திரையில் வரிசையாக ஓடுகிறது. சாத்தியக்கூறுகள் ஏராளம். எனது மனம் திடப்படுகிறது. இதயத்துடிப்பும் சீராகிறது. எனக்குச் சாதகமாகத்தான் நிறைய சம்பவங்கள் நடக்கிறதே நான் ஏன் 'நெக்கட்டிவ் அப்ரோச்' செய்ய வேண்டும்?

எதிரே வந்து கொண்டிருக்கிறாள். களைத்துவரும்போது கூட அழகாய்த்தான் இருக்கிறாள். அதிக தடவை அடிக்க இதயம் அடம்பிடிக்கிறது. அடக்கிக் கொள்கிறேன். நெருங்கி விட்டாள்.....

"என்ன மனோ இங்கை நிக்கிறியள்?" புன்னகையுடன் வந்தது கேள்வி.

"உம்மைச் சந்திக்கிறதுக்காகத்தான் கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலமாக் காத்திருக்கிறன் சோபா" மிகக் கஷ்டப்பட்டு சிரிப்பேயில்லாத முகத்துடன் விழுங்கி விழுங்கிச் சொல்லி முடித்தேன். 'தேவர் மகன்', ரேவதி கதைத்ததைப் போல. எனது முகத்தையும் வியர்வையையும் பார்த்துப் பயந்து விட்டாள் சோபா.

"ஏன் வீட்டிலை என்ன நடந்தது? கெதியாகச் சொல்லுங்கோ மனோ" பதறினாள்.

"பயப்படாதேயும். வீட்டிலை ஒண்டும் நடக்கவில்லை. பட் ஐ ஹாவ் டு ரெல் யு சம்திங்க்." பதட்டப்படும் போது எனக்கு அன்னிய மொழிகள் கைகொடுப்பது வழமை. அதுவும் இந்த 'சம்திங்' இருக்கிறதே...

"மனோ பஸ் வருது. நாங்கள் போய்க் கொண்டே கதைப்பம். வீட்டிலை கதைக்க முடியாத என்ன விசயம் என்னோடை கதைக்கப் போறியள்?" ஓரளவு விளங்கிக் கொண்டவள் போல் கேட்கிறாள்.

"இல்லை நான் இப்ப வீட்டுக்கு வரேல்லை. நீர் போறதெண்டால் அந்த பஸ்சிலை போம்." பின்போடும் புத்தி முன்னுக்கு வந்தது. இவள் இப்போது போனால் இனி எப்போது கதைப்பது என்ற கேள்வியும் கூடவே வந்தது.

சத்தமாகச் சிரித்தாள். வந்த பஸ் போய்விட்டது.

"என்னோடை அந்தக் கண்டக்டரே கதைக்க வேணும் எண்டு சொன்னவர்? கதைக்க வேணும் எண்டு சொல்லிப் போட்டு ஏன் கலைக்கிறியள் மனோ?" என்றவள் "வாங்கோ அந்தச் சந்திவரையும் நடந்து போவம். அதுக்குள்ளை உங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டு விசயத்தைச் சொல்லலாம்." என்றாள்.

அவளோடு மெல்ல நடந்து கொண்டிருந்தேன். என்னை எல்லோரும் பொறாமையாகப் பார்த்தார்கள். இந்த அவலட்சணத்திற்கு இப்படி ஒரு தேவதையா? கண்களில் கேள்வியும் கேலியும். ஆணும் பெண்ணும் சேர்ந்து நடந்தால் இந்த நகரத்தில் அர்த்தம் வேறுதான். நூறுவருடம் சென்றாலும் மாறாது.

"என்ன மணவறைக்குப் போறமாதிரிக் குனிஞ்ச படியே வாறியள். விசயத்தைச் சொல்ல மாட்டியளே?" எச்சில் விழுங்கினேன். முடியவில்லை.

"எனக்கு உம்மைப்பிடிச்சிருக்கு சோபா. உமக்கும் என்னைப் பிடிச்சிருந்தால் வீட்டிலை சொல்லி ஒரு முடிவு எடுப்பம்."

அவளை நான் பேசவிடவில்லை. நீண்ட காலமாக 'மைக்' கிடையாத அரசியல்வாதி போலத் தொடர்ந்தேன். "நீர் என்னை விரும்புவாய் எண்டது எனக்குத் தெரியும். உம்மை எங்கடை வீட்டிலை எல்லாருக்கும் பிடிச்சிருக்கு. உம்முடைய அடக்கம், பணிவு, திறமை பற்றி அடிக்கடி கதைப்பினம்." இடையிடையே பொய்யும் சொன்னேன். ஆயிரம் பொய் சொல்ல அனுமதி உண்டல்லவா!

அவளுடைய முகத்தை வாசித்தேன். வெறுப்பை அறிய முடியவில்லை. "உங்களெட்ட உப்பிடி ஒரு ஐடியா இருந்தால் என்னோடை பழக வேண்டாம்" மொட்டையாகச் சொல்லி முடித்தாள்.

என்னைப் பற்றிச் சிறிது சுயபுராணம் படித்து முடித்தேன். அவளுக்குத் தெரியாததா. இருப்பினும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டேன். "உடனடியாகச் சம்மதம் சொல்வது எந்தப் பெண்ணுக்கும் அழகில்லை. அதாலை நீங்கள் முடிவு சொல்ல வெட்கப்படலாம். அடுத்த வெள்ளிக்கிழமை சொன்னால் போதும்."

பஸ் வந்தது.

சிரித்தபடியே பஸ்ஸில் ஏறினாள். அடுத்தது வசந்தமா பிரளயமா எனத் தெரியாது விழி பிதுங்கி நின்றேன். வழமைபோல் எல்லாக் கடவுள்களையும் துணைக்கழைத்தேன்.

"இப்பவும் 'பிளேன்' போனால் வெளியிலை ஓடியந்து பார்க்கிறவன். அவன் உப்பிடிச் செய்வான் எண்டு நான் நினைக்கயில்லை. முப்பது வருஷமா செல்லங்குடுத்து வளத்தது... இந்த நாய்..." அம்மா முதற்தடவையாக என்னை ஏசுவது கேட்டது. எல்லா நினைவுகளும் தடைபட்டன.

நூற்றி முப்பத்தைந்தாம் பக்கத்தில் விட்ட ஜெயகாந்தனை மீண்டும் தொடர்கிறேன். ஓரளவு எல்லாவற்றையும் மறந்தவனாகப் புத்தகத்தினுள் மூழ்கி விட்டேன். கங்காவும் பிரபுவும் மஞ்சுவும் தான் மாறி மாறி வந்து கொண்டிருந்தார்கள். சோபா வரவில்லை.

"ஒருத்தியோட இஷ்டமில்லாம இதுவரைக்கும் நான் யாரையும் தொட்டது கூட இல்லை. அப்படி ஒரு தப்பு நான் உன் விசயத்திலை தான் செஞ்சுட்டன். அதுவும் நீ சம்மதிக்கிறேன்னு தப்பா நம்பினதால தான். என்னால உங்கிட்ட அப்பிடி நடக்க முடிஞ்சுது... இதை நியாயம்னு நான் இப்ப சொல்ல வரலை. அந்த அநியாயம் நடக்கிறதுக்குக் காரணமாயிருந்தது ஒரு தப்பான நம்பிக்கைன்னு சொல்றேன்....." நடந்தவற்றை மறப்பதற்குப் புத்தகம் படிக்கத் தொடங்கினால், அந்தப் புத்தகமே திசையை மாற்றுகிறதே...

வீட்டுக்கு வந்த போது அங்கு புயலுமில்லைத் தென்றலுமில்லை. எதுவுமே நடவாதது போன்று வழமை போல என்னோடு சோபா வீடியோவில் 'சாருலதா' பார்க்கிறோம். ரசித்துப் பார்க்கிறாள் சோபா.

அடுத்த நாள் சனிக்கிழமை. அவளே தயாரித்த லட்டு என்னிடம் சுவைபார்க்க வந்தது. அடுத்த வெள்ளி வரவேண்டிய முடிவு சனிக்கிழமையே லட்டாக வந்தது. துள்ளிக் குதித்தேன். இருப்பினும் வெள்ளி வரை பொறுமை காட்டினேன். வெள்ளியோடு வசந்தமும் வந்தது. அவளை நான் வென்றுவிட்டேன். நாட்கள் மிக வேகமாக நகர்ந்தன. பால் புளித்தது போல நான் புளிக்க ஆரம்பித்தேன்.

என்மேல் அலட்சியக் கொடி படரத் தொடங்கியது. எனக்குக் கோபம் ஏற்படுமாறு 'நடந்தாள். சினத்தாள். முகத்துக்கெதிரிலேயே அலட்சியம் செய்தாள். கோபத்தைக் காட்ட முடியவில்லை. அன்பின் செறிவு கூடுதலாக இருந்தது. ஒவ்வொரு செயற்பாடும் என்னையறியாமல் இதயத்தின் ஒரு மூலையில் விதைக்கப்பட்டது.

எனக்குப் பிடித்த எவையுமே எனக்குப் பிடித்ததால் அவளுக்குப் பிடியாமற் போனது. ஜெயகாந்தனும், சுஜாதாவும் பாலகுமாரனும் அன்னியராயினர். வங்காளப் படங்கள் உதவாக்கரைகளாயின. பொறுத்துப் பார்த்தேன். முடியவில்லை. நானே மெல்ல மெல்ல ஆரம்பித்தேன்.

"சோபா ஏன் என்னோடை அப்பிடி நடந்து கொள்ளுறியள். நான் என்ன பிழை செய்து போட்டன்?"

"நான் எப்பவும் ஒரே மாதிரித்தான் நடக்கிறன். உங்களோடை நீங்கள் நினைக்கிறமாதிரி நடக்கிறதுக்கு நான் யார்? அல்லது நீங்கள் எனக்கு யார்?"

பதறிப்போனேன்.

"அப்ப நீர் என்னை விரும்புவதாகச் சொன்னதெல்லாம்...,"அலட்சியச் சிரிப்பால் இடைமறித்தாள்.

"என்ன மனோ! உங்களுக்கு வேறை வேலையில்லையே. நான் எப்ப சொன்னனான்?"

என்னைக்கிள்ளிப் பார்த்துக் கொண்டேன்......இவள் ஏன் இப்படி யானாள். பொய்யாகச் சத்தியம் கூடச் செய்கிறாளே. எல்லாப் பெண்களும் இப்படித்தானோ? சீச்சி...அப்படியிராது... பெண்கள் மென்மையானவர்கள்.

எல்லோரும் மென்மையாயிருக்க இவள் மட்டும் ஏன் இப்படி மாறினாள்? விடை காண முடியாத வினாவானாள். அலட்சியமும் அவமதிப்பும் தொடர்ந்தன.

இதயத்தின் ஒரு வளமான மூலையில் அவையெல்லாம் விதைக்கப்படுவதை என்னால் உணரமுடிகிறது.

மிக நெருக்கமாகத் தனிமையில் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. மீண்டும் அதே விடயம் பற்றிப் பேச்சைத் தொடங்குகிறேன். முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்கிறாள். எனக்குள் வளரத் தொடங்கிய அந்த விசவிருட்சம் என்னை மிருகமாக்குகிறது. வேண்டாம்... வேண்டாம்.... மூளைக்குச் செய்தி பறக்கிறது...அந்த மிருக மனம் செய்தியைத் தடுக்கிறது. என்னுள் ஏதோ கிளர்கிறது. நிச்சயமாகக் காமம் அல்ல. சபலமும் அல்ல. பின் எதுதான் அது. ஆத்திரம்...கோபம்....பழியுணர்ச்சி....? புரியவில்லை.

கட்டியணைத்து முத்தமிடுகிறேன்.

ஒரு வினாடியில் மிருகம் அடங்கி விட்டது. அவள் வாயடைத்து நிற்கிறாள்.

மனித மனம் விழித்துக் கொண்டது. அவமானத்தில் குன்றிப் போகிறேன். அவமதிக்கப்பட்ட எந்த ஆடவனுக்கும் இப்படி ஒரு சந்தர்ப்பம் இலகுவாகக் கிடைப்பதில்லை. எனது துர்அதிஷ்டம். கிடைத்துவிட்டது.

அந்த ஒரு வினாடியில் தடம் புரண்டது நான் தானா? எனக்குள் இப்படி ஒரு மிருகமா? எனக்கு மட்டும்தான் இரண்டு பக்கங்களா? அப்போ அவளுக்கு...? என்னை நானே சிறைப்படுத்திக்கொண்ட நான்கு சுவர்களுக்குள் எனக்குப் பதில் கிடைக்குமா?

'சில நேரங்களில் சில மனிதர்க'ளுக்குள் மீண்டும் புகுந்து கொண்டேன்.

(யாவும் கற்பனை)

---

## நா(ன்) வேணுமா? தினமுரசு வேணுமா?

-ஹப்புத்தளையூர் எப். லெனாட்குமார்-

அன்று (02.09.93) வியாழக் கிழமை. வழமைக்கு மாறாக காலையிலேயே எழுந்து ஹப்புத்தளைக்கு பயணமாகிக் கொண்டிருக்கிறேன். எதற்கு...?

"நம்ம தினமுரசு வாங்கத்தான்"

நேரமாக நேரமாக முகத்திலே சிடு சிடுப்பு. சாப்பிடாமல் ஓட்டமும் நடையுமாக பஸ் "ஸ்டாண்டை" அடைகிறேன்! "சே..பஸ் வரவில்லை" இதயம் "படக் படக்"கென அடித்துக் கொண்டது.

கிட்டத்தட்ட 25 நிமிடங்களின் பின் பஸ்ஸின் வருகை. மிதிபலகையில் கூட நிற்க இடமில்லாத அதில் குரங்கைப் போல • தாவினேன். ஏற்றம்!

சுமார் 40 நிமிடங்களின் பின் இறக்கம்! கைக்கடிகாரம் இப்போது மணி 7.34ஐ நினைவூட்டியது. இப்போது இதயத்துடிப்பு கூடி "பக்கு பக்கு" என அடித்துக் கொள்கிறது.

ஓட்டம்...!

"தினமுரசு இருக்கா...?" இல்லையென்பாரோ என்ற பயம்.

"நல்ல நேரம் தம்பி... உங்க ஓடர் பேப்பர் மட்டுந்தானிருக்கு... கொண்டு வந்த பேப்பர் 7.00மணிக்கெல்லாம் முடிஞ்சிடிச்சி." வாங்கினேன்...



நடந்தேன்... ஒவ்வொரு பக்கமாய் அசைபோட்டுக் கொண்டே...

"குமார்" திரும்பினேன். எந்தன் இதய நாயகி குனசிலா....!

"எங்கே" என்றேன்.

"தினமுரசு வாங்கத்தான்"-அவள் கிடைச்சுச்சா" சித்திர தொடரை-ரசித்தபடி...

"இல்ல..." சோகத்துடன் என்னவள்....

"ஒரு பக்கந்தாங்க...." கெஞ்சினாள்....

"பாத்துட்டு தாரன்" கோபத்துடன் நான்!

"குடுங்க முதல்ல நான் பாத்திட்டு தாரன்" பிடித்திழுத்தாள்.

"இப்பதான் வாங்கினேன்" என் கையிலே தினமுரசு...

"குடுக்க முடியுமா முடியாதா...?" கண்டிப்புடன் அவள் கண்களும் சிவந்தன.

"முடியாது" முடிவாக...அவள் கண்களில் கண்ணீர் என் இதயத்தில் இரத்தம்.

"உயிரையே தருவேன்னீங்களே" எந்தன் நாயகி...."தருவேன்...! ஆனா தினமுரசயில்ல!"

"வச்சிக்கங்க...நான் முக்கியமா தினமுரசு முக்கியமா?"

என் தலையில் இடி..... நீண்ட யோசனை. அதற்குள் கண்ணே மதுமிதாவும் தெரிந்தாள்.

"இப்போதைக்கு தினமுரசு" இது நான்!

அவள் முகத்தில் ஏக்கம்! விரைந்தாள் கோபத்துடன்....

"குனசிலா...குனசிலா..குனசிலா" ம்... திரும்பவேயில்லை.

■

மறுநாள் அந்திச் சந்திப்பு. நேற்றைய கோபம் இன்னுமிருந்தது.

"கோபமா" கிள்ளினேன்.

"ம்"முகத்தை திருப்பினாள்...

"தினமுரசு எங்க" கண்டிப்பு, கோபம்...நடிப்பு தான்... இரண்டு முறை "இச்"- எனக்கா?

இல்லை தினமுரசுக்கு (எனக்கு கொடுக்க கூடாதா?)- ஏக்கம்.

தொடர்ந்து தினமுரசில் அவள்- "என்னா குனசிலா"... பிடித்தேன் கையை.

"விடுங்க பேப்பர படிக்கணும்" தொடர்ந்தாள்.... மௌனம்...எனக்கோ ஆத்திரம்.

"பேசுவே"ம்...மௌனம்....

"குனசிலா உனக்கு தினமுரசு முக்கியமா? நா (ன்) முக்கியமா?" கோபத்துடன் (பொய் கோபத்துடன்) நான்.

மௌனம்...!மீண்டும் கேட்டேன். கோபத்தோடு பார்த்தவள் சொன்னது...

"தினமுரசு"!

(யாவும் உண்மை)



- "ஏன் அந்தப் பாடகரைக் கண்டவுடன் பொலிஸ் காரங்க எல்லாரும் சல்யூட் அடிக்கிறாங்க?"
- "அவர் 'எஸ்.பி.' பாலசுப்ர மணியம் ஆச்சே..."

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

'கடி'க்கதை

புதுமை+இனிமை=கதை

# கடிகடியாம் காரணமாம்!

—எர். சுரேஷ்—



நிகழ்ச்சி முடிவில் குஷ்பூ உங்கள் ஒவ்வொருவரோடும் தனித்தனியாகக் கை குலுக்கி உரையாடுவார்!!

தமிழ்ச் சங்கத் தலைவர் திரு திருவென விழித்தார். "என்னங்க நானும் கேட்டுக்கிட்டே இருக்கேன் நீங்களும் முழிச்சிக்கிட்டே இருக்கீங்களே.... ஒங்க தமிழ்ச் சங்கத்தில எவ்வளவுங்க நிதி இருக்கு?" பூபாலசிங்கம் கேட்க தலைவர் அசடு வழிந்தார். "ஹி.....ஹி... முந்நூறு ரூபாய்களும், ஐம்பது சதங்களும் கைவசம் இருக்கின்றன."

"ஆகா! என்னே தமிழ்ப்பற்று. என்னே தமிழ்ப்பற்று.... யோவ் இதைச் சொல்ல ஒனக்கு வெக்கமா இல்லையா? உடனடியா நம்ம தமிழ்ச் சங்கத்துக்கு பெரும் தொகை பணம் வர்றமாதிரி நான் ஒரு நிகழ்ச்சி செய்யப் போறேன்." கூறிவிட்டு கிட்டத்தட்ட இருபது பற்கள் தெரியும்படி சிரித்தார் பூபாலசிங்கம். (மிகுதிப் பற்கள் இருந்தால் தானே தெரிவதற்கு!) தலைவருக்கு ஆச்சரியம். நிகழ்ச்சியைப் பற்றி விசாரித்தார். பதில் "கும்மி நடனம்" என்று வந்தவுடன், தலைவர் கும்மி நடனம் ஆடாத குறையாக எழுந்து அங்குமிங்கும் நடந்தார். (ஓடினார் என்று கூறினாலும் பிழையில்லை)

"கும்மி நடனம்ன்னு எதைச் சொல்றீங்க... நாலைஞ்சு பொண்ணுங்க, ரெண்டு குச்சியைக் கையில வைச்சிக்கிட்டு, தட்டித்தட்டி ஆடுவார்களே அதுவா?" கேட்டுவிட்டுக் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்க முயன்று முடியாமல் போக... "போன முறை தமிழ்ச்சங்க நிதிக்காக ஒரு பெரிய நாடக நிகழ்ச்சி ஒழுங்கு பண்ணி, 10 ரூபா டிக்கட்டில 10 க்கூட விக்கமுடியாமத் தவிச்சது எனக்குத்தாம்ப்பா தெரியும்.... அப்படி இருக்கும் போது நீ கும்மி நடனம் போடலாம்ன்னு சொல்றியே...இது ஒனக்கே ஞாயமா இருக்காப்பா..." சிவாஜி பாணியில அழ ஆரம்பித்துவிட்டார் தலைவர். பூபாலசிங்கம் மீண்டும் நிலம் அதிரச் சிரித்தார். கையை விட்டார்- பைக்குள்! வெளியே எடுத்தார்- சில டிக்கட் புத்தகங்களை!

டிக்கட் விலையைப் பார்த்த தலைவர் அழுவதைக்கூட மறந்துவிட்டார். ஆமாம் டிக்கட் விலை 500/= ரூபாய்.

"யோவ் கும்மி நடனத்துக்கு 500 ரூபாய் டிக்கட்டை யாருப்பா வாங்கு வான்." கத்தினார் தலைவர். "அவசரப் படாதீங்க தலைவரே கீழே பாருங்க" பார்த்தார். ஆச்சரியத்தால் விழிகள் விரிந்தன. "நிகழ்ச்சி முடிவில் குஷ்பு உங்கள் ஒவ்வொருவரோடும் தனித் தனியாகக் கைகுலுக்கி உரையாடுவார்" பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டி ருந்தது." "எ...என்ன.... கு...குஷ்புவா?" மயங்கி விழுந்தார் தலைவர்!

விசயம் காற்று வாக்கில் பறந்தது. ஊரெல்லாம் இதே கதைதான். குஷ்பு கைகுலுக்குவதாக இருந்தால் 500 என்ன 5000 தரவும் பலர் தயாராய் இருந்தனர். நிகழ்ச்சி தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னமே எல்லா டிக்கட்டுக்களும் காலி! வயது வித்தியாசமின்றி எல்லோரும் எப்படியோ பணம் திரட்டி டிக்கட் வாங்கிவிட்டனர். (இந்தக் காலகட்டத்தில் பல வீடுகளில் எவர்சில்வர் பாத்திரங்கள் காணாமல் போனது வேறுவிடயம்!)

பிறகென்ன....இருட்டில் பலருக்குத் தங்கள் மனைவியர் குஷ்புவைப் போல் தெரிந்தனர்...... ஒரே குஷ்பு நினைவு தான்....பலர் குஷ்புவுடன் கைகுலுக்கு வதற்காக தங்கள் கைகளை "ரின்சோவில்" ஊறப்போட்டுவிட்டனர். சிலர் "குஷ்பு வுடன் கைகுலுக்கிய பிறகுதான் இந்தக் கையால் சாப்பிடுவேன்" என்று சபத மேடுத்ததால், தங்கள் மனைவியின் கைகளைத்தான் பயன்படுத்திக் கொண்ட னர். (சாப்பிடுவதகுத்தான்)

நிகழ்ச்சித் தினமும் வந்தது. மண்டபம் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. ஏற்பாடு செய்தவர்களே ஓடுமளவிற்கு கும்பி நடனம் படு பயங்கரம்! இருப்பினும் கூட்டம் அசையவில்லை. கடைசியில் குஷ்புவுடன் கைகுலுக்க வேண்டும்.... ஒருவாறு 2 மணிநேரம் கும்மோ கும்மென்று கும்பி ஒருவாறு நடனம் முடிந்தது. பலத்த கரகோசம். (நிகழ்ச்சி முடிந்ததற் காகத்தான்)

அறிவிப்பாளர் மேடைக்கு வந்து, மைக்கைப் பிடித்து கடிக்காத குறையாக கொக்கரிக்க ஆரம்பித்தார். "அடுத்து நீங்கள் ஆவலாக எதிர்பார்த்த நிகழ்ச்சி! நாங்கள் தெரிவித்தது போலவே குஷ்பு உங்களுடன் கை குலுக்கி உரையாடுவார். ஆனால் குஷ்புவை மண்டபத்திற்கு அனுப்பினால் நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு ஏதாவது (?) செய்துவிடுவீர்கள். ஆகவே தயவு செய்து ஒவ்வொருவராக மேடைக்கு வந்து குஷ்புவுடன் உரை யாடலாம். அமைதி..... அமைதி.... எங்கே உங்கள் அபிமான குஷ்புவை மேடைக்கு வருமாறு அன்போடு அழைக்கிறேன்"......

கரகோஷம் விண்ணை முட்டியது. விசில் சத்தம் காதைப் பிளந்தது. சிறிது நேரத்தில் குண்டாய் ஒரு கறுத்த பெண் மேடைக்கு வந்து "சிலோமோசனில்" கையசைத்தாள். மண்டபமே மூச்சடைத் துப் போனது. எங்குமே பயங்கர அமைதி. மயங்கி விழுந்தனர்..... ஒருவர் எழுந்து அழாத குறையாக சோகமாய் கத்தினார் "யோவ் யாருய்யா இவ.... குஷ்பு கை குலுக்கிறதா அறிவிச்சிங்களேடா பாவிங்களா" கேட்டுவிட்டு தாறுமாறாய்த் திட்ட ஆரம்பித்துவிட்டார். அதைத் தொடர்ந்து விரக்தி கோஷங்கள், கேள்விகள்....

அறிவிப்பாளர் மீண்டும் மைக்கைக் கடிக்க ஆரம்பித்தார். "ஐயா! இந்தப் பெண்ணின் பெயர் சத்தியமாய்க் குஷ்புதான். நீங்க இதை நம்ப மாட்டீர்களென்று, அந்தப் பெண் தனது அடையாள அட்டையைக் கூடக் கொண்டு வந்திருக்கிறாள்...... நாங்கள் குஷ்பு உங்களோடு கைகுலுக்குவதாக அறிவித் தோமே தவிர, பிரபல தென்னிந்திய நடிகை குஷ்பு கைகுலுக்குவதாக அறிவிக்க வில்லையே......"

பேசி முடிக்க முன்னமே, முக்கால் வாசிக் கூட்டம் "இவளுக்குக் கைகொடுப்ப தற்கு, சும்மாவே போகலாம்" என்று நினைத்ததோ என்னமோ மண்டபத்தை விட்டு வெளியேற ஆரம்பித்துவிட்டது மிகுதிக் கால்வாசிக் கூட்டம் "கொடுத்த பணத்திற்கு இவளுக்காவது கைகொடுத் துத் தொலைப்போம்" என்று வரிசையாய் மேடைக்கு வந்து "கைகுலுக்குகிறோம்" என்ற பெயரில் கையை பிடுங்கி எடுக்க முயன்று கொண்டிருந்தது. (சிலர் கைகொடுக்கும் போது உணர்ச்சிவசப் பட்டு நல்ல வார்த்தைகளால் வாழ்த்தி யதும் இங்கு குறிப்பிடத்தக்கது!)

குஷ்புவுடன் கைகுலுக்குவதற்கு ஆசையாய் வந்த ஒரு தாத்தா துக்கம் தாங்காமல் அழ, அவரை ஒரு இளைஞர் "ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா" என்று பாடி தேற்றிய காட்சி பலரது உள்ளத்தை நெகிழ வைத்தது.

மீண்டும் மைக் "நாங்கள் இன்னும் இதைப் போன்ற சூப்பர் நிகழ்ச்சிகளைத் தர எண்ணியுள்ளோம். உள் நாட்டில், கௌதமி, மீனா, ஐஸ்வர்யா, சுகன்யா, ரோஜா, போன்ற சொந்தப் பெயர்களை யுடைய இளம் பெண்கள் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்...." இடையே மறித்த ,தயாரிப்பாளர் "சார் மண்டபத் துக்குள்ள யாருமே இல்லீங்க."

"ஹி.....ஹி....கொஞ்சம் உணர்ச்சிவசப் பட்டுட்டேன்."

பரவாயில்ல நல்லா உணர்ச்சிவசப் படுங்க..."

"அப்ப குஷ்புவை நானே 'கார்ல' கொண்டுபோய் விட்டுடுறேன்"

"ஹி....ஹி...அவங்க கார்ல ஏறிப் பழக்கமில்லைன்னு நடந்து போய் ரொம்ப நேரமாச்சுங்க."

சிறுகதை

# நீ இல்லாத உலகத்திலே!...

—முகில் வண்ணன்—



வாசுகி கடந்த இரண்டு வருட மாகத்தான் அழுது கொண்டு இருக்கிறாள். அவளது அழுகைக்கு முடிவே இல்லை. கண்கள் பெரும் கொடைவள்ளல்கள் போல் கண்ணீரை வாரி வழங்கிக் கொண்டிருந்தன. வற்றாத ஜீவநதியாக அவை கண்களில் ஓடிக் கொண்டிருந்தது. பார்ப்போர் அவளைக் கண்டு வியக்காத நாள் இல்லை.

இத்தனை நாளும் அவள் தன் தாய்க்காக உயிர்வாழ்வதற்குச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறாள். அவள் உடம்பு பாதிக்குமேல் குறைந்து விட்டது. வீட்டுக்கு வந்த அவளது சித்தி கேட்டாள். "என்ன பிள்ள நீ சாப்பிடுறதே இல்லையா?"என்று.

"ஏன் சித்தி சாப்பிடாம? சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் அது உடம்பில ஒட்டுது இல்லை. நான் என்ன செய்ய?" என்றாள்.

"நீ இப்படி உருகி உருகிக் கண்ணீர் வடித்துக் கொண்டு இருந்தால் எப்படி உடலில் ஒட்டும்?"

"எப்படிச் சித்தி நான் மறப்பேன். மறக்கக்கூடிய வாழ்வா வாழ்ந்த நாங்கள்?"

சித்தியால் மேற்கொண்டு பேச முடிய வில்லை. மெல்ல அகன்று விடுகிறாள்.

★

தேவனுக்கும் அவளுக்கும் திருமணம் நடந்தது நேற்றுப் போல் இருக்கிறது அவளுக்கு. அத்தனை பசுமையாக இருக்கிறது அந்த நினைப்பு.

வாசுகி தேவனைப் பலமுறை அந்த ஊர் நிகழ்ச்சிகளில், கோவிலில், ஆர்.டி.எஸ் கூட்டங்களில் படுதீவிரமான சமூக சேவையாளனாகக் கண்டிருக்கிறாள். அவனது சுறுசுறுப்பும் கடமையில் காட்டும் ஆர்வமும் அவளை அறியாமலே அவன்பால் ஈடுபாடு கொள்ள வைத்தன. மணந்தால் இவனை அல்லது இவனைப் போல் ஒருவனை மணக்க வேண்டும் என்று அவள் மனம் ரீங்காரமிட்டது. அவன் செல்லும் இடங்களுக்கெல்லாம் அவளும் ஆர்வமுடன் சென்று கலந்து கொண்டாள்.

அவனைப் பார்த்து கண்களால் ரசித்துச் சுவைப்பதில் அவள் இன்பம் கண்டாள். தேவனோ இது எதுவும் அறியாது தானும் தன் வேலையுமாக இருப்பான். வாசுகி பலமுறை வலியச் சென்று பேச வேண்டும் என்று நினைப்பாள். நாணம் தடுத்து விடும். 'எனது நிலையை அறிந்து அவராகவே என்னைக் காதலிப்பதாகக் கூறவேண்டும்' என்று பெண்மை கூறிற்று. அவன் இவளைக் கண்டு கொள்ளவே இல்லை. மற்றப் பெண்களுடன் தேவைக்கு எப்படிப் பழகினானோ அப்படியே ஓரிருமுறை கோவிலில் வைத்துக் கதைத்திருக்கிறான். அவ்வளவே!

இப்படி இருந்த வேளையில்தான் தாய் தேவனைத் தனக்கு மணம் பேசும் முயற்சியில் இறங்கி இருப்பதை அறிந்தாள். பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் இருந்தது. பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் போது அவள் அவனைப் பார்க்கவே வெட்கப்பட்டு தலையை கவிழ்த்துக் கொண்டாள். 'இப்ப மட்டும் ஏன் என்னை விழுங்கி விடுபவர் போல் பார்க்கிறார்?' என்று உள்ளம் அவளிடம் கேட்டது.

'எனக்கு கணவனாக வரப் போகிறவர் அல்லவா அதுதான் ஆசையாகப் பார்க்கிறார்' என்று பதில் கூறிக் கொண்டாள்.

திருமணம் சிறிய தொகை சொந்தக் காரர்களுடன் இனிதே ஆடம்பரமின்றி நடந்து முடிந்தது. அவள் அகம் மகிழ்ந்து போனாள். மனம் கிளர்ந்து ஆர்ப்பரித்தது. 'நான் நினைத்தவறே எதிர்பாராமல் எனக்குக் கணவராக வந்து அமைந்து விட்டார்' என்று கூத்து ஆடியது எனலாம்.

திருமணமானதும் தனது எண்ணத் தையும் அது ஈடேறிய விதத்தையும் தேவனுடன் பகிர்ந்து கொண்டாள். எல்லாம் மறந்து இன்பம் துய்க்க வேண்டிய பருவத்திலே இருவரும் தங்கள் உள்ளம் திறந்து பேசினர். தேவன் கல்விக் கந்தோரில் எழுதுவினைஞனாகக் கடமையாற்றினான்.

"வாசுகி எனது சம்பளம் சின்னது. அதற்குள் நாம் குடும்பம் நடத்த வேண்டும். நான் படித்து விரைவில் கிளாஸ் ரூ எடுத்து விடுவேன். அதன்பின் கை நிறையச் சம்பளம் எடுக்கலாம். நாம் ஒரு வருடத்துக்குக் குழந்தை இல்லாமல் இருப்போம் என்று நினைக்கிறேன். உனது விருப்பம் எப்படி?" என்றான்.

"செலவுக்குக் காசைப்பற்றிக் கவலைப் பட வேண்டாம். அம்மாவின் பென்சன் காசும் நமக்குத்தான். ஆகவே கவலையை விடுங்கள்" என்றாள்.

"ஏன் ஒருவருடத்துக்கு தாங்க மாட்டியா? கவலைப்படாதே. பாதுகாப் பான முறைகள் இருக்கின்றன" என்றான்.

"சீ... போங்கள்" என்று கைகளில் முகம்புதைத்தாள்.

திட்டமிட்டபடி அவர்கள் குடும்பம் மகிழ்ச்சிகரமாக ஓடிக் கொண்டிருந்தது. ஏழெட்டு மாதம் முடிந்து இருக்கும். நாட்டில் நிலவிய அமைதி நீங்கி மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கியது. பயங்கர வாதிகள் காட்டில் ஓடி மறைய சும்மா இருந்த இளைஞர்கள் பலர் பலியாகினர்.

ஊரில் அடிக்கடி சுற்றி வளைப்பும் தேடுதலும் நடந்தது. இளைஞர்கள் அழைத்துச் செல்லப்படுவதும், விசாரிக்கப் படுவதும் சிலர் தடுத்து வைக்கப்படுவதும் வழக்கமான செயலாக இருந்தது. இப்படிப் பலமுறை நடந்த போதும் ஒவ்வொரு முறையும் முன்னர் விடுபட்டவர்களாக இருந்த போதும் பின்னர் பிடிபட்டனர்.

இவ்வாறுதான் மூன்றாவது சுற்றி வளைப்பின் போது கோவிலடிக்குக் கொண்டு செல்லப்பட்ட தேவன் வரவில்லை. வாசுகி அழுது கொண்டு ஓடினாள். அதிகாரி "கவலைப்பட வேண்டாம். விசாரித்து விட்டு விடுவோம். நாங்க என்ன செய்யிறது? தலையாட்டி காட்டியது"

என்று கொச்சைத் தமிழில் பேசினார்.

ஆறுமா அந்தப் பேதை நெஞ்சம்! அது பட்ட பாட்டைச் சொல்ல வார்த்தை ஏது? ஊன் இல்லை உறக்கம் இல்லை. தினமும் காலை முதல் மாலை வரை கேம்ப் வாசலில் தவம் இருந்தாள். மூன்று மாதம் ஓய்வு ஒழிச்சலின்றி நடந்தாள். பிரஜைகள் குழுத்தலைவர், சமாதான சபைத் தலைவர் என்று அவள் செல்லாத இடமே இல்லை.

மூன்று மாதத்துக்குப் பின்னர் அவளுக்குக் கிடைத்த பதில் அவளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஆமாம். "அவரை விடுவித்து விட்டோம். அவர் இப்போது கேம்பில் இல்லை" என்பதாகும். அவன் காணாமல் போன பட்டியலில் சேர்க்கப்பட்டான்.

அவன் இறந்து விட்டானா இல்லையா என்று அறிய முடியாமலும் அவன் இறந்ததற்கான ஆதாரம் இன்றி பதிவை வைத்து எடுக்க முடியாமலும் அவள் பட்ட கஷ்டம் சொல்லுந்தரமன்று. காலம் அவள் கவலையை மாற்றும் என்றுதான் அவள் தாய் உட்பட அனைவரும் எண்ணிக் கொண்டிருந்தனர். ஆனால் அவளிடம் தோற்றது காலமே. அதனால் அவளை மாற்ற முடியவில்லை.

பால் போன்ற முகத்தில் பொட்டும் தலையில் பூவுமின்றி கோயிலில் தினமும் சென்று அழுதழுது வணங்குவதுதான் அவள் வேலை. அவளது வணக்கத்தைக் கண்ட அர்ச்சகர் சொன்னார்:

"அம்மா உனது வணக்கத்தை இந்தத் தெய்வம் ஏற்று உனக்கு ஆறுதல் தரவில்லை என்றால் இதற்கும் கண் இல்லை என்றுதான் அர்த்தம்" என்றார். அவரால் கூடப் பொறுக்க முடியவில்லை.

இவ்வாறு இதுவரை இரண்டு வருடங்களைக் கழித்து விட்டாள். அவளை எவரும் தேற்றமுடியவில்லை. அன்றி லிருந்து இன்றுவரை அவளில் எந்த மாற்றமும் இல்லை. உடம்புமட்டும் இளைத்து இருந்தது.

அவளது கணவனைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. அவளது எல்லா முயற்சிகளும் தோல்வியிலே முடிந்தது.

அவள் ஒரு முடிவுக்கு வந்து விட்டாள். இதுவரை அம்மாவுக்காக வாழ்ந்தவள்- இன்னும் வாழ்வதில் அர்த்தம் இல்லை என்று கண்டு கொண்டாள். எத்தனையோ பேர் எடுத்த மறுமண முயற்சிகளும் அவளது பிடிவாதத்தினால் தோல்வியில் முடிந்தன. ஆமாம்;

"அத்தான் நீங்கள் இல்லாத உலகத் திலே இனி நான் வாழ்ந்து எந்தப் பய னும் இல்லை. இன்னும் ஒருவன் இந்த உடலைத்தீண்ட விடமாட்டேன். விரை வில் உங்களை வந்தடைவேன்" என்று அடிக்கடி அவள் மனம் கூறிக் கொண்டது.

இவ்வாறு ஒரு நாள் ஆலயத்தில் இருந்து திரும்பி வந்து கொண்டிருந்தாள் வாசுகி. பைசிக்களில் வந்து இறங்கிய மனோகரன் அவளருகே இறங்கி சைக்கிளை உருட்டிக் கொண்டு கூடவே நடந்தான். அவனைப் பற்றி ஊருக்கே தெரியும். துடுக்கானவன் என்று பெயர் பெற்றவன். இப்போது மணம் முடித்து விட்டதால் அடங்கி இருப்பான் என்று எண்ணியபடி குனிந்த தலை நிமிராமல் நடந்து கொண்டிருந்தாள் வாசுகி.

"என்னம்மா வாசுகி. பத்தினிப் பொண்ணு. மறுமணம் எல்லாம் வேணாம் என்றாயாமே! உனது அழகும் இளமையும் இப்படி வீணாகலாமா? எனக்கே பார்க்க மனம் பொறுக்குதில்லை. பொடியன்கள் பலர் அழிந்து விட்டதால் இப்போது மாப்பிள்ளைகளுக்குத் தட்டுப்பாடுதான். அதுதான் ஒவ்வொருவரும் அம்பிடு கிறவனை அமத்திக் கொள்கிறார்கள். எப்படி இன்னுமொருவனை ஏமாத்துறது என்று நீ எண்ணுவதும் சரிதான். அப்படிப் புதியவனை ஏமாற்ற வேண்டாம். என்னைப் போல் பலர் உன்னை ஆசை நாயகியாக வைத்திருக்கக் கண் வைத்து இருக்கிறாங்க. ஏன் நானுந்தான். அப்படி இஷ்டம் என்றால் சொல்லு. நாளைக்கே வந்து ஏற்பாட்டைச் செய்கிறேன். சீறாதே. எதுக்கும் என்னையும் கவனத்தில் வைத்துக்கொள் நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு சைக்கிளில் ஏறிச் சென்றுவிட்டான்.

உடல் பதறியது அவளுக்கு. ஓட்டமும் நடையுமாக வீட்டிற்கு வந்தாள். அப்படியே விழுந்து அழுதாள். தன்னை நொந்தாள், கணவனை நொந்தாள், தெய்வத்தை நொந்தாள். மனம் ஆற வில்லை. தான் இனி என்ன செய்வது என்று எண்ணினாள். பேப்பரை எடுத்துக் கடிதத்தை எழுதினாள்.

*அன்புள்ள அம்மாவுக்கு,*

என்னை மன்னித்து விடம்மா. இது வரை உனக்காகவே வாழ்ந்தேன். இனியும் என்னால் வாழமுடியவில்லை. அத்தான் இல்லாத உலகத்திலே என்னால் வாழவும் முடியாது. கயவர்கள் என்னை வாழவும் விடமாட்டார்கள் என்றும் புரிந்து கொண்டேன். ஆகவே இனியும் மண்ணுக் குப் பாரமாய் வாழ்வதில் அர்த்தமில்லை என்று முடிவு கட்டி விட்டேன்.

என் சாவுக்கு யாரும் காரணமில்லை. அத்தான் இல்லாததால் நான் இந்த உலகைவிட்டே போகிறேன்.

இப்படிக்கு
அபலை வாசுகி.

எழுதி மடித்து வைத்துவிட்டு மூட்டைப் பூச்சி மருந்தை எடுத்துக் கொண்டாள். கணவனை ஒரு முறை எண்ணிக் கொண்டாள். தாய் வீட்டில் இல்லாதது வசதியாகப் போய்விட்டது.

வீட்டுக்கு வந்த தாய் மரக்கட்டை யாகக் கிடந்த வாசுகியின் உடலைக் கண்டு கதறி ஊரைக் கூட்டினாள்.

கேள்விப்பட்ட அர்ச்சகர் தெய்வத்தின் முன்னால் நின்று கண்ணீர் விட்டார். விதியை வெல்ல யாரால் முடியும்? அர்ச்சகருக்கும் புரியவில்லை. இல்லை அந்த தெய்வத்துக்கும் அவள் மீது பாசம் மறைந்து விட்டதோ?

*(யாவும் கற்பனையே!)*



# சாதனை மீது சந்தேகமா?

டென்மார்க்கிலுள்ள மருத்துவமனை ஒன்றில் பதினைந்து குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார் ஒரு தாய்.

ஒரே நாளில் நடந்த பிரசவம் அது. சென்றவார முரசில் அது செய்தியாக வந்திருந்தது.

பலர் வியந்து நம்பலாமா என்று கேட்டது நம் செவிகளில் விழுகிறது.

ஏற்கனவே 12 குழந்தைகளை ஒரே சமயத்தில் பிரசவித்தவரின் பெயர் கிறிஸ்டினா. உலக சாதனைப் புத்தகமான 'கின்னஸ்' கிறிஸ்டினாவின் பெயரை சாதனையாளர் பட்டியலில் பொறித்து வைத்திருக்கிறது.

பிரசவத்தில் உலக சாதனை புரிந்தவர்கள் சிலரது விபரங்கள்.

1924இல் ஸ்பெயின் நாட்டில் ஒரு பெண்மணி ஒரே நேரத்தில் 10 குழந்தைகளை பெற்றெடுத்தார்.

1946 ஏப்ரல் 22ல் பிரேசில் நாட்டில் ஒரு தாய் ஒரே சமயத்தில் 10 குழந்தைகளைப் பெற்றெடுத்தார். இது கின்னஸ் புத்தகத்தில் பதியப்பட்டது.

1992, மே 5ம் திகதி கிறிஸ்டினா நோபார்க் என்னும் பெண்மணி ஒரே சமயத்தில் 12 குழந்தைகளைப் பெற்றெடுத்தார். முன்னைய உலக சாதனையை முறியடித்தார்.

இப்போது அதனை முறியடித்திருப்பவர் கிறிஸ்ரன் சொரன்சன். 15 குழந்தைகளை ஒரே நேரத்தில் பிரசவித்துள்ளார்.

குழந்தைகளைப் பராமரிக்கும் தாதியின் படமும், அதிசய செய்தி வெளியாகிய பத்திரிகைகளில் ஒன்றின் பகுதியும் இங்கு வெளியிடப்படுகிறது.

தீர்ந்ததோ சந்தேகம்?




# மாடி வீட்டுத் தொடரில் மர்ம மரணங்கள்

## சாவுகள் 33 ஆவியின் வேலையா?

லொஸ் ஏஞ்சல் புறநகர் பகுதியில் அமைந்துள்ளது அந்த அடுக்குமாடிக் கட்டிடம்.

கட்டிடம் கம்பீரமாகத்தான் நிற்கிறது. உள்ளே இருக்கும் குடியிருப்பாளர்கள்தான் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

1990ம் ஆண்டு புது வருடப் பிறப்பன்று தொடங்கிய நடுக்கம் இன்றுவரை தொடர்கிறது.

90ல் புதுவருடம் பிறந்த போது அந்த அடுக்குமாடித் தொடரில் வாழ்ந்த 56 வயது பெற்ரி றோஹற்றர் என்பவர் இறந்த செய்தியும் கூடவே வந்தது.

குளியலறைத் தொட்டிக்குள் அவர் வழுக்கி விழுந்துவிட்டதால் ஏற்பட்ட மரணம் என்றது பொலிஸ்.

அத்தோடு முடிந்திருந்தால் குடியிருப்பாளர்கள் குலை நடுக்கம் கொண்டிருக்க மாட்டார்கள்.

புதிதாக கல்யாணமாகி அந்த அடுக்குமாடித் தொடரில் குடிபுகுந்த மணமகன் ஒருவர் இறந்தார்.

புதுமணமகன் மட்டுமா இறந்தார்?

தமது பத்தாவது ஆண்டு திருமண நிறைவை உறவினர்களோடு கொண்டாடி விட்டு படுக்கைக்கு சென்றனர் கணவனும் மனைவியும்.

மலர்ப்படுக்கையில் விழுந்திருந்தால் மறுநாள் சந்தோசமாக எழுந்திருக்கலாம்.

அவர்கள் விழுந்ததோ மரணப் படுக்கையில் - எழுந்திருக்கவேயில்லை.

வாலிபத்தைக் கடந்து வயோதிபத்தின் வாசலில் நின்ற 66வயதுப் பெண் ஒருவர் வெளியே வேடிக்கை பார்க்க ஜன்னலைத் திறந்தார்.

தேனி போன்ற வண்டொன்று வந்து கொட்டியது. சுயநினைவை இழந்த அந்தப் பெண் ஒரு மணி நேரத்தில் உயிர் துறந்தார்.

16 வயது மாணவன். உதைப்பந்தாட்ட வீரன்.

உடல் பரிசோதனைக்காக மருத்துவர்களிடம் சென்றான்.

ஆரோக்கியத்துக்கு ஒரு குறைவும் இல்லையென்று மருத்துவர்கள் சொன்னார்கள்.





மகிழ்ச்சியோடு வீடு திரும்பியவன் இறந்து போனான்.

மாரடைப்பே காரணம் என்றார்கள் மருத்துவர்கள்.

இவ்வாறு 33 மரணங்கள் மூன்றாண்டுகளுக்குள் நிகழ்ந்து விட்டன.

குடியிருப்பாளர்கள் சாவு வந்து தம் கதவையும் தட்டும் என்று பயத்தில் விறைத்துப் போய் இருக்கிறார்கள்.

இயற்கை மரணங்கள் தான். கவலைப் படத் தேவையில்லை. பயப்பட அவசியம் இல்லை என்கிறது பொலிஸ்.

குடியிருப்பாளர்கள் அதை நம்பவில்லை. மந்திரவாதி ஒருவரை அழைத்து விசயத்தைச் சொல்லி யோசனை கேட்டார்கள்.

1950ம் ஆண்டில் அப்பகுதியில் கொலை செய்யப்பட்ட இளம் பெண் ஒருவரின் ஆவியே மரணங்களுக்கு காரணம் என்று சொல்லி விட்டார் மந்திரவாதி.

ஏற்கனவே பயந்து கொண்டிருந்த குடியிருப்பாளர்களை மந்திரவாதி மேலும் மிரட்டித்தொலைத்து விட்டார்.

விஞ்ஞானம் வளர்ந்துள்ள போதிலும் ஆவிப் பயம் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது! ■



# கூத்தரித்த கூடி ஜோக்ஸ்

நீலா: ஏ.எம்.ராஜாவின் பெயர் மாலையில் எப்படியிருக்கும்?
மாலா: பி.எம் ராஜா.

■

ரகீம்: மெதுவான பந்து வீச்சாளராக இருப்பதில் ஒரு நன்மை இருக்கிறது?
கரீம்: எப்படி?
ரகீம்: போட்ட பந்து பிடிக்கவில்லை என்றால் அதன் பின்னால் சென்று பிடித்து விடலாமே.

■

நீலா: ஃப்ராங்ளின் மின்சாரத்தை கண்டு பிடித்தவுடன் எப்படி இருந்தார்?
மாலா: ஷாக் அடித்தது போல.

■

சிப்பாய்: ஐயோ என் கை போச்சே.
அதிகாரி: ஏனப்பா இதற்குப் போய் கத்துகிறாய்? அங்கே பார், தலை போனவனே பேசாமல் இருக்கிறான்.

■

ரகீம்: கிரிக்கெட் விளையாடுகிறவர்கள் அனைவரும் கோழைகள்.
கரீம்: ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?
ரகீம்: பின்னே என்ன? பந்தை அடித்துவிட்டு ஓடுகிறார்களே!

■

நண்பர்: அவர் எதையும் எண்ணிப் பார்த்துவிட்டுத்தான் ஒரு முடிவுக்கு வருவார்?
மற்றவர்: அப்படியா? அவர் எங்கே வேலை பார்க்கிறார்?
நண்பர்: வங்கியில் காசாளராக வேலை பார்க்கிறார்.

■

ரகீம்: எதை ஓட்டுவதற்கு பயிற்சி தேவையில்லை?
கரீம்: ஈயை.

■

நீலா: வாலுள்ள முனிவர் யார்?
மாலா: வான்மீகி.

■

ரகீம்: மலையில் இருந்து கொட்டும் நீர் எப்போது கொட்டுவதை நிறுத்தும்?
கரீம்: மலையிலிருந்து கீழே வந்தவுடன்.

■

நீலா: சுண்ணாம்பு அடிக்க மிகவும் அவசியமானது எது?
மாலா: சுவர்.

■

அவன்: பில் பணத்தை முதலிலேயே கட்டி விடச் சொல்லுகிறீர்களே ஏன் டாக்டர்?
டாக்டர்: உங்களுக்கு செய்யப் போவது ஆபத்தான ஆபரேசன்.


■

# அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:**

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



**இலக்கம்-08**

**சுப்பர் ஸ்டார் சந்திப்பு**

காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-..............................

படத்தின் இயக்குநர் பெயர்:-..............................

ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-..............................

இப்படம் வெளியான ஆண்டு:-..............................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.

# தலைநகரில் டிஸ்கோ மோகமும்- சில கோலங்களும்!

**நகர் நடப்பு**

**-ஒற்றன்-**

திருமலை சென்று வந்த களைப்புத்தீரத் தூங்கினோம்.

புதிய உற்சாகம் வந்து 'புறப்படு வெளியே' என்று தூண்டுதல் தந்தது.

நமது தகவல் வங்கியாளரைச் சந்தித்து அவரிடம் உள்ளதைக் கறக்கும் எண்ணம் ஏற்பட்டது.

எழுந்து-குளித்து, தோய்து, உலர்ந்து அயண்பண்ணிய ஆடைதரித்துப் புறப்பட்டோம்.

வழக்கம் போல் மினி பஸ்சில் திணித்து, சன அலையை எதிர்த்துப் போராடி இறக்கம் வர பலம் கொண்டமட்டும் இழுத்து வழி ஏற்படுத்தி வெளியே குதித்தோம்.

நமது அதிஷ்டம். தகவல் வங்கியாளர் வீட்டில் இருந்தார். ஆறுதலாக இருந்து தனது கடைக்குட்டியோடு விளையாடிய படி ரி.வி.யில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்தார்.

எம்மைக் கண்டதும் அவசரமாக எழுந்து தன்னை பிசியாகக் காட்டிக் கொள்ள அவர் பட்டபாடு பரிதாபமாக இருந்தது.

"வாரும். உமது நல்ல நேரம். அரவிந்த டி சில்வா அடிக்கிறதை 5 நிமிசம் பார்த்துட்டு போகலாம் என்று ஆசை. அதுதான் இருந்தனான். இன்னும் ஒரு ஐந்து நிமிசம் லேட்டா வந்திருந்தீர் என்று வையும். ஏமாற்றத்தோட திரும்பியிருப்பீர்"

சொல்லிக் கொண்டே ஒரு குட்டி ரஜனி ஸ்ரையிலில் மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தார். அங்கு மணிக்கூடு இல்லாதது வேறு விசயம்.

"வாரும் கடையடிக்குப் போய்க்கொண்டே பேசலாம்" என்றார்.

முறியலுக்கு திட்டம் போடுகிறார் என்று தெரியும். என்ன செய்வது உடன்பட்டு கூடவே சென்றோம். எமது பொக்கற் நிலவரத்தை மனசுக்குள் நினைத்துப் பார்த்தபடி நடந்தோம். கொழும்பில் தமிழ் பேசும் சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப புதிய சைவக் கடைகளும் புதிதாக முளைத்து வருகின்றன.

தமிழ் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட சமையற்காரர்கள் ருசியாக தயாரிக்கும் அயிட்டங்கள் என்று சொல்லப்படுகிறது. யார் சமையலறைக்குள் போய் எட்டிப்பார்ப்பது?

சில கடைகள் திறக்கப்பட்டு முதல் இருவாரங்களுக்கு சுவையில் வெளுத்து வாங்குவதுண்டு. பின்னர் புதுச் செருப்புக் கடிக்கும் என்ற கதைதான். விதிவிலக்கான கடைகளும் உண்டு.

தகவல் வங்கியாளர் புதிய கடை ஒன்றுக்குள் புகுந்தார்.

கவுண்டரில் இருந்தவர் தகவல் வங்கியாளரைப் பார்த்து நட்போடு சிரித்தார்.

நம்மைப்போல வேறுசிலரின் உபயத்திலும் அன்னார் இங்கு வந்து போவது வழக்கம் என்று விளக்கம் பெற்றோம்.

தானே ஓடர் செய்தார். காசு கொடுக்கப் போகிறவன் நான். என்னிடம் ஒரு அபிப்பிராயம் கூடக் கேட்கவில்லை.

ஓடர் செய்துவிட்டு உடனே நம்மை நோக்கி ஒரு கேள்வியை எறிந்தார்.

"கொழும்பில் பரவிவரும் டிஸ்கோ மோகம் பற்றி உமக்கு என்ன தெரியும்?"

தெரியும் என்று சொன்னால் அவருக்குப் பிடிக்காது. எல்லாம் தனக்குத் தெரியும் என்று காட்டுவதில்தான் அவருக்குப் பிரியம். எனவே-

"இதுவரை தெரியாது" என்று பதில் சொன்னோம்.

மீசை முறுக்காத குறையாக ஒரு அலட்சிய சிரிப்பை இறக்கிவிட்டார். பின்னர் சர்வரைக் கூப்பிட்டு,

"கூல் வோட்டர் கொண்டுவந்து வையப்பா. நீர் எல்லாம் ஒரு ரிப்போர்ட்டர். உமக்கெல்லாம் ஏன் ஐயா இந்தத் தொழில்?" கொண்டுவந்து வைக்கப்பட்ட கூலான தண்ணீரை உள்ளே கொட்டினார்.

"கேளும். டிஸ்கோ நடனக் கிளப்புகளில என்ன நடக்குது எண்டு அறிஞ்சா தலை சுத்தும் உமக்கு. ஜிலுஜிலுவும் உண்டு. ஜில் ஜில் சமாச்சாரமும் உண்டு. சொல்லட்டோ?"

'சொல்லுங்கள்' என்றோம் அவசரமாக.

சொல்லத் தொடங்கினார். நமது தகவல் வங்கியாளர். அவர் சொன்னது சரிதான்.

நமது தலை சுற்றத் தொடங்கியது.

(மறுவாரம் தொடர்வோம்) ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## ஆன்மீகம்

### அடுத்தவரை விமர்சிக்காதே!

நமக்குச் சம்பந்தமில்லாத போதும் அடுத்தவர் விசயத்தை விமர்சிப்பதையும், ஊர் வம்பு பேசி உளம் மகிழ்வதையும் நூற்றுக்கு நூறு வன்மையாகக் கண்டிக்கிறது இந்துமதம்.



ஒரு சமயம் மூன்று பேர் தவம் செய்தார்கள். தேவேந்திரன் தோன்றி "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டபோது, "வானத்தில் எங்கும் சஞ்சாரம் செய்யத்தக்க விமானங்கள் வேண்டும்," என்று கேட்டார்கள்.

தேவேந்திரனும் மூன்று விமானங்களைக் கொடுத்தார். கூடவே, "நீங்கள் பாவம் செய்யும் போது, இந்த விமானங்கள் பறக்காது போய்விடும்," என்றார்.

அம்மூவரும் ஆளுக்கு ஒரு விமானத்தில் ஏறி விருப்பம் போல் எங்கும் சுற்றித் திரிந்தார்கள்.

ஒரு சமயம் மூவரும் ஒன்றாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

வழியில் ஒரு காட்சி.

ஒரு கருடப் பறவை, பாம்பை மூக்கால் கொத்தித் தின்று கொண்டிருந்தது.

அதைப் பார்த்த ஒருவன் சொன்னான், "ஐயோ அக்கிரமம், அநியாயம், காலமே கெட்டுப் போய் விட்டது. பெருமானுக்கு வாகனமாக இருந்து கொண்டு இப்படி ஒரு கொலைத் தொழிலைச் செய்யலாமா?" என்று சொல்லிக் கொண்டிருந்தவன், "ஏ, கருடா, இது மகாபாவம், சாப்பிடாதே" என்று கூவினான்.

உடனே பறந்து கொண்டிருந்த அவன் விமானம் கீழே வீழ்ந்தது.

அடுத்தவன் பார்த்தான், "கருடா நன்றாகச் சாப்பிடு, சாப்பிடு" என்று கூவினான்.

அவன் பறந்து கொண்டிருந்த விமானமும் கீழே விழுந்தது.

மூன்றாமவன், இது ஏனடா வம்பு என்று வாயே திறக்கவில்லை. அவனுக்கும் அவன் விமானத்திற்கும் எந்த ஆபத்தும் ஏற்படவில்லை.

### சத்துருக்களைச் சிநேகியுங்கள்

சாதாரண மனிதர்கள் தான் இயேசுவின் வார்த்தைகளைப் பின்பற்ற சிரமப்படுகிறார்கள் என்றால், இயேசுவின் சீடர்களே அவரது வார்த்தைகளைப் பின்பற்ற சிரமப்படுகிறார்கள் என்பதை வேதத்தில் பார்க்கலாம்.

இயேசு கிறிஸ்துவை யூதாஸ் காட்டிக் கொடுக்கும் போது, இராயப்பர் கோபமடைகிறார். அவர் மனம் தன் நாயகனை, வீழ்த்த வருபவர்களை வீழ்த்த வேண்டும் என்று துடிக்கிறது. உறைவாளை உருவினார். பிரதான ஆசாரியனின் வேலைக்காரர்களில் ஒருவனின் வலது காதை வெட்டினார். நாயகன் இயேசுவோ இது கண்டு துடித்துப் போனார். இராயப்பரைக் கடிந்து கொண்டார். வெட்டுண்ட வேலைக்காரனின் வலது காதைத் தொட்டுச் சுகப்படுத்தினார். அது மட்டுமல்ல, தன்னைக் காட்டிக் கொடுக்க வந்த யூதாஸை அவர் நன்கு அறிவார். உடனிருந்தே, வீழ்த்தத்துடிக்கும் சீடனல்லவா? இயேசுவின் மனதில் வக்கிரம் தோன்றவில்லை. அவர் நினைத்திருந்தால், தனது வல்லமைமிக்க வார்த்தைகளாலே யூதாஸை வீழ்த்தியிருக்க முடியும். ஆனால் இயேசு, தன்னைக் காட்டிக் கொடுக்கும் யூதாஸை அன்பொழுக அழைக்கிறார். "சிநேகிதனே!" **(மத்தேயு 26:50)**

மரணத்தின் வாயிலில் தன்னைப் பரிகாசம் செய்து சித்திரவதை செய்பவர்கள் மீதும் அவர் வெகுண்டு பழிவாங்கத் துடிக்கவில்லை. "பிதாவே இவர்களை மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே...." என்றுதான் பிரார்த்தனை செய்தார். சாபமிடவில்லை. ஆனால் முடிவிலோ இயேசு மரணத்தை வென்றார்– உயிர்த்தெழுந்தார்.

வாழுகின்ற நாட்களில் ஒவ்வொரு மனிதனும் தன்னை விரோதி என்றோ, பகைவன் என்றோ பாவிக்கும் மனிதனுக்கு, நன்மை செய்வானேயானால், முடிவில் அவனுக்கும் நன்மை விளைவதோடு, அன்பு ஸ்திரப்படும். இறையருள் கிட்டும்.

### "நபிகள் நாயகத்தின் பொன் மொழிகள்"

1. எந்த நாளும் உயிருடன் இருப்போம் என்ற எண்ணத்துடன் இவ்வுலகக் காரியங்களில் ஈடுபடுங்கள். நாளைக்கே இறந்து விடுவோம் என்ற எண்ணத்துடன் மறுமைக்குரிய கருமங்களில் ஈடுபடுங்கள்.
2. பசித்தோர்க்கு உணவளியுங்கள். நோயாளிகளிடம் சுகம் விசாரியுங்கள். அநீதியான முறையில் கைதியாக இருப்பவர்களை விடுதலை செய்யுங்கள்
3. எவனிடம் பணிவு இருக்கிறதோ அவன் உயர்வு அடைவான். எவனிடம் கர்வம் இருக்கிறதோ அவன் தாழ்ந்து விடுவான்.
4. ஏழைகள் கலந்து கொள்ளாமல் பணக்காரர்கள் மாத்திரம் பங்கு கொள்ளும் விருந்தில் இறைவனின் சாபம் இறங்கும்.

– தொகுப்பு: எம்.எச்.எம். ஹாரித்–

## களம் கண்டவுடன் சதம் அடித்தவர்கள்!

ஒவ்வொரு கிரிக்கெட் வீரரினதும் இலட்சியக்கனவாக இருப்பது, தான் விளையாடும் போட்டியில் சதம் அடிப்பது என்பது.

கிரிக்கெட் வீரர் ஒருவர் தான் விளையாடும் முதல் போட்டியிலேயே சதம் அடிப்பதானது ஓர் உயர்ந்த அந்தஸ்த்தாகக் கருதப்படும். பெருமைகூடும். புகழ் சேரும். கிரிக்கெட் வரலாற்றிலேயே 59 பேர் முதல் டெஸ்டில் சதம் அடித்துள்ளனர். இவர்களில் பதினான்கு இங்கிலாந்து வீரர்களும், பத்து மேற்கிந்தியத் தீவுகள் வீரர்களும், ஒன்பது இந்திய வீரர்களும்,பதினைந்து அவுஸ்திரேலிய வீரர்களும், நான்கு நியூசிலாந்து வீரர்களும், மூன்று பாகிஸ்தானிய வீரர்களும், இரண்டு இலங்கை வீரர்களும், தென்னாபிரிக்க, சிம்பாப்வே வீரர்கள் தலா ஒவ்வொருவரும் அடங்குவர்.

இந்தச் சாதனைகளுக்குள் சில சாதனைகளும் உள்ளன.

★ முதல் டெஸ்டில் இரண்டு இனிங்ஸ்களிலும் சதமடித்துள்ளவர் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த லோரன்ஸ் ரோவ் ஆவார். (214, மற்றும் ஆட்டமிழக்காது 100)

★ முதல் டெஸ்டில் சதமடித்து சாதனை படைத்த ஒரே தந்தை-மகன் இந்தியாவின் லாலா அமர்நாத், சுரேந்தர் அமர்நாத்.

★ முதல் மூன்று டெஸ்ட்களிலும் தொடர்ச்சியாகச் சதமடித்தவர் இந்தியாவின் தற்போதைய அணித்தலைவர் முகமட் அசாருதீன்.

★ முதல் டெஸ்டில் இரண்டாவது இனிங்சில் சதமடித்துள்ளவர்கள், இங்கிலாந்தைச் சேர்ந்த டாக்டர். டபிள்யூ.ஜி.கிரேஸ், இளவரசர் ரஞ்சித் சிங் கிரஹாம் தோர்பே, மற்றும் இந்தியாவின் குண்டப்பா விஷ்வநாத் ஆகியோராவார்.

★ முதல் டெஸ்டில் இருநூறுக்கும் மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றுள்ளவர்கள் மூவர். இங்கிலாந்து வீரர் ஆர்.இ.பாஸ்டர் (287), மேற்கிந்தியத் தீவுகள் வீரர் லோரன்ஸ் ரோவ், (214), மற்றும் இலங்கையின் பிரண்டன் குறுப்பு (201 ஆட்டமிழக்காது)

### முதல் டெஸ்டில் சதமடித்து சாதனை படைத்துள்ள வீரர்கள் பட்டியல்:

| பெயர்/நாடு | ஓட்டங்கள் | எதிரணி | இடம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 1.சி. பென்னர்மென்-அவுஸ்திரேலியா | 165× | இங்கிலாந்து | மெல்பேர்ன் | 1876/77 |
| 2.டபிள்யூ.ஜி.கிரேஸ்- இங்கிலாந்து | 152 | அவுஸ்திரேலியா | ஓவல் | 1880 |
| 3.எச்.கிரஹாம்- அவுஸ்திரேலியா | 107 | இங்கிலாந்து | லோட்ஸ் | 1893 |
| 4.கே.எஸ்.ரஞ்சித் சிங்ஜீ- இங்கிலாந்து | 154× | அவுஸ்திரேலியா | மாஞ்ச்செஸ்டர் | 1896 |
| 5.பி.எவ்.வோனர்- இங்கிலாந்து | 132× | தென் ஆபிரிக்கா | ஜோகான்ஸ் பேர்க் | 1898/99 |
| 6.ஆர்.ஏ.டோவ்- அவுஸ்திரேலியா | 104 | இங்கிலாந்து | மெல்பேர்ன் | 1901/02 |
| 7.ஆர்.இ.பாஸ்டர்- இங்கிலாந்து | 287 | அவுஸ்திரேலியா | சிட்னி | 1903/04 |
| 8.ஜி.கன்- இங்கிலாந்து | 119 | அவுஸ்திரேலியா | சிட்னி | 1907/08 |
| 9.ஆர்.டி.ஹோடிகன்- அவுஸ்திரேலியா | 116 | இங்கிலாந்து | அடிலெய்ட் | 1907/08 |
| 10.எச்.எல்.கொலின்ஸ்- அவுஸ்திரேலியா | 104 | இங்கிலாந்து | சிட்னி | 1920/21 |
| 11.டபிள்யூ.எஸ். போன்ஸ்போட் -அவுஸ்திரேலியா | 110 | இங்கிலாந்து | சிட்னி | 1924/25 |
| 12.ஏ.ஏ. ஜக்ஸன்- அவுஸ்திரேலியா | 164 | இங்கிலாந்து | அடிலெய்ட் | 1928/29 |
| 13.ஜி.ஏ.ஹட்லே- மேற்கிந்தியத்தீவுகள் | 176 | இங்கிலாந்து | பிரிட்ஜ் ரவுன் | 1929/30 |
| 14.யூ.இ.மில்ஸ்- நியூசிலாந்து | 117 | இங்கிலாந்து | வெலிங்ரன் | 1929/30 |
| 15.நவாப் பட்டோடி-இங்கிலாந்து | 102 | அவுஸ்திரேலியா | சிட்னி | 1932/33 |
| 16.பி.எச்.வலன்ரைன்-இங்கிலாந்து | 136 | இந்தியா | பம்பாய் | 1933/34 |
| 17.லாலா அமர்நாத்-இந்தியா | 118 | இங்கிலாந்து | பம்பாய் | 1933/34 |
| 18.பீ.ஏ.கிப் -இங்கிலாந்து | 106 | தென்ஆபிரிக்கா | ஜோகான்ஸ்பேர்க் | 1938/39 |
| 19.எஸ்.சி.கிரிபித்-இங்கிலாந்து | 140 | மேற்கிந்தியத்தீவுகள் | போட் ஒவ் ஸ்பெயின் | 1947/48 |
| 20.ஏ.ஜி.கன்டியாம்-மேற்கிந்தியத்தீவுகள் | 112 | இங்கிலாந்து | போட் ஒவ் ஸ்பெயின் | 1947/48 |
| 21.ஜே.டபிள்யூ.பேர்க்-அவுஸ்திரேலியா | 101× | இங்கிலாந்து | அடிலெய்ட் | 1950/51 |
| 22.பி.பி.எச்.மே- இங்கிலாந்து | 138 | தென்ஆபிரிக்கா | லீட்ஸ் | 1951 |
| 23.ஆர்.எச்.சோதான்-இந்தியா | 110 | பாகிஸ்தான் | கல்கத்தா | 1952/53 |
| 24.பி.எச்.பாய்ரதேவ்- மேற்கிந்தியத்தீவுகள் | 115 | இந்தியா | போட்ஒவ் ஸ்பெயின் | 1952/53 |
| 25.ஒ.ஜி.ஸ்மித்-மேற்கிந்தியத்தீவுகள் | 104 | அவுஸ்திரேலியா | கிங்ஸ்ரன் | 1954/55 |
| 26.ஏ.ஜி. கிரிபால் சிங்-இந்தியா | 100× | நியூசிலாந்து | ஹைதராபாத் | 1955/56 |
| 27.சி.சி.ஹண்ட்-மேற்கிந்தியத்தீவுகள் | 142 | பாகிஸ்தான் | பிரிட்ஜ் ரவுன் | 1957/58 |
| 28.சி.ஏ.மில்டன்-இங்கிலாந்து | 104 | நியூசிலாந்து | லீட்ஸ் | 1958 |
| 29.அப்பாஸ் அலி பெய்க்-இந்தியா | 112 | இங்கிலாந்து | மான்செஸ்டர் | 1959 |

(×ஆட்டமிழக்காது)

(வரும் வாரமும் வரும்)

## ஸ்போர்ட்ஸ்





### தோல்விக்கு பின்னர் சுவையான மழுப்பல்!

பத்தாவது விம்பிள்டன் ஒற்றையர் சாம்பியன் பட்டத்தை வெல்ல களத்தில் முனைப்புடன் இறங்கியவர் மார்டினா நவரத்திலோவா.

மாட்டினா பற்றி ஏகப்பட்ட சர்ச்சைகள். மார்டினா தனது தோழியுடன் கொண்டிருந்த உறவுகள் பற்றி பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளிவிட்டன.

எல்லாவற்றிலிருந்தும் மீண்டு களம்புகுந்த மாட்டினா அரை இறுதியிலேயே தோல்விகண்டு களம்விட்டு வெளியேறினார்.

விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்ற கதை மாட்டினாவுக்கும் பொருத்தம்.

தனது தோல்விக்கு மார்டினா கூறும் காரணம் சுவையானது:

"மோனிகா செலஸ் ஆடியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். முன்னணி ஆட்டக்காரர்கள் ஆடாத அல்லது காயம் பட்டுள்ள நிலையில் நடக்கும் போட்டிகளில் ஆடி ஜெயிப்பதில் எனக்கு உடன்பாடில்லை" என்று இப்போது கூறித் திரிகிறார் மாட்டினா நவரத்திலோவா. ■

### விளையாட்டுலகின் விளையாட்டுப் பெண்!

டென்னிஸ் உலக பெண் ஆட்டக்காரர்களில் கவர்ச்சி மற்றும் கிசு கிசு விவகாரங்களில் அடிக்கடி வந்து போகும் பெயர் சபாடினி.

பத்திரிகைகளுக்கு கவர்ச்சியாகப் போஸ் கொடுப்பதில் சபாடினிக்கு அலாதிப் பிரியம்.


ஆர்ஜென்டினாவின் இந்த அழகு வீராங்கனை டென்னிசில் சாதிக்கத் தவறியவற்றையெல்லாம் கவர்ச்சியால் சாதிக்க கனவு காண்கிறார்.

கவர்ச்சியில் முதலாமிடத்தை பிடித்தது போல விம்பிள்டன் சாம்பியனாக வந்து அதிலும் முதலாமிடத்தைப் பிடிப்பேன் என்கிறார்.

அடுத்த விம்பிள்டனுக்காக இப்போதே தன்னைத் தயார்ப்படுத்தி வருவதாகக் கூறிக்கொள்கிறார்.

சபாடினி திடகாத்திரமானவர்தான். ஒவ்வொரு 'ஷொட்'களையும் பலமாக இறக்குபவர்தான். ஆனால் கவனக்குறைவும், நம்பிக்கையின்மையும் அவரது மிகப் பெரிய பலவீனங்கள்.

வேறு திசைகளில் கவனம் செலுத்துவதை நிறுத்தினால் சபாடினி முன்னுக்கு வரக்கூடும்.





### பெண் என்றால் அலட்சியமா? முடியும் என்று முகம் உயர்த்துகிறார்கள்!

விளையாட்டரங்கிலும் பெண்கள் தமது சமத்துவத் துக்காகப் போராட வேண்டியிருக்கிறது.

டென்னிஸ் விளையாட்டில் ஆண் ஆட்டக்காரர்களுக்கு சமமாக தமக்கும் பரிசுத் தொகை வேண்டும் என்று குரல் கொடுக்க வேண்டியிருக்கிறது.

சமீபத்தில் இங்கிலாந்தில் பெண்களுக்கான உலகக் கிரிக்கெட் கோப்பைக்கான போட்டி நடந்தது.

பார்வையாளர்கள் மிகவும் குறைவாகவே வந்திருந்தனர்.

கேட்டால், ஆண்கள் போல் பெண்கள் ஆட்டம் வேகமோ விறுவிறுப்போ இல்லை என்று சொல்லுகிறார்கள்.

பெண்களுக்கு அதிக சுதந்திரம் உள்ளதாகக் கூறப்படும் அமெரிக்காவிலும் அதே கதைதான்.

கால்பந்து வீராங்கனை மிச்செலி அகர்ஸ் அமெரிக்காவில் தமக்கு உற்சாகம் தரப்படுவது போதாது என்கிறார்.

குறுகிய அபிப்பிராயங்கள் பெண்களின் விளையாட்டு ஆர்வத்திற்கு தடைக்கற்களாக இருப்பதாகக் கூறுகிறார்.

சில மாதங்களுக்கு முன்னர் சுவீடனில் பெண்களின் கால் பந்து விளையாட்டு சம்பந்தமான கருத்தரங்கு நடைபெற்றது.

40க்கும் மேற்பட்ட நாடுகளின் பெண் பிரதிநிதிகள் அதில் கலந்து கொண்டனர்.

இரு நாட்கள் கருத்தரங்கு நடைபெற்றது. ஆண்களுக்குச் சமமாக கால்பந்தாட்டத்தில் பெண்களுக்கு பயிற்சி கொடுப்பது பற்றி அங்கு ஆராயப்பட்டது.

சில நாடுகளில் பெண்கள் கால்பந்தாட்டத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதையும் கருத்தரங்கில் சில பிரதிநிதிகள் கண்டித்தனர்.

கால்பந்தாட்டத்தில் பெண்கள் அணிகள் சாதனை புரியக் காத்திருக்கின்றன. எம்மாலும் முடியும் நம்புங்கள் என்கிறார்கள்.

பெண்களுக்கான முதலாவது கால்பந்தாட்ட உலக சாம்பியன்ஷிப் போட்டி 1991ல் சீனாவில் நடைபெற்றது.

அமெரிக்க அணி சாம்பியன் பட்டம் வென்றது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்


தரம் குறையாத தங்க-வைர நகைகள்.
எழிலூட்டும் எடுப்பான தயாரிப்புக்கள்.
குறித்த நேரத்தில் ஓடரை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு.

அருள் ஜுவலர்ஸ்

இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொ.பேசி 438331




## ஏலத்திலும் ஒரு சாதனை!

சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் 1989 ஏப்ரல் 3ம் திகதி விண்ட்சர் கோமகளின் தங்க நகைகள் ஏலத்திற்கு வந்தன. ஏலமானதால் திரண்ட தொகை உலக சாதனையாகிவிட்டது. 31,380197 பவுண்கள் வருவாய். அவ்வாறு ஏலத்திற்கு வந்த தங்க ஆபரணம் ஒன்று தான் படத்தில் இருக்கிறது.



## விலக்குது பாரு உலகு! சிக்குபுக்கு - சிக்குபுக்கு ரயிலு!!

காதலர்கள் இல்லையென்றால் நாட்டின் தபால்துறை நஷ்டமாகிவிடும் என்றார் வைரமுத்து. இந்த இரயில் இல்லையென்றால் காதலர்கள் இதயங்கள் காயமாகிவிடும். அதிவேகமாக தபால்களை கொண்டு சேர்க்கிறது இந்த நீண்ட ரயில் வண்டி. அமெரிக்காவின் ... [illegible] ... தபால் ... [illegible] ... ஒண்டிவீரன்!



## சாப்பாட்டு ராமப் புழு!

பொலிப்பெமஸ் என்பது இந்தப் பூச்சியின் தாயின் பெயர்.

தாயின் வயிற்றில் இருந்து வந்தவுடன் சாப்பாட்டு விசயத்தைக் கவனிக்கத் தொடங்கிவிடுகிறது.

56 நாளில் இது சாப்பிட்டு முடித்த இலைகளின் எடையைக் கேளுங்கள். சத்தியமாய் இது ஒரு சாப்பாட்டு ராமன் என்று சொல்வீர்கள்.

தன் உடல் எடையைப் போல 86,000 மடங்கு அதிகமான இலைகளை தின்று தீர்த்துவிட்டது. இப்புழுவின் சாப்பாட்டு ராம சாதனையும் உலக சாதனைப் புத்தகத்தில் பதிவாகியிருக்கிறது. புகழ்பெற்ற புழு!

வாரமலர் தினமுரசு

## உள்ளி-கோழிக் கறி

பொதுவாக வயிற்றிலேற்படும் வாயுத் தொல்லை, அஜீரணம் ஆகியவற்றை உள்ளி வெள்ளைப்பூடு சீர்படுத்தி விடும். நாம் உண்ணும் உணவில் செறிவைச் சமப்படுத்துவதும் உள்ளியால் முடியும். தமிழர்களின் அன்றாட உணவில் பூண்டு மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. மணமும் சுவையும் கொண்ட உள்ளி கோழியுடன் இணையும் போது இரண்டிலே கலவையும் உச்ச நிலையில் அமைகின்றன.

இன்று உள்ளி-கோழிக் கறி செய்யும் முறையைப் பார்ப்போம். கறி என்று நாம் கூறினாலும் இதில் தண்ணீர் பிடிப்பு (ஆணம் அல்லது சொதி) குறைவாகவே இருக்கும். சாதத்துடன் சேர்த்து உண்பதற்கு ஏற்ற அருமையான உணவு இது.

தேவையானவை:

| | |
|---|---|
| கோழி இறைச்சி தோலுரித்து துப்பரவாக்கிக் கழுவியது- | 1 இறாத்தல் |
| உள்ளி- | 8 |
| கரம் மசாலா- | 1 தே.கரண்டி |
| மிளகு தூள்- | 1 தே.கரண்டி |
| கொத்தமல்லித் தூள்- | 1 மே.கரண்டி |
| பம்பாய் வெங்காயம் (சிறவெங்காயமெனில்-10) | 2 நடுத்தரமானது |
| தக்காளிப் பழம்- | 3 |
| இஞ்சி- | 1" துண்டு |
| தயிர்- | 1 மே.கரண்டி |
| எலுமிச்சம்பழச் சாறு- | 1 மே.கரண்டி |
| பெருஞ்சீரகம்- | 1 தே.கரண்டி |
| மஞ்சள் தூள்- | 1 தே.கரண்டி |
| எண்ணெய்- | 2 மே.கரண்டி |
| உப்பு- | அளவாக |
| கறிவேப்பிலை- | அளவாக |

செய்முறை:

கோழி இறைச்சியை சுத்தம் செய்து அளவான துண்டுகளாக்கிக் கொள்ளவும். உள்ளியையும் மேல் தோல் நீக்கி சுத்தம் செய்து அம்மியில் வைத்து நசித்துக் கொள்ளவும். இஞ்சி, பெருஞ்சீரகம் ஆகியவற்றையும் உள்ளியுடன் சேர்த்து அரைத்தெடுக்கவும். மிளகாய்த் தூள், கொத்தமல்லித் தூள், கரம் மசாலா ஆகியவற்றை அதே அம்மியில் வைத்து அரைக்கும் போது ஏற்கனவே அரைத்த பூண்டு முதலானவற்றின் கலவையையும் சேர்த்து அரைக்கவும். இக்கலவையை இறைச்சியின் மீது கொட்டி நாலைந்து தண்ணீர் விட்டு நன்றாகக் கிளறவும்.

அடுப்பில் இரும்புச்சட்டி பாத்திரத்தை வைத்து எண்ணெயை சூடாக்கவும். அடுப்பின் சூட்டைத் தணித்து வெங்காயத்தை சிறு துண்டுகளாக வெட்டி எண்ணெயில் போடவும். கறிவேப்பிலையையும் போடவும். வெங்காயம் பதமாகப் பொரிந்து வரும் போது இறைச்சிக் கலவையை எண்ணெயில் கொட்டவும். ஏலக்காயையும் பொடி செய்து போடவும். (கறுவாப்பட்டை 1/2 அங்குலம், கிராம்பு 1 ஆகிய வற்றையும் பொடியாக்கி அவசியமானால் இத்துடன் சேர்க்கலாம்.) தேவைப்படுமாயின் சிறிதளவு தண்ணீர் சேர்க்கலாம். தக்காளிப் பழத்தை குறுக்காக வெட்டி இதில் சேர்க்கவும். இப்பொழுது இதனை மூடி வைத்து 10 நிமிடமாவது திறந்து கரண்டி அல்லது அகப்பையால் கிளறி விட்டு தயிரையும் எலுமிச்சம் பழச்சாறை யும் ஊற்றவும். மீண்டும் மூடி மேலும் 10 நிமிடம் சென்றதும் திறந்து உப்பு விட்டு மேலும் 5 நிமிடங்கள் அடுப்பில் இருக்க விட்டு இறக்கி சோற்றுடன் பரிமாறலாம்.



## புகார்களை புறங்கையால் தள்ளு!

உலகம் வியக்கும் பாடகர் மைக்கல் ஜாக்சன்.

பல கோடி ரசிகர்கள்-ரசிகைகள். ஜாக்சன் என்றால் அவர்களுக்கு உயிர். இப்போது மைக்கல் ஜாக்சனின் அவனுற புகழ்மீது ஒரு கறை விழுந்திருக்கிறது. ஜாக்சன் சிறுவன் ஒருவனோடு முறைகேடாக நடந்துகொண்டதாக கிளம்பிய புகார் அவரது ரசிகர்களை அதிர வைத்திருக்கிறது புகார்கள். கட்டுக் கதைகள் என்று சொல்லும் ஜாக்சன் அவற்றைப் பற்றி கவலைப்படவில்லை என்கிறார். ஆனால் அவரது ரசிகர்கள் கவலைப்படுகிறார்கள்.

